# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 16 Issue - 11

நவம்பர் 2023 - ரபியுல் ஆகிர் - ஜமாஆத்துல் அவ்வல் 1445




ஹமாஸ்/இஸ்ரேல் போர்

## அக்டோபர் 7ஆம் தேதி நடந்தது என்ன?

## இஸ்ரேலை ஹமாஸ் முட்டாளாக்கியது எப்படி?


26/11 மும்பை தாக்குதல்!

## கர்கரேயின் உடலில் பாய்ந்த குண்டு யாருடையது?

எஸ்.எம்.முஸ்ஷ்ரிஃப் IPS அவர்களின் ஆய்வு

## இஸ்ரேல் ஒரு பயங்கரவாத நாடு – காந்தியடிகள்

# இப்போது பரபரப்பான விற்பனையில்...!




**நூலைப்பெற : 8148129887 / 7401213394 / 7358278146**

**வேர்கள் வெளியீட்டகம் : 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600001**

بسم الله الرحمن الرحيم

முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.

(அல்குர்ஆன் : 5:08)

# போர் தொடங்கிய

## அக்டோபர் 7 அன்று நடந்தது என்ன?

கவர் ஸ்டோரி - பக்கம் 04

**இஸ்ரேலிய உளவுத்துறையை ஹமாஸ் முட்டாளாக்கியது எப்படி?................08**

**ஹமாஸ் - ஹிஸ்புல்லாஹ் பொய்களும், உண்மைகளும்..........12**

**பாலஸ்தீன் பற்றி காந்தி சொன்னதென்ன?.................16**

**ஹமாஸின் அல்காஸ்ஸம் படைப்பிரிவு வரலாறு.....................20**

**ஹமாஸ்/இஸ்ரேல் போரை வைத்து இந்தியாவில் வகுப்புவாத மோதல்களை திட்டமிடும் பாஸிஸ்டுகள்................24**

**26/11 மும்பை தாக்குதல்**

**கர்கரேயின் உடலில் பாய்ந்த குண்டு யாருடைய துப்பாக்கியிலிருந்து பாய்ந்தது?**

**பக்கம் – 36**

## தொடர்கள்...

*மகளிர் மன்றம் - பாலஸ்தீன் பெண்கள் மீது மேற்கத்திய பெண்ணியம் தொடுத்த போர் 28*

*குழந்தை வளர்ப்பு-பாலஸ்தீன குழந்தைகள், உலக முஸ்லிம்களுக்கு ஒரு பாடம்! 46*

*அமெரிக்க டிக்டாக் புகழ், மேகன் ரயிஸ் - ஏன் இஸ்லாத்தை ஏற்றார்? 34*

*சிலுவைப்போர் 2.0 - மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுத்த மறு உயிர் பெற்ற போர் - தொடர் 48*

*மருத்துவம் - முழுமையான வாய் இம்பிளாண்ட்! 58*

*உண்மை மறைக்கப்படுகிறது ஏன்? - தினமணி ஆசிரியருக்கு ஒரு கடிதம்! 33*

*அல் - அக்ஸாவை பாதுகாக்க தனது வாழ்வையே தியாகம் செய்த உதுமானிய படையின் கடைசி வீரர்! 44*

*பெண் கல்விக்கு எதிரானதல்ல இஸ்லாம் - தினமணி ஆசிரியருக்கு ஒரு கடிதம்! 55*

*பூமியின் மேற்பரப்பில் உருவாகும் மர்மங்கள்! 60*

*நூற்றாண்டின் அதிசயம் - சையத் பெதியுஸ்ஸமான் நூர்ஸி! 62*

நவம்பர் – 2023 / ரபியுல் ஆகிர் – ஜமாத்துல் அவ்வல் 1445

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,

தனி இதழ்: ரூ.40 | ஆண்டுச் சந்தா - உள் நாடு: ரூ.480 / வெளி நாடு: ரூ.5000

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



### ஹமாஸ் / இஸ்ரேல் போர்...!

# போர் தொடங்கிய அக்டோபர் 7 அன்று நடந்தது என்ன?

நம்முடைய வைகறை வெளிச்சத்தை பொறுத்தவரையில் இந்தியாவில் நடந்த பல்வேறு குண்டு வெடிப்புகளும் யாரால்? யாரால்? என்பதை தோலுரித்துக் காட்டியவர் எஸ்.எம்.முஷ்ரீப் IPS அவர்கள். அதற்கு முத்தாய்ப்பாக நீதிமன்றத்திலே வழக்குகளைத் தொடுத்தார். ஆதாரங்களை அள்ளித் தந்தார்கள். அங்கே நீதி சறுக்கியதால், அவற்றையெல்லாம் மக்கள் மன்றத்திலே வைக்கின்ற நூல்களாக ஆங்கிலத்தில் தந்தார்கள். அதனை பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறோம்.

தமிழில் 40,000லிருந்து 50,000 பிரதிகள் வரை மக்களிடத்தில் சென்று சேர்ந்திருக்கின்றது. இவை எல்லாவற்றிலும் சங்கப்பரிவாரத்தினர் ஆட்சியைப் பிடிப்பதற்கு மட்டுமல்ல பிரிவினையை உண்டாக்குவதற்கு, குண்டுகளை வெடிக்கச் செய்து முஸ்லிம்களையும் இந்துக்களையும் கொலை செய்துவிட்டு பழியை முஸ்லிம்கள் மேல் சுமத்தினார்கள். இது இன்றைக்கு நிரூபணமான உண்மை.

அதேபோல் பாலஸ்தீனில், ஒரு விஷயத்தை வைகறை வெளிச்சம் யூடியூப் சானலில்(Youtube), கிடைக்கின்ற தகவல்களை வைத்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். அது அக்டோபர் 7 அன்று இரவு நடந்தது என்ன என்பதே?

கவர் ஸ்டோரி

அன்று இரவு நடந்ததைப் பற்றி பத்திரிகைகள் எல்லாம் எழுதுகின்ற போது, "பல ஆயிரம் இஸ்ரவேலர்கள் கொலை செய்யப்பட்டார்கள்" என்பது மக்கள் மன்றத்தில் பதியும் வரையிலும் அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு பொய்! இப்போது 1200 என இஸ்ரேலே குறைத்துக் கொண்டது.

இறப்புகளே இல்லை என்று நான் சொல்லவில்லை. அக்டோபர் 7 இரவு அன்று கொலை செய்தவர்கள் யூத இராணுவத்தினர் என்பதை நம்முடைய ஜாஸ்மின் பரோட் என்ற காஸா பகுதியிலே நம்முடைய ஹமாஸ் சகோதரர்கள், மீட்கச் சென்ற போது அகப்பட்டுக் கொண்ட ஒரு சகோதரி கூறுகின்ற செய்தி.

அவர் கூறுகின்ற செய்தியில் இரண்டு விஷயங்களை நாம் கவனிக்க வேண்டும்.

ஒன்று யூத ராணுவம் சுட்டது, இதனை அவர் நிதானமாகவே அந்த விஷயத்தை பேசுகிறார். 10 மணி நேரம் நாங்கள் ஹமாஸின் பிடியில் இருந்தோம். எங்களுக்கு எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை, அவர்கள் எங்களுக்கு வாக்களித்தது போல நன்றாகவே நடத்தினார்கள். சில பேரை அழைத்துச் சென்றார்கள். எங்களையும் காஸா பகுதிக்கு அழைத்துச்செல்வோம் பின்னர் விட்டு விடுவோம் என்று தான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பிறகு இந்த சகோதரியே போலீசுக்கு போன் செய்கிறார் முதலில் எடுக்கவில்லை பிறகு வந்தார்கள். இஸ்ரேலிய இராணுவம் வந்தது. சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார்கள். குண்டு களை குடியிருப்புகளின் மேல் போட்டார்கள்.

நம்முடைய குடியிருப்புக்குள் ஹமாஸ் வந்து விட்டார்களே என்று கண்மூடித்தனமாக சுட்டு இருப்பார்கள். அதில் கொஞ்சம் யூதர்கள் இறந்து போய் இருக்கலாம். இதுபோன்ற அசாதாரணச் சூழ்நிலையில் இதுவெல்லாம் நடக்கின்ற விஷயம் தான் என்று எடுத்துக் கொண்டால், இந்த சகோதரி ஒரு வார்த்தையை தன்னுடைய பேட்டியில் கூறியிருக்கிறார் அது,

"எதிரிகளை திடீரென்று பார்த்தவுடன் முடிவெடுக்க முடியாத சூழ்நிலையில் முன்பின் தெரியாமல் சுட்டார்கள், இதில் இஸ்ரவேலர்கள் இறந்தார்களா, ஹமாஸ் போராளிகள் இறந்தார்களா, அப்பாவிகள் இறந்தார்களா என்பது வேறு விஷயம். எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாத சூழ்நிலையில் திடீரென்று தாக்குதல் நடந்தால், அதில் ஏற்படக்கூடிய மரணங்களை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அங்கு நடந்தது என்னவென்றால், "இராணுவத்தினர் தெளிவான முன்கூட்டியே திட்டமிட்ட முடிவைப் போல் யூதர்களையே யூதர்கள் கொன்றார்கள்." என்றார். இந்த சகோதரியின் அணுகுமுறை சமநிலையானதாக இருக்கிறது.

நடந்ததை பார்க்கும் பொழுது இந்த விஷயத்தை ஆலோசிக்க வேண்டியதிருக்கிறது.

நமது நாட்டில் நடந்த பாராளுமன்ற தாக்குதல், இங்கு நடந்த சவப்பெட்டி ஊழல்களை மறைக்கவும், மக்களை பிரிவினைக்கு உட்படுத்தவும், ஆட்சியைப் பிடிக்கவுமே ஏற்பாடு செய்யப்பட்டது.

26/11ம் அதேபோல்தான். இதில் ஹிந்து ராஸ்டிராவை கொண்டு வருவதற்கு உளவுத்துறை உட்பட அனைவரும் முயற்சி செய்கிறார்கள் என்று கர்கரேக்கு தெரிந்தவுடன் அவர் நடவடிக்கைகளில் இறங்குகின்றார். இனிமேல் இந்த கர்கரேயை உயிரோடு வைத்திருந்தால் அனைத்து உண்மைகளையும் சொல்லிவிடுவார் என்று கர்கரேயை கொலை செய்வதற்கு ஒரு தாக்குதல் ஏற்பாடு செய்தார்கள். இப்படி பல குண்டுவெடிப்புகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள். இதனை ஷிண்டே கூறினார், அசிமானந்தா கூறினார் நாங்கள் குண்டுகளை வைத்தோம் எங்களுக்கு இந்து ராஷ்டிரா வேண்டும், RSSக்கு வேகம் போதவில்லை அதனால் அபிநவ் பாரத் வழியாக நாங்கள் இதை செய்தோம் என்று கூறினார்கள்.

இங்கே ஹமாஸ் தாக்குதலை திடுதிப்பென ஏற்பாடு செய்தது உண்மைதான். அதனை அவர்கள் உடனேயே தங்களுடைய 9/11ஆக மாற்றிக்கொண்டார்கள். இதற்குத்தான் பத்து மணி நேரம் எடுத்துக் கொண்டார்கள்.

இந்த சகோதரி சொல்லக்கூடிய தகவல்களி லிருந்து, கொடுக்கிற வாக்குறுதிகளில் இருந்து, அவர் தரும் வாக்குமூலத்திலிருந்து இதனை நாம் புரிந்துகொள்ள முடிகின்றது.

நமக்கு சாரருடையே தகவல்களையே காட்டு கின்றார்கள். ஹமாஸ் சகோதரர்கள் உள்ளே சென்றதை மட்டும் தான் காட்டுகிறார்கள்.

எங்களுடைய வைகறை வெளிச்சத்தின் அனுபவத்தில், இது போன்ற விஷயங்கள் எல்லாம் பின்னர் உண்மை என வெளி வந்திருக்கின்றது. ஆனால் இது உண்மையாகி விட வேண்டும் என்று இல்லை. இப்படி இந்த சகோதரியின் வரிகளை படித்த பிறகு இதனை உங்களிடத்தில் சேர்க்க வேண்டும் என்பதோடு, இப்போது நமது இந்தக்

கூற்று உண்மை என்பதை நிரூபிக்கும் தகவல்கள் நிரம்பவே வெளிவந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக அன்று அக்டோபர் 7இல் வந்தேரி யூதர்களின் குடியிருப்புக்குள் குண்டு போட்டு தகர்த்தது இஸ்ரேலிய ராணுவம் தான் என்பதை இராணுவமே ஒப்புக் கொண்டது. அது தவறு தலாக நடந்தது எனக் கூறுகின்றது. (Haretz/ Aljazeera)

**இன்னொரு சாட்சியம்**

இஸ்ரேலிய குடிமக்களை எந்தவித ஐயத்திற்கும் இடமில்லாமல் கொலை செய்தது இஸ்ரேலிய ராணுவம் தான் என்று அக்டோபர் ஏழு ஹமாஸ் தாக்குதலில் தப்பித்த இன்னொரு சகோதரியின் கூற்று. இந்த விஷயத்தில் தெளிவாக இன்னொரு படி மேலே போய் இவர்களுடைய திட்டங்கள் அம்பலகமாகி இருக்கிறது. இந்த திட்டமிட்ட தாக்குதலில் இவர்கள் நிறைய குடியிருப்புகளையும் அழித்துள்ளார்கள்.

மேலும் செய்தி நிறுவனங்கள், அந்த இடிபாடுகளுக்கு இடையில் இன்னும் நிறைய உடல்கள் கிடைக்கின்றன என கூறுகின்றது. இந்த விஷயங்களை எல்லாம் நாம் ஏன் கூறுகிறோம் என்றால் இஸ்ரேல் தன்னுடைய மக்களையே ஏன் கொலை செய்ய வேண்டும்? இதனை நாம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்போதைக்கு இரண்டு உடல்கள் கிடைத்துள்ளதாகவும் இன்னும் பல உடல்கள் கிடைக்க இருப்பதாகவும் இந்த செய்தி நிறுவனங்கள் தகவல்களை தருகின்றன. இந்த தகவல்கள் எல்லாம் அக்டோபர் 18,19இல் வந்தவை. அக்டோபர் 15 தேதிகளிலேயே நெதன்யாஹூ இது சம்மந்தமான ஆவணங்களைத் தான் கண்டுபிடித்து அழித்துக் கொண்டிருக்கிறார், அவ்வளவு தடுத்தும், இந்த செய்திகள் எல்லாம் இஸ்ரேலிய மீடியாக்களில் வந்தவை.

இன்னொரு முக்கியமான தகவல், இந்த இஸ்ரேலை நிறவெறி பிடித்த, யூதர்களால் நடத்தப்படக்கூடிய நாடு என்றே சொல்கிறார்கள். அதுவே உண்மை. இஸ்ரேலின் அந்த ஹிர்புஷ் பகுதியில் இருந்த ஒரு வகை குடிமக்கள் ஃபராரி என்று அறியப்படக்கூடிய அந்த குடிமக்கள் இவர் களிலேயே தாழ்ந்தவர்கள் அல்லது நமது நாட்டில் இருக்கக் கூடிய ஜாதி அடுக்குமுறைகளில் கீழ்மட்ட நிலையில் உள்ளவர்களைப் போல் என்று அவர்கள் நினைக்கிறார்கள் அதனால் தான் அந்த மக்களை இவர்கள் கொலை செய்வதற்கும் தயங்கவில்லை. அந்த மக்களை இடிபாடுகளுக்கு இடையில் இருந்து வெளியில் எடுக்கவும் தயங்கவில்லை. அது காஸா பகுதியின் அருகில் யாரை குடியமர்த்துவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பான இடங்களில் இந்த உயர்ந்த யூதர்கள் எல்லாம் இருக்கிறார்கள், தன்னுடைய குடிமக்களில் தாழ்ந்தவர்கள் என்று சொல்லக் கூடியவர்களை இந்த இடங்களில் வைத்துள்ளார்கள். இந்த உண்மையும் வெளிப்பட்டிருக்கிறது.

யுவானி ரிட்லி என்ற சகோதரி, லண்டனை சேர்ந்த பிரபல பத்திரிகையாளர் இதனை தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார், இது ஒரு நிறவெறி பிடித்த நாடு என்று.


**ஒபாமா....உரை....**

ஒபாமாவினுடைய ஒரு குறுந்தகவல் வலை தளங்களில் எல்லாம் பரவலாக வந்து கொண்டிருக்கிறது அதன் மையக் கருத்து, இஸ்ரேலில் இருக்கின்ற நிறவெறி என்பது அழிக்கப்பட வேண்டும் என்பதே.

அவர் 'பாலஸ்தீன குழந்தைகளுக்கு அவர்களுடைய சொந்த பூமியில் வளர்வதற்கும், ஆளாவதற்கும், உரிய உரிமைகள் உள்ள சொந்த பூமி அவர்களுக்கு தேவை என்று பேசியுள்ளார். இதற்கு மிக முக்கியமான காரணம் நிறவெறி கொள்கையால் அவரும் அவருடைய இனமும் இன்றும் அமெரிக்காவின் நடுவீதிகளிலே வைத்து சுட்டுக் கொல்லப்படுகின்றது. வெள்ளை நிறத்தவர்களே அனைத்திற்கும் உரியவர்கள் மற்றவர்கள் எல்லாம் அவர்களுக்கு சேவகம் செய்ய வேண்டும் இல்லையேல் அழிய வேண்டும் என்ற தத்துவத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர்.

அவருடைய உண்மையான பெயர் பாரக் உசைன் ஒபாமா அதற்குப் பிறகு உசைனை எடுத்துவிட்டு, பாரக் ஒபாமா என்று மாற்றி முஸ்லிம் நாடுகளின் மீது வரலாற்றில் இல்லாத அளவுக்கு எந்தக் கொடூரனும் செய்ய முடியாத அளவிற்கு குண்டுகளைப் போட்டு தன்னை ஒரு கிறிஸ்தவன் என நிலைநாட்டிக் கொண்டவர்,அவரே நிறவெறி அழிக்கப்பட வேண்டும் என்று கூறி இருக்கிறார்.

லெபனானின் 45 கிராமங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட இரண்டரை லட்சம் குடிமக்கள் இனி என்ன தந்தாலும் நாங்கள் அந்த பகுதிக்கு செல்ல மாட்டோம் என்று கூறுகிறார்கள் அவர்களும் யூதர்கள் தான் ஆனால் நிறவெறி கொடுமைக்கு ஆளானவர்கள். அதாவது லெபனானின் எல்லையோர பகுதிகளிலும், காஸாவின் எல்லை களிலும் இஸ்ரேல் யாரை



குடியமர்த்துகிறார்கள் என்றால், தன்னுடைய இனத்தில் கீழ் ஜாதி என்று நினைப்பவர்களை, தாழ்ந்தவர்கள் என்று நினைப்பவர்களைத் தான் என்பது இந்த விஷயங்களில் இருந்து ஊர்ஜிதப் படுகிறது. இதிலிருந்து இந்த மொத்த சூழ்நிலை யையும் நாம் புரிந்து கொள்வதற்கு இது போன்ற தடயங்கள் மேலும் கிடைக்கின்றதா? உண்மைகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.


*Grazey Zone* - **கிரேசி ஸோன் சாட்சியம்**

கிரேஸி ஸோன் என்ற பத்திரிகை ஒரு முழு ஆய்வை நடத்தி ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. அதில் பல சாட்சியங்களை சமர்க்கின்றது. அவற்றில் அக்டோபர் 7ஆம் தேதி தாக்குதலை தொடங்கியது ஹமாஸ் தான். ஆனால் மக்களை, யூதர்களைக் கண்ணை மூடிக் கொண்டு யூதர்களை பெரிய அளவில் கொன்றது இஸ்ரேலிய ராணுவம் தான் என்பதை சொல்கின்றது.

**இஸ்ரேலிய போலிஸ் விசாரணை**

இஸ்ரேலின் பிரதம அமைச்சர், எவ்வளவோ தடைகளை பூட்டிப் போட்டும், இஸ்ரேலிய காவல்துறை ஓர் ஆய்வை நடத்தி வருகின்றது. அதிலும் இதே உண்மைகள் ஊர்ஜிதம் செய்யப்படுகின்றன. ஆனால் இராணுவம், *"We are at War"* நாம் போர் நடத்திக் கொண்டிருக்கின்றோம். அதனால், இதைப்பற்றி இப்போது பேசுவதற்கில்லை என்பது. நெதன்யாஹூ, இது, *"Time for War"* இது போருக்கான நேரம் என தட்டிக் கழித்து வருகின்றார்.

**எம்.ஜி.எம்**



# பொய்களின் அதிபர் ஜோ பைடன்

ஹமாஸ் மற்றும் இதர இஸ்லாமிய போராளிகளின் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் திணரும் இஸ்ரேல், இவற்றிற்கெதிராக தன்னுடைய நீண்ட கால ஆயுதமான "பொய்"களை கையிலெடுத்து, தனது அடிவருடி மீடியாக்கள் மூலம் உலகம் முழுவதும் நம்ப வைத்து விடலாம் என்று பொய்களை உலகம் முழுவதும் பரப்பி வருகின்றது. அதில் ஒரு பொய் தான், "ஹமாஸ் போராளிகள் பெண்களையும், குழந்தைகளையும் கழுத்தை அறுத்து கொலை செய்கிறார்கள்". என்றொரு பொய்.

வேடிக்கை என்னவென்றால் இது பொய் என்றே தெரியாமல், இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாஹூவை நம்பி, அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் பேசும் போது, ஜோ பைடன் அப்படியே வாந்தி எடுத்திருக்கின்றார்.

"Joe Biden, speaking to Jewish Community Leaders in which he claimed to have seen Confirmed Pictures of Terrorists beheadind children in Israel."

அதாவது ஜோ பைடன், யூத தலைவர்களிடம் பேசினாராம். அப்போது இஸ்ரேலிய குழந்தைகளின் தலைகளை ஹமாஸ் வெட்டுவது உறுதி செய்யப்பட்ட படங்களை பார்த்தேன். என்று பேசியுள்ளார். அதன் பிறகு அமெரிக்காவின் Washington Post என்ற நாளிதழில் இப்படியொரு செய்தி வருகின்றது.

"White house has backtracked on remarks made by U.S. President Joe Biden. About seeing images of alleged atrocities committed by Palestinian resistance fighters in Israeli settlement arrounding Gaza. Biden Statements on alleged atrocities were based on Israeli Media reports. The Daily report sited that White House was forced to backtrack the comments made by Joe Biden Wednesday at the round table with Jewish Community."

அதாவது, "அவர் இஸ்ரேலிய செய்தி ஊடகங்கள் சொல்லிய தகவல்களை நம்பி பேசிவிட்டாராம். எனவே ஜோ பைடன் பேசிய வார்த்தைகளை வெள்ளை மாளிகை பின்வாங்கிக் கொள்கிறதாம்."

இப்படி இஸ்ரேலை நம்பி , "ஹமாஸ் இஸ்ரேலிய குழந்தைகளின், பெண்களின் தலைகளை வெட்டுகின்றது" என்று வெள்ளை மாளிகையில் பொய்யை பேசி உலக அரங்கில் அசிங்கப்பட்டுள்ளார் அமெரிக்க(பொய்களின்) அதிபர் ஜோ பைடன்.

– ந.நி.,



# இஸ்ரேலிய உளவுத்துறையை ஹமாஸ் முட்டாளாக்கியது எப்படி?

வெல்லவே முடியாத ஒரு நாட்டிற்கு எதிராக ஒரு கூட்டம் மக்கள். ஒரு கூட்டம் மக்கள் என்றால் ஒரு ஆயிரம் பேர் தான் இருப்பார்கள் (ஹமாஸில்) இவர்கள் சண்டையிட்டதே பெரிய விஷயம், அதிலும் இஸ்ரேலுக்கு உள்ளே சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது அவர் களுடைய பலம் அதிகமாகவே இருக்கின்றது என்பதைத்தான் காட்டுகின்றது. இன்றளவும் செய்திகளை கூறுகின்ற பத்திரிகைகள் எல்லாம் கூறுவது, "அவர்கள் இழப்புகளை எதிர்பார்த்துதான் இதனை தொடங்கி இருக்கின்றார்கள். இவர்களுக்கு மரணம் என்பது சொர்க்கத்தின் நுழைவுச்சீட்டு. அது கிடைத்துக் கொண்டு இருக்கிறது!" நாம் குறிப்பிட்டது போல 14 தளங்களில் இஸ்ரேலுக்குள் இருக்கக்கூடிய போராளிகள் சண்டையிட்டுக் கொண்டுதான் இருக்கின்றார்கள் என்பதுதான் அண்மைச் செய்தி.

இப்பொழுது சில ஆய்வுகள், அதில் அமெரிக்காவின் முன்னாள் உளவுத்துறை அதிகாரிகள் இணைந்து ஓர் ஆய்வை மேற்கொள்கின்றனர், அதன் பெயர் "how did hamas outfox worlds best spies- அதாவது எப்படி ஹமாஸ் உலகத்தின் தலைசிறந்த உளவு பார்க்கின்ற நாட்டை பைத்தியக்கார நாடாக ஆக்கியது?" என்பது தான் அந்த ஆய்வு. அந்த ஆய்வில் யாரெல்லாம் கலந்து கொண்டிருக்கிறார்கள் எனில்,

கவர் ஸ்டோரி

*1.*பெக்ஸ் ஸ்கேனர்; இவர் முன்னாள் அமெரிக்க தேசிய உளவுத்துறையின் துணை இயக்குனர்,

*2.* ஆண்ட்ரூ பேரோன்: இவர் அமெரிக்காவின் தீவிரவாதத்திற்கு எதிரான மையத்தின் முன்னாள் தலைவர் மற்றும்

*3.*இன்னொருவர் அமெரிக்காவினுடைய உளவுத்துறையைச் சார்ந்தவர். அவர் பெயர் குறிப்பிட விரும்பவில்லை.

*4.*உளவுத்துறை மற்றும் தேசிய பாதுகாப்பு தலைவர். இவர் அமெரிக்காவிற்காக ஒரு பத்திரிகை நடத்திக் கொண்டிருக்கிறார்.

அவர் அந்த பத்திரிகையில் சில கேள்விகளை எழுப்புகிறார் அது, "எப்படி இந்த ஹமாஸ், ஒரு சிறு கூட்ட மக்கள் உலகத்தின் தலைசிறந்த உளவாளி நாட்டை முட்டாளாக்கியது?" என்று.

**ஆய்வு**

இவர்கள் இந்த ஆய்வின் அறிக்கையை தொடங்கும் போதே எப்படி கூறுகிறார்கள் என்றால், உலகத்திலேயே மிகவும் அதிகமான பயிற்சி பெற்ற, நுண்மான் நுழைபுலன் நிறைந்த ஒரு உளவுத்துறை உண்டு என்றால் அது இஸ்ரேலினுடைய உளவுத்துறை தான்.

*1914*இல் தொடங்கி *1918*இல் முடிந்த முதல் உலகப் போருக்கு பிரிட்டன் என்ற ஆங்கில நாட்டிற்கு உளவு பார்க்கின்ற வேலையை செய்தவர்கள் இவர்கள். அதற்காகத்தான் பால்போர் பிரகடனம் *(Balfour Declaration)* இந்தப் பிரகடனம் தான் யூதர்களுக்கென ஒரு நாடு என்பதன் முதல் அடிக்கல். அதன் பிறகு இஸ்ரேல் என்ற நாடு சன்மானமாக தரப்பட்டது. அதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு அது, ஐரோப்பா யூதர்களை தனக்குள் வைத்துக்கொள்ள விரும்பவில்லை என்பது தான்.

உலகத்தின் மிகவும் பயிற்சி பெற்ற, ஓர் உளவுத்துறையை எப்படி ஒன்றும் இல்லாமல் ஆக்கினார்கள். மேலும் உலகிலேயே அதிகமாக உளவு பார்க்கப்படுகின்ற ஒரு பகுதி காசா பகுதி. ஏனென்றால் இஸ்ரேலுக்கு உலகத்தின் வேறு எந்த பகுதியில் இருந்தும் ஆபத்துகள் இல்லை. காசா பகுதியில் இருக்கின்ற அதிலும் குறிப்பாக ஹமாஸ் என்ற அமைப்புடைய *Qassam Brigades* என்று சொல்லக்கூடிய அந்த படைகள் மட்டும் அதிகமாக கண்காணிக்கப்படுகின்றது!

அப்படி இருந்தும் எப்படி தோற்றது? அதில் ஒரு ஆய்வாளர் மிக அழகாக குறிப்பிடுகிறார், பாலஸ்தீனில் வாழ்கின்ற *20.3* லட்சம் மக்கள், அத்தனை பேரையும் இவர்கள் உளவு பார்க்கத் தேவையில்லை. ஹமாஸ்-ஐச் சேர்ந்த அதிலும் *Qassam Brigades*-ஐச் சேர்ந்த *1000* பேரை தான் இவர்கள் உளவு பார்க்க வேண்டும் என்று! அடுத்து உலகத்தில் அதிகமாக உளவு பார்ப்பதில் அதிகமாக பணத்தை செலவு செய்வது இஸ்ரேல் தான்.

*3.8* பில்லியன் டாலர்களை வருடம்தோறும் யூதர்களுக்கு கொடுக்கிறது அமெரிக்கா. அதில் பெரும்பகுதி இந்த உளவு பார்க்கிற வேலைக்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. ஒரு ஆயிரம் பேரை உளவு பார்ப்பதற்கு இவ்வளவு பெரிய பட்ஜெட். இவ்வளவு பெரிய பயிற்சி. அதன் பிறகு உலகத்திலேயே *365* சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள ஒரு பகுதியை தான் இவர்கள் உளவு பார்க்க வேண்டும். அப்படி இருந்தும் இவர்கள் எப்படி தோற்றார்கள்?.

ஓர் ஆய்வாளர் கூறுகின்றார், *1973*இல் நடந்த யூத திருவிழாவின் போது இவர்களுக்கு தெரியாமல் எகிப்திய படைகளும், சிரியாவின் படைகளும் உள்ளே வந்துவிட்டன என்று சொல்வார்கள். அப்பொழுதும் உளவு இருந்தது. ஆனால் இப்பொழுது உளவு அறவே இல்லாதது போல் இருக்கிறது! அது எப்படி?

உலகத்திலேயே மக்கள் அடர்த்தியாக வாழக்கூடிய இடம் காசா பகுதி. இதில் ஏழு விதமாக உளவு பார்க்கிறார்கள்.

*1.* ட்ரோன்கள் மூலமாக உளவு பார்த்தல்

*2.*செயற்கைக்கோள்கள் *(Satellite)* வழியாக அவர்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பது.

*3.*வட்டார ஆய்வு - ஓர் விளக்கு அதிகமாக ஜொலித்தால் கூட அது என்னவென்று கண் காணிக்கிற ஆய்வு. அந்த குறிப்பிட்ட வட்டாரத்தை துல்லியமாக ஆய்வு செய்வது. ஒவ்வொரு அசைவையும் கண்காணிப்பது.

*4.* பலூன்கள் வழி உளவு பார்ப்பது.

*5.* கேமராக்கள் வழி உளவு பார்ப்பது.

*6.* ஒலிகளைப் பதிவு செய்யும் உளவு முறை - வழக்கத்திற்கு மாறாக கேட்கும் சத்தங்களை கம்ப்யூட்டர்களில் பதிவு செய்து உளவு பார்த்தல்.

*7. Human Intelligence* வேவு பார்ப்பவர்களை நேரடியாக மக்களோடு விட்டு உளவு பார்ப்பது.

### கட்டுப்பாடுகள்

இப்படி ஏழு வகையாக அந்த மக்களை உளவு பார்த்தும், அந்த மக்கள் உங்களுடைய எல்லா உளவு பார்க்கும் முறையையும் தகர்த்து, இஸ்ரேலிற்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அது எப்படி முடிந்தது?

இவர்களாகவே சில முடிவுகளுக்கு வருகிறார்கள் அது என்னவென்றால், இவர்கள் கூடிப் பேசி திட்டங்களைப் போட்ட பகுதிகளில் அவர்களுக்குள், இஸ்ரேலுடைய உளவுத் துறையோ அல்லது இஸ்ரேலுக்காக உளவு பார்ப்பதற்காக அமர்த்தப்பட்ட தகவலாளிகளோ உள்ளே போக முடியாத அளவிற்கு கட்டுப் பாடாக இருந்திருக்கிறார்கள்.

இதில் இன்னொரு வேடிக்கை என்னவெனில், இப்படி ஏழு வகையான உளவு முறைகளையும் தாண்டி ஹமாஸ் ஆயுதங்களை வாங்க வேண்டும். ஆயுதங்களை காசா பகுதிக்குள் கொண்டு வர வேண்டும். அவற்றை மறைத்து வைக்க வேண்டும் இவையெல்லாம் எப்படி முடிந்தது?

இஸ்ரேல் இப்பொழுது தங்கள் கண்ணுக்கு தெரிகின்ற உயரமான கட்டிடங்களின் மீது குண்டுகள் போடுகிறதே தவிர, ஹமாஸினுடைய ஆயுதக் கிடங்கை இஸ்ரேல் இன்றும் தகர்த்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் இவர்களுடைய குண்டு அந்த ஆயுதக் கிடங்கின் மீது விழுந்திருந்தால் இந்நேரம் வெடித்து சிதறி இருந்திருக்கும். இன்னும் அதிகமான சேதங்களை அங்கே உருவாக்கி இருக்கும்.

ஆனால் இஸ்ரேல் அதன் பக்கத்தில் கூட சென்றதாகத் தெரியவில்லை. ஆகவே அவர் களுடைய ஆலோசனைகளுக்குள் உங்களுடைய உளவாளிகள் செல்ல முடியவில்லை. அந்த அளவிற்கு அவர்கள் கட்டுப்பாடாக இருந்திருக் கிறார்கள். இந்த கட்டுப்பாடு அவர்களுக்கு மிகப்பெரிய அளவில் உதவி செய்திருக்கிறது.

### முஹம்மத்(ஸல்) அவர்களின் வழியில்

இன்னொரு திட்டத்தை இவர்கள் தீட்டியதாக பத்திரிகைகள் எழுதும் பொழுதும், எனக்கு அதனை படிக்கும் பொழுதும் பெருமானார்(ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்தின் போது, அதாவது மக்காவிலிருந்து, மதினாவிற்கு இடம்பெயர்ந்த போது போட்ட திட்டம் தான் நியாபகத்திற்கு வருகின்றது.

இந்த திட்டத்தில் பல்வேறு நபர்கள் வருகிறார்கள். அலி(ரலி) வருகிறார்கள், பாத்திமா (ரலி) வருகிறார்கள், அஸ்மா (ரலி) வருகிறார்கள், அபூபக்கர்(ரலி) வருகிறார்கள் இப்படி நிறைய பேர் வருகிறார்கள். அவரவர்களுக்கு தனித்தனியே பணிகளை கொடுத்தார் நபி(ஸல்) அவர்கள். ஒருவருக்கு கொடுக்கப்பட்ட திட்டம் இன்னொருவருக்கு தெரியாது.

இதே போன்றதொரு திட்டத்தைத் தான் ஹமாஸ் தீட்டியிருக்கிறது. ஒவ்வொரு நபருக்கும் தனித்தனி பணியை பகிர்ந்து கொடுத்து இருக்கிறார்கள். அவரவர்கள் நேரம் வரும் போது, தான் செய்ய வேண்டியதை எந்த அளவிற்கு உயிரை கொடுத்து நிறைவேற்ற முடியுமோ அந்த அளவிற்கு அவர்கள் உயிரைத் தந்து நிறைவேற்றி இருக்கிறார்கள்.

ஒரு ஆய்வாளர் கூறி இருக்கிறார், இவர்கள் எந்தவிதமான எலக்ட்ரானிக் சாதனங்களையும் பயன்படுத்தவில்லை. ஏனெனில் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் ஏதாவது எலக்ட்ரானிக் சாதனங்களை பயன்படுத்தினால் உடனே இந்த தகவல்கள் இஸ்ரேலிடம் சென்றுவிடும் என்று.

ஏனென்றால் காற்றில் வருகின்ற அதிர்வு, நிலத்தில் வருகின்ற அதிர்வு, மக்கள் கூடுவது, ஒலியில் ஏற்படுகின்ற ஏற்ற இறக்கங்கள் இப்படி ஏழு விதமான உளவு பார்க்கும் சாதனங்களைக் கொண்டு இஸ்ரேல் உளவு பார்க்கிறது. அதனால் ஒரு மத்திய ஒருங்கிணைப்பையே இவர்கள் ஹமாஸ் இயக்கத்தவர்கள் வைத்துக் கொள்ளவில்லை.

அவரவர்களுக்கான பணியை தனித்தனியே செய்து முடிக்கிறார்கள். அதனுடன் கலைந்து சென்று விடுகிறார்கள். இப்படித்தான் செய்திருக்க வேண்டும் என்ற அனுமானம் தான். ஆனால் எப்படி அவர்கள் இதை செய்தார்கள் என்பதை இனி வரும் காலங்களில் அனைத்து விதமான ஆய்வுகளுக்கும் உட்படுத்தும் இஸ்ரேல். நாமும் ஆய்வு செய்வோம்.

வெறும் ஆயிரம் பேர்களை மட்டுமே கண் காணித்திருக்க வேண்டும். அவர்களை கண்காணித் திருந்தாலே உங்கள் மீது நடந்த தாக்குதலைத் தடுத்து இருக்கலாம். இவ்வளவு உளவு பார்க்கும் சாதனங் களை எல்லாம் கடந்து, எப்படி இவைகள் எல்லாம் உள்ளே வந்தது என்பது மிகப்பெரிய கேள்வி குறி.

இன்னொரு ஆய்வாளர் கூறுகிறார்,

“எலக்ட்ரானிக் சாதனங்களை பயன்படுத்தாதது மட்டுமல்ல, ஒருங்கிணைப்பு என்ற ஒன்றே அவர்களிடம் இல்லை. உண்மையை சொல்ல

போனால், அனைவருக்கும் தனித்தனியே பணிகள் கொடுக்கப்பட்டு விட்டன. அவர்கள் அவர்களுடைய பணியினை சரியான நேரத்தில் செய்யும்பொழுது ஒரே கட்டளை மையத்திட மிருந்து அனைவருக்கும் கட்டளை பிறப்பித்தது போன்று நமக்கு தெரிகின்றது! ஆனால் அப்படி அல்ல."

**புதிர்**

இன்னும் இஸ்ரேலுக்கு ஒன்று புரியவில்லை எப்படி இவர்கள் ஆயுதங்களை வாங்கினார்கள், ராக்கெட்டுகளை தயார் செய்கிறார்கள், எங்கே அதனை மறைத்து வைக்கிறார்கள் என்பதை பற்றி அவர்களுக்கு தெரியவில்லை. ஒரே ஒரு அனுமானம் என்னவென்றால் அவர்கள் அதனை எல்லாம் நிலத்திற்கு அடியில் வைத்திருப்பார்கள் என்கிறார்கள்.

நிலத்திற்கு அடியில் என்றால், அங்கு வானிலையை ஆய்வு செய்யக்கூடிய சாதனங்கள் எல்லாம் இஸ்ரேலிடம் இருக்கின்றது. ஒரு மழை பெய்தால் கூட அவர்களுக்கு தெரிந்துவிடும் அங்கு ஏன் மழை பெய்கிறது? அந்த மழையை தடுக்க இயலுமா? என்றெல்லாம் ஆலோசிப் பார்கள்.

புவியியல் ரீதியாக ஆய்வு செய்யும் போது பூமிக்கு அடியில் இருப்பதையும் இவர்கள் தெரிந்துகொள்கிறார்கள். அப்படி இருக்க இவர்கள் நிலத்திற்கு அடியில் எப்படி ஆயுதங் களை வைத்திருப்பார்கள் என்பது எங்களுக்கு புதிராக இருக்கின்றது என்கின்றது இஸ்ரேல்.

ஆக, உலகில் மிகவும் அதிகமாக பயிற்சி பெற்ற இஸ்ரேலின் உளவுத்துறையால், ஹமாஸின் கட்டுப்பாட்டை உடைத்து உள்ளே போக முடியவில்லை என்பது தெரிகிறது.

இப்படி இஸ்ரேலை முட்டாளாக்கி விட்டார்கள். மேலும் இஸ்ரேலினுடைய அனைத்து எலக்ட்ரானிக் சாதனங்களையும் இவர்கள் கவனித்து வந்துள்ளார்கள். இஸ்ரேலுக்குள் சென்று எங்கு என்ன இருக்கின்றன என்பதையும் தெரிந்து கொண்டுள்ளார்கள்.

14 தளங்கள் இஸ்ரேலிற்குள் ஹமாசுக்கு இருக்கிறது. அதனால்தான் இவ்வளவு நாட்களாக சண்டை நீடித்துக் கொண்டிருக்கின்றது. காட்டு மிராண்டித்தனமாக இஸ்ரேல் குண்டு மழைகளைப் பொழிந்த பிறகும் சண்டை நீடித்துக் கொண்டிருக்கிறது.

**எம்.ஜி.எம்**

# ஹமாஸ் அழைத்துச் சென்ற கைதிகளை எப்படி நடத்தும்?



ஹமாஸ் இந்த போரில் நிறைய இஸ்ரேலிய குடிமக்களை, ராணுவத்தினரை கைதிகளாக பிடித்து சென்றார்கள். அப்படி அழைத்து செல்லப்பட்டவர்களை ஹமாஸ் கழுத்தை அறுத்து கொலை செய்கின்றது. குழந்தைகளையும், பெண்களையும் ஈவு இரக்கமின்றி கொலை செய்கின்றது என்றெல்லாம் இஸ்ரேல் பொய்களை பரப்பி வருகின்றது.

இந்த நிலையில் தாலிபான்களின் பிடியில் பத்து நாட்கள் சிக்கி, பின்னர் வெளியில் வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சகோதரி யுவான்னி ரிட்லியிடம், ஹமாஸ் அழைத்து சென்ற இஸ்ரேலிய குடிமக்களின் நிலை குறித்து பேட்டி ஒன்றை எடுத்தது Talk Tv என்ற செய்தி நிறுவனம். அந்த பேட்டியில் பதிலளித்த யுவான்னி ரிட்லி அவர்கள்,

"தாலிபான்களிடம் நான் கைதியாக சிக்கிக்கொண்டு இருந்த போது, தன்னுடைய சிறையில், தன்னைப் போலவே இருந்த சில கிருஸ்தவ சகோதரிகள் எந்தளவிற்கு சுதந்திரமாக இருந்தார்கள் என்பதையெல்லாம் சொல்லிவிட்டு, இறுதியாக, 'ஹமாஸூம் தாலிபான்களின் கொள்கையை ஒத்துடையவர்கள் தான்' அதனால் அவர்கள் தாங்கள் அழைத்து சென்ற இஸ்ரேலியர்களை மிகவும் கண்ணியமாகத்தான் நடத்துவார்கள்" என்று கூறினார்.

(தாலிபான்களிடம் சிக்கிய யுவான்னி ரிட்லி பின்னாட்களில் ஏன் இஸ்லாத்தை ஏற்றார் என்பதை அறிய படியுங்கள், "தாலிபானின் பிடியில்", வேர்கள் வெளியீட்டகம்)



# ஹமாஸ் – ஹிஸ்புல்லாஹ்

## பொய்களும்...உண்மைகளும்..!

நவம்பர் 9 ம் தேதி UN-ல் கொண்டு வரப்பட்ட இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தில் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது, இதில் 145 நாடுகள் ஆதரவாகவும், அமெரிக்கா, கனடா உள்ளிட்ட 18 நாடுகள் இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் ஓட்டளித்தது.

இஸ்ரேல் செட்டில்மெண்ட்ஸ் என்று சொல்லக்கூடிய பாலஸ்தீன நிலத்தை ஆக்கிரமித்து இஸ்ரேலியர்கள் சட்டவிரோதமாக குடியமரும் பகுதியை நீக்கவும், இஸ்ரேல் காசாவில் நிகழ்த்தி வரும் படுகொலைக்கு எதிராகவுமே இந்த தீர்மானம் கொண்டு வரப்பட்ட து.

இந்த தீர்மானத்திற்கு முன் அக்டோபர் 28ம் தேதி UNல் கொண்டு வரப்பட்ட இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தில் வாக்களிக்காமல் விலகி நின்றது இந்தியா என்பதும் குறிப்பிடத்தக்கது.

**12-11-2023**

கவர் ஸ்டோரி

ஹமாஸ் அமைப்பினர் தன் சொந்த மக்களை கேடயமாக வைத்து கொல்கிறார்கள். காசாவின் அல்-ஷிஃபா மருத்துவமனையில் தான் வேலை செய்வதாக கூறி ஒரு முஸ்லிம் சகோதரி வீடியோவில் பேசுகிறார், அதில் ஹமாஸ் அமைப்பினர் அல் -ஷிபா மருத்துவமனையில் இருந்து மருந்துகளை



திருடி சென்று விட்டனர். இதனால் பலர் இறக்க நேரிடும் என்று பேசுகிறார். இதனை 130 லட்சம் பேர் பார்த்திருக்கிறார்கள்.

இந்த வீடியோவை ஆய்வு செய்த துருக்கி செய்தி நிறுவனம், இது போலியாக உருவாக்கப் பட்டது. மாஸ்க் அணிந்து அந்த பெண் பேசுவது போல் இருப்பது deep fake டெக்னாலஜியினால் உருவாக்கப்பட்டது. அதில் வரும் குரல் தனியாக பேசி ஒட்டவைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு போலியான வீடியோ என்று வெளியிட்டிருக்கிறது.

இப்படி பல வீடியோக்கள் ஹமாஸ் செய்து விட்டதாக திட்டமிட்டு பரப்பப்படுகிறது. அமெரிக்க வெள்ளை மாளிகையே இஸ்ரேலின் பொய்களை நம்பி மூக்குடைந்தது. தொடக்கத்தில் ஹமாஸுக்கு எதிராக பேச வேண்டும் என்பதற்காக 40 குழந்தைகளை எரித்து ஹமாஸ் அமைப்பினர் கொன்றிருக்கிறார்கள் என்று அமெரிக்க அதிபர் பைடன் பேசினார். ஆனால், அதற்கான ஆதாரங்களை கேட்டபோது வெள்ளை மாளிகை நாங்கள் இஸ்ரேலின் தவறான தகவலை நம்பி பேசி விட்டோம். இப்படியொரு சம்பவம் நடந்த தற்கான எந்த ஆதாரமான தகவலும் இல்லையென்று அறிக்கை வெளியிட்டது.

**13-11-2023**

இஸ்ரேலின் முக்கிய பள்ளிக்கூடத்தின் வரலாற்று ஆசிரியர் இஸ்ரேலின் கொடுமை களுக்கு எதிராக இஸ்ரேலின் பள்ளி மாணவர் களிடம் கருத்து தெரிவித்ததால் கைது செய்யப் பட்டிருக்கிறார்.

காசாவை ஆட்சி செய்யும் ஹமாஸ், பெண்களை வன்புணர்வு செய்கிறார்கள் என்ற பொய்ப் பிரச்சாரத்தை இஸ்ரேல் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறது. அதனை பொய் என்று தெரிந்தும் பரப்புவதால், இஸ்ரேலின் வரலாற்று ஆசிரியர் தனது பள்ளிக்கூட ஆன்லைன் தளத்தில்,

“இஸ்ரேல் இராணுவம் பாலஸ்தீன பெண்களை வன்புணர்வு செய்யவில்லையா? 1948ல் பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்ததில் இருந்தே இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் பாலஸ்தீன பெண்களுக்கு இதைத்தான் செய்து வருகிறார்கள். இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் குழந்தைகளை கொல்லும் கொலைக்காரர்கள், இஸ்ரேல் அநியாயங்களை நிகழ்த்தி வருகிறது.”

என்று கருத்து சொன்னதற்காக வரலாற்று துறை ஆசிரியரை கைது செய்து சிறையில் தள்ளியிருக்கிறது இஸ்ரேல் அரசு.

*Hezbullah alarming weapon testing is expanding from several arenas* என்ற தலைப்பில் இஸ்ரேல் - காஸா இராணுவம் குறித்து பெரிய ஆய்வுக்கட்டுரை ஜெருசேலம் போஸ்ட் தளத்தில் வந்தது. குறிப்பாக இந்த ஆய்வுக்கட்டுரை இஸ்ரேலுக்கு அறிவுரை தரக்கூடியதாக எழுதப்பட்டிருக்கிறது. அதில்,

“Hezbullah இன்னும் முழுமையான போரில் இறங்கவில்லை. ஆனாலும், அவர்களின் வான்வழி தாக்குதல் இஸ்ரேலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. Israel weak air systemத்தை சரியாக குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுகிறது.”

ஹிஸ்புல்லாஹ் தனது தாக்குதலில் குறைந்த சக்தி வாய்ந்த ராக்கெட்டுகள் தான் பயன்படுத்தப் படுகிறது. அது சரியாக இலக்குகளை அடைந்திருக்கிறது. இதுவே இன்னும் வரும் நாட்களில் அதிக வீரியமான ராக்கெட்டுகளாக மாறும் பட்சத்தில் அதிக இழப்புகளை நாம் சந்திக்க வேண்டி இருக்கும். மிக குறைந்த செலவுள்ள ராக்கெட்டுகளில் ½ டன் எடைக் கொண்ட வெடிப்பொருட்களுடன் ராக்கெட்களை வீசி ஹிஸ்புல்லாஹ் தங்கள் இராணுவ பலத்தை காட்டியிருக்கிறார்கள். இதனை இஸ்ரேல் கவனமாக கையாள வேண்டும்.”

இப்போது ஹிஸ்புல்லாவின் தாக்குதல் என்பது *Hezbollah is also using the time to test the tools of its drones, in order to identify the weak points of Israel's*



*air defense systems* என்று சொல்கிறது. அதாவது, “இப்போது ஹிஸ்புல்லாஹ்வின் தாக்குதல் தங்களது ஆயுதங்களை பரிசோதிக்கும் நிகழ்வுகள் தான். சரியாக சொல்லவேண்டும் எனில் இஸ்ரேலின் இராணுவத்தின் ஓட்டைகளை தெரிந்து கொள்கிறார்கள். இனி போர் உண்மையில் தொடங்குமானால் பெரும் சக்தி வாய்ந்த குண்டுகளை ஹிஸ்புல்லாஹ் பயன் படுத்தும் போது இஸ்ரேல் பெரும் இழப்புகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.”

இஸ்ரேல் காசாவின் அல்-ஷிபா மருத்துவ மனைக்கு அருகில் படைகளை கொண்டு சென்று விட்டாலும், இன்னும் ஹமாஸ் சுரங்கங்களை கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த நிலையில் கத்தாரில் மொசாத்-ன் தலைவரும், கத்தார் நாட்டு தூதர்களும் இணைந்த சந்திப்பில் 100 பாலஸ்தீன மக்களுக்கு பகரமாக 100 பிடித்து வைக்கப்பட்ட இஸ்ரேலிய குடிமக்களை விட வேண்டும் என்ற பேச்சுவார்த்தை கிட்டத்தட்ட முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது நிறைவேற்றப் படுமானால் இஸ்ரேலுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும்.

ஹமாஸுடைய தளத்தை கண்டறிந்து அழிப்பதென்பது, *which until this stage and only relatively speaking, was low* என்று குறிப்பிடு கிறார்கள்.

இப்போதைய நிலையை வைத்து பார்க்கும் வரையில் அதற்கு பெரிதும் வாய்ப்பில்லை என்று கூறுகிறார்கள்.

இஸ்ரேலிய கமாண்டர்கள் பலர், போர்களத்தில் நின்று எதையும் சாதிக்காமல் ஹமாஸ் வீரர்களை பார்த்து சோர்வடைந்த முட்டாள்கள் என்று அறிக்கை விடுகிறார்கள். காசாவின் கடல் எல்லைகளின் நின்று இஸ்ரேலிய கொடியை நட்டு கொண்டாடுகிறார்கள். இப்படி அர்த்தம் இல்லாமல் இதையெல்லாம் விட்டு விட்டு உண்மையான போரில் இறங்கி முழு வீச்சில் ஈடுபட வேண்டும். இது மிகவும் கடினம் வாய்ந்த போர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

*‘Very risky’: Israel faces months-long campaign against Hamas Gaza tunnels* என்று அல்ஜெசீராவில் துருக்கியில் வசிக்கும் டிஃபன்ஸ் இராணுவ திட்டமிடலில் பங்குகொள்ளும் இராணுவ ஜெனரல் ரிச்சர்ட் அவுட்சன் ஹமாஸின் டனல்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில்,

“ஹமாஸின் டனல்கள் கட்டமைப்பு இன்னும் ஒரு புதிராகவே இருக்கிறது. உலகத்தின் அதிசிறந்த டெக்னாலஜிகள் இஸ்ரேலிடம் இருந்தாலும் அண்டர்கிரௌண்ட் குறித்து ஆய்வு செய்யும் டெக்னாலஜி இஸ்ரேலிடம் இல்லை.”

“ஹமாஸின் சுரங்கங்களின் ஆழம் 50 அடியில் இருந்து 200 அடி ஆழம் வரையில் இருக்கிறது. அதாவது 20 மாடிக்கட்டிடத்தின் உயரம். நிலத்திற்கு அடியே 20 மாடி கட்டிடத்தின் உயரத்திற்கு ஆழமிட்டு கீழே சுரங்கங்களை அமைத்திருக்கிறார்கள்.”

2021ல் இஸ்ரேலிய இராணுவத்தின் அனுமானத்தின் படி கிட்டதட்ட 300கி.மீ இந்த சுரங்கத்தளம் இருக்கிறது. குறுக்கு வெடுக்காக காசாவை அளந்தால் ரஃபா பார்டரிலிருந்து அஸ்-ஷிபா பகுதிக்கு 60கி.மீ, பக்கவாட்டாக அளந்தால் ஒரு 15கி.மீ தூரம். இதற்குள்ளாக 300கி.மீ அதுவும் இஸ்ரேலின் கணிப்பின்படியே ஒரு 300 கி.மீட்டருக்கு டனல் அமைத்திருக்கிறார்கள். ஆனால், அதனை இஸ்ரேலால் 12,000 காசா மக்களை கொன்றும் கண்டுபிடிக்கவில்லை.

இந்த டனல்களை உருவாக்கும் பணியை சாதாரணமாக ஹமாஸ் செய்யவில்லை மிகச் சிறப்பான தொழிற்நுட்பத்துடன் செய்திருக்கிறார்கள். ஏதேனும் ஒரு டனல் பாதையை கண்டுபிடித்து இஸ்ரேல் உள்நுழைந்து விட்டால், உள் நுழைந்த அத்தனை இஸ்ரேலிய வீரர்களையும் உள்நுழைந்த நிமிடத்திலேயே டனலையே அவர்களுடன் சேர்த்து புதைக்கும் அளவுக்கு தயார் செய்திருக்கிறார்கள்.

டனல்களின் பாதைகளை இஸ்ரேல் இராணுவம் கான்கிரீட் போட்டு மூடுவதையே திட்டமாக வைத்திருக்கிறார்கள். ஆனால், ஒரு டனலுக்கு பல்வேறு நுழைவாயில்களை ஹமாஸ் அமைப்பினர் வைத்திருக்கிறார்கள்.

இதனால், மிக எளிதாக முற்றாக அழித்து விடலாம் என்பது சவாலான ஒன்று என்று குறிப்பிடுகிறது இந்த கட்டுரை.

Hamas releases video showing what it says are fighters engaging in battles with Israeli forces

Footage released by Hamas on Tuesday (November 14) showed its military wing, the Al-Qassam Mujahideen, targeting Israeli army vehicles inside Gaza. Reuters was not able to confirm the location or the date the video was filmed. Israel launched its campaign last month to annihilate Hamas, the Islamist group that runs the Gaza Strip and that is officially dedicated to the destruction of Israel, after Hamas gunmen rampaged through southern Israel killing civilians. Around 1,200 people died in that attack and 240 were dragged to Gaza as hostages according to Israel's tally. Gaza medical authorities say more than 11,000 people have been confirmed killed, around 40% of them children.

– அபூ சித்தீக்


# இஸ்லாம் ஒன்றே வழி

புத்தம் புதிய மறு பதிப்பு




- ஒவ்வொரு நாடும். ஒவ்வொரு தனி மனிதனும் கிடைப்பதையெல்லாம் தமதாக்கிக்கொள்ள வேண்டும் என்றே ஆசைப்படுகின்றான். இதுதான் இன்று வல்லரசுகளிடையே காணும் ஊமைச் சண்டைகளுக்குக் காரணம். விவசாயத் துறையில் கண்டெடுத்திருக்கின்ற புதுமையான கண்டுபிடிப்புகள், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இயற்கை வளங்கள், பெட்ரோல், கச்சாப் பொருள்கள் இவையெல்லாம் மனித இனத்திற்கு நன்மை பயப்பதாக இல்லை. மாறாக மனிதனுக்குத் தீமை பயப்பதாகவே இவை மாறியுள்ளன.

- சிறிய நாடுகளெல்லாம் வல்லரசு களின் நயவஞ்சகத்திற்கும். சதிகளுக்கும் உட்பட்டுத் தங்களது மனித உரிமை களையும் சுதந்திரத்தையும் இழந்து நிற்கின்றன. நாம் மேலே சொன்ன கண்டு பிடிப்புகள் பெரிய நாடுகளில் இடம் பெறுமேயானால் அந்தக் கண்டுபிடிப்புகள் மனித இனத்திற்கும் உலக அமைதிக்கும் ஒரு பெரும் ஆபத்தாகவே முடியும். இந்தக் கண்டுபிடிப்புகளெல்லாம் இந்தப் பெரிய நாடுகவர்களின் ஆயுத பலத்தையும் ஆதிக்க பலத்தையும் அதிகப்படுத்தவே பயன்படுத்தப்படும். இதனால்தான் நமது கல்வியறிவு, விஞ்ஞானம், இயற்கை வளங்கள், திறமைகள் இவையெல்லாம் மனிதனை அழிப்பதற்கும் இமைப்பொழுதில் இந்த உலகத்தையே அழிக்கின்ற விதத்திலும் பயன்படுத்தப்படுகின்றன எனக் கூறகின்றோம். - நூலிலிருந்து

மூலம்: அனிசுத்தீன் அஹமது
தமிழில் : மு.குலாம் முஹம்மது, M.A., in JMC.,

வேர்கள் வெளியீட்டகம்

விலை – ரூ.120/–

போன் : 7401213394 / 7358278146 / 8148129887






# பாலஸ்தீன் பற்றி காந்தியடிகள் சொன்னதென்ன?

*யூதர்கள் தீவிரவாத செயல்களின் வழி பாலஸ்தீனில் தங்களுக்கொரு நாட்டை உருவாக்கிட ஆயத்தமானார்கள்.*

*இந்தப் பின்னணியில் காந்திஜி தனது ஹரிஜன் பத்திரிகையில் ஜூலை **21, 1946** இல் ஓர் கட்டுரையை எழுதினார்கள் அது:*

*“உலகம் யூதர்களுக்கு பல அநீதிகளை இழைத்தது. ஐரோப்பாவில் அவர்கள் வாழுமிடங்களைத்தான் சேரிகள் 'Ghet- tos' என அழைத்தார்கள். அவர்களை அவ்வாறு கஷ்டங்களுக்கு ஆட்படுத்திடவில்லை என்றால் அவர்கள் பாலஸ்தீனை நோக்கிவரும் நிலை ஏற்பட்டிருக்காது. மொத்த உலகமும் அவர்களின் வசிக்குமிடமாக ஆகி இருக்கும்.”*

*“ஆனால் இப்போது என் கருத்துப்படி அவர்கள் பாலஸ்தீனில் தங்களைத் திணிக்க எண்ணற்ற தவறுகளைச் செய்கின்றார்கள். அவர்கள் பாலஸ்தீனில் தங்களைக் கட்டாயமாக அமர்ந்திட பிரிட்டன், அமெரிக்கா ஆகியவற்றின் உதவியை நாடுகின்றார்கள். இப்போது தீவிரவாதத்தை முழுமையாக நாடுகின்றார்கள். அவர்கள் உலகக் குடிமக்களாசு இருந்திருந்தால் இன்றும் இனிவரும் நாள்களிலும் கண்ணியமிக்கவர்களாக இருந்திருப்பார்கள். அவர்களின் உழைப்பும் சுறுசுறுப்பும் அவர்களை உலகின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ள செய்திருக்கும்.”*

“கிறிஸ்தவ உலகம், புதிய ஏற்பாட்டை தவறாகப் புரிந்துகொண்டு அவர்களைத் (யூதர்களைத்) தனிமைப்படுத்தி ஏராளமான கொடுமைகளைச் செய்துவிட்டது. இது கிறிஸ்தவ உலகின் மீது விழுந்த மாறாத வடுவாகும். இன்னும் யூதர்களை அவர்கள் மாச்சர்யத்தோடு ஏன் பார்க்கின்றார்கள்? ஏதோ ஒருவன் செய்ததற்காக ஓர் சமுதாயத்தைத் தண்டிப்பது சரியல்ல.”

“ஐன்ஸ்டின் ஐ போன்ற ஒரு யூத விஞ்ஞானி ஒரு கண்டுபிடிப்பைக் கண்டுபிடித்துத் தந்தான் என்றால், அதனால் வரும் கீர்த்தி அவனையே சாரும். அதே நேரத்தில் அவனைப் போன்ற ஒருவன் தவறு செய்கின்றான் என்றால் அதனால் வரும் பழியும் அவன் ஒருவனையே சாரும். அல்லாமல் அவன் சார்ந்த சமுதாயத்தைச் சாராது.”

“யூதர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள் (கிறிஸ்தவ உலகத்தால்) என்ற உண்மை அவர்களுக்கு (யூதர்களுக்கு) அமைதியான வழிமுறைகளின் ஆற்றலை அவர்களுக்கு உணர்த்தி இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் பிரிட்டன் நாட்டின் ஆயுதங்களையும் அமெரிக்க நாட்டின் பணத்தையும் தங்களது தீவிரவாதத்தையும் நம்பி, தங்களுக்கு எந்தத் தீமையையும் செய்யாத மக்களின் பூமியில் ஏன் தங்களை நட்டுக்கொள்ள நாடுகின்றார்கள்? அவர்கள் பாலஸ்தீனில் தங்களைத் திணித்திட ஏன் தீவிரவாதத்தை நாடுகின்றார்கள்?”

- மோகன்தாஸ் கரம் சந்த் சாந்தி

**காந்திஜியின் கடிதம் ஒரு வரலாற்றுப் பார்வை**

காந்திஜி அவர்களின் கடிதம் திரும்பத்திரும்ப ஓர் உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டு கின்றது. அது கிறிஸ்தவ உலகம் பல கொடுமை களையும், குரூரங்களையும் யூதர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டது. அரபுக்கள் யூதர்களுக்கு எந்தக் கொடுமையையும் செய்திடவில்லை.

அதே போல் பாலஸ்தீனில் தீவிரவாதத்தின் மூலம் தான் யூதர்கள் தங்களைத் திணித்துக் கொண்டார்கள் என்பதையும், அதற்கு அமெரிக்காவின் பணமும் பிரிட்டனின் ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டன என்பதும் தெளிவுபடுத்துகின்றார் காந்திஜி அவர்கள்.

யூதர்கள் தொடக்க நாட்களில் ஐரோப்பாவில் தான் தங்களுக்கு ஒரு நாடு வேண்டும் எனக் கோரினார்கள். ஆனால்யூதர்களை (காந்தியடிகள் குறிப்பிடுவதைப்போல் தீண்டட தகாதவர்களாக கருதிய) ஐரோப்பியர்கள் அவர்களை பாலஸ்தீன் நோக்கி அனுப்பினார்கள். இதற்குத் தேவையான வகையில் வேதங்களில் திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள்.

யூதர்கள் வரலாறு முழுவதும் தண்டிக்கப் பட்டிருக்கின்றார்கள். காரணம் காழ்ப்போ கசப்போ அல்ல. மாறாக அவர்கள் தங்களை அரவணைத்த சமுதாயங்களையெல்லாம் வஞ்சித்திருக்கின்றார்கள், கொலை செய்திருக் கின்றார்கள். செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை உலகம் நன்றாக அறியும்.

இதே போல் வரலாறு முழுவதும் அவர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அதனால்தான் அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இனி யூதர்கள் இந்த உலகம் முழுவதும் தங்கள் ஆட்சியின் கீழ் தான் இருக்க வேண்டும் என்ற வெறியோடு செயல்பட்டு வருகின்றார்கள். இதனை அகண்ட இஸ்ரேல் என்று அவர்கள் அழைக்கின்றார்கள்.

இந்த அகண்ட இஸ்ரேலையும் அவர்கள் வேதங்களில் வாக்களிக்கப்பட்டது என்று கூறுகின்றார்கள்.

அவர்கள் (யூதர்கள்) காந்தியடிகளின் காலத்தில் தாம் தீவிரவாதத்தைக் கையாண்டார்கள் என்றில்லை. மாறாக இன்றளவும் அவர்கள் அதையே கையாண்டு வருகின்றார்கள். பெண் களையும் குழந்தைகளையும் கொலை செய்வதை வழிமுறையாகக் கொண்டவர்கள் இதில் இன்றைக்கும் அமெரிக்காவும் பிரிட்டனும் துணை நிற்கின்றன.

அனைவரின் ஆதங்கங்களையும் தேற்றும் அளவில் இப்போது ஹிஸ்புல்லாஹ். ஹமாஸ் போன்ற அமைப்புகள் அவர்களைத் தடுத்து நிறுத்தி வருகின்றன.

அவர்களின் கைகளிலிருந்து பிரவாகமெடுத் தோடிய அநியாயங்கள் தடுக்கப்பட்டுள்ளன.

ஆதாரம் :

பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு

- மு.குலாம் முஹம்மது

வெளியீடு

வேர்கள் வெளியீட்டகம்

Vaigarai Velicham Official










# பாலஸ்தீன போராளிகள் இஸ்ரேல் போர்....!

## "வைகறை வெளிச்சம்" யூடியூப் சேனலின் பங்கு...!

அன்பார்ந்த வாசகர்களே! அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேல் மீதான ஹமாஸ் இஸ்லாமிய போராளிகளின் போர் தொடங்கிய நாள் முதல், தொடர்ந்து நமது யூடியூப் சேனல் வழி உண்மை செய்திகளை மக்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். தினமும் காலை 10 மணிக்கு வெளியாகும் நமது வீடியோக்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல ஆதரவுகள் கிடைத்த வண்ணம் உள்ளன.

**தீவிரவாதிகள் அல்ல! அவர்கள் போராளிகள்!**

தினமும் நாம் வெளியிட்ட வீடியோ பதிவுகள், தமிழ் சமூகத்தில் அரபு நாடுகளில் நடக்கும் போர்கள் குறித்தும், அதில் ஐரோப்பா மற்றும் ஐக்கிய நாடுகளின் சதிகள் குறித்தும் நல்லதொரு புரிதலை ஏற்படுத்தியிருக்கின்றது. அதில் முக்கியமான ஒன்று, இஸ்ரேலுக்கு எதிராக பாலஸ்தீனத்தை மீட்க போராடிக் கொண்டிருக்கும், ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ், ஹவ்தீஸ், இஸ்லாமிக் ஜிஹாத் போன்ற இயக்கங்களை, "தீவிரவாதிகள்" என்ற நிலையிலிருந்து, "தனது மண்ணிற்காக போராடும் போராளிகள்" என்ற கருத்தை நோக்கி மக்களை நகர்த்தியது தான்.

யூடியூப், பேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் ஆக்டிவாக இருக்கும் பத்திரிகையாளர்கள், வரலாற்றாய்வாளர்கள், சமூக ஆர்வலர்கள் எல்லாம் இந்த முறை பாலஸ்தீன போராளிகளின் பக்கம் நின்று இஸ்ரேல் மற்றும் அதற்கு பின்னாலிருக்கும் அமெரிக்காவின் முகத்திரைகளை கிழித்து தொங்கவிட்டனர். அவர்கள் பதிவிட்ட வீடியோக்கள் லட்சக்கணக்கான மக்களால் பார்க்கப்பட்டதோடு அல்லாமல், தமிழ் செய்தி சேனல்களில், அவ்வப்போது சில நேரங்களில் பதிவிடப்படும் செய்திகளில், ஹமாஸை "தீவிரவாதக்குழு" என்று சொல்லி வெளியிடப்படும் பதிவுகளுக்கெல்லாம் பதிலளித்த மக்கள், "அவர்களை தீவிரவாத குழுக்கள் என்று சொல்லாதீர்கள்! மாறாக சொந்த நாட்டை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்க போராடும் போராளிகள்" என்று தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

**உடைந்தது இஸ்ரேல் எனும் கற்பனைக் கோட்டை!**

ஹமாஸ் இஸ்ரேலை தாக்கும் போதெல்லாம், இஸ்ரேல் ஹமாஸை திருப்பி தாக்குவது போலவும். அதில் ஹமாஸ் இந்த உலகிலிருந்து அகற்றப்பட்டு விட்டதைப் போலவும், செய்திகள் வரும். நாமும், *Pray for gaza, Stop war on palestine* என்றெல்லாம் ஹேஷ்டேகுகளை பயன்படுத்தி துஆ செய்து வருத்தப்பட்டு கொண்டிருப்போம். ஆனால் இந்த முறை நாம் நமது சேனலில் தொடர்ந்து இஸ்ரேல் வாங்கிய அடிகளையும், இஸ்ரேலில் குடியமர்ந்த ஆக்கிரமிப்பாளர்களான




யூதர்கள் இஸ்ரேலை விட்டு நித்தமும் ஓடிக்கொண்டிருப்பதையும், டெக்னிகல் ரீதியாக இஸ்ரேல் எழுந்து நிற்கவே முடியாமல் வீழ்ந்துள்ளது என்பதையும் மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டினோம். அதன் பின் அக்டோபர் 10க்கு பிறகு தமிழ் யூடியூப் உலகம் இஸ்ரேலின் கையாலாகாத்தனத்தை பேச ஆரம்பித்து விட்டது. நமது சேனலில் நாம் ஆதாரங்களாக சொல்லும் செய்தி தளங்களை அவர்களும் பின் தொடர்ந்து, தினமும் பாலஸ்தீன போராளிகளிடம் இஸ்ரேல் வாங்கும் அடிகளை பேச ஆரம்பித்தனர். இப்போது வரை அது தொடர்ந்தும் வருகின்றது. அல்ஹம்துலில்லாஹ்!

**நமது பேஸ்புக் பக்கம் முடக்கம்**

இப்படி யூடியூப் உலகம் பால்ஸ்தீன போராளிகளின் பக்கம் நின்றாலும், முகநூல் எனும் பேஸ்புக் நிலையோ வேறாக இருந்தது. அங்கே இஸ்ரேலுக்கு ஆதரவான செய்திகள் மட்டுமே மக்கள் மத்தியில் நன்றாக “ரீச்” செய்யப்பட்டது. இஸ்ரேலுக்கு எதிரான அல்லது பாலஸ்தீன போராளிகளுக்கு ஆதரவான செய்திகளை வெளியிடும் தளங்கள் பெரும்பாலும் முடக்கப்பட்டது.

அந்த வகையில் அக்டோபர் 23 அன்று நாம் வெளியிட்ட ஒரு Shorts வீடியோவை காரணம் காட்டி நமது பேஸ்புக் பக்கம் முடக்கப்பட்டது. அந்த பதிவில், “ஹமாஸின் கடைசி ராணுவ வீரன் இருக்கும் போது கூட இஸ்ரேலுக்கு அழிவுதான்.” என்ற டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழில் அக். 23இல் வெளிவந்த செய்தியைத்தான் பதிவிட்டிருந்தோம். அதற்கான ஆதாரங்களையும் முகநூலிடம் கொடுத்து “இந்த நடவடிக்கை அநியாயமானது” என்று நம் பக்கம் மீது எடுக்கப்பட்டிருந்த Actionக்கு எதிராக சொல்லியிருந்தோம். ஆனால் பேஸ்புக் அதனை கண்டுகொள்ளவே இல்லை.

இப்படியான சில சோதனைகளையும் எதிர்கொண்டு மக்களுக்கு தினமும் உண்மைகளை செய்திகளாக வழங்கிக் கொண்டிருக்கின்றோம். வழக்கம் போல் வாசகர்கள் தொடர்ந்து தங்களது ஆதரவுகளை வழங்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம். இன்ஷா அல்லாஹ்!

**– அட்மின் குழு**






# ஹமாஸ்–இன் அல் காஸ்ஸம் படைப்பிரிவு வரலாறு...!

இஸ்ஸத் அல் காஸம் என்பவர் இதே பாலஸ்தீன பூமியில் பாலஸ்தீனத்தை மீட்க வேண்டும் என்பதற்காக மிகப்பெரியதொரு ஜிஹாதை நடத்தியவர்.

இஸ்ஸத் அல் காஸம் அவர்கள் முதன் முதலில் ஆங்கிலேயர்களையும், யூதர்களையும் எதிர்த்தார்கள் என்று சொல்ல வேண்டும். அதற்கடுத்தார் போல் இவர்கள் அதிக அளவில் அடிவாங்கியது இஹ்வானுல் முஸ்லிமூன் என்ற இயக்கத்திடம் தான் இது 1947 ல் நடந்தது.

அல் காஸம் அவர்களுடைய ஜிஹாத் 1929 இல் இருந்து 1935 வரை நடந்தது.1946 இல் யூத நாடு ஒன்று உருவாகப் போகின்றது என்று தெரிந்தவுடன், இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தை சார்ந்தவர்களும் எகிப்திய இராணுவமும் சேர்ந்து ஜிஹாதை நடத்தினார்கள். அதன் பிறகு இப்பொழுது நடந்து கொண்டிருக்கக் கூடிய ஜிஹாத். இந்த முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் ஊக்கத்தினால் வந்தது தான் ஹமாஸ் என்ற அமைப்பும். நமது காஸா பகுதியில் ஆட்சி செய்வது ஹமாஸ் இயக்கம், அந்த ஹமாஸ் இயக்கத்திற்கு ஒரு பாதுகாப்பு படை இருக்கிறது அந்தப் படைக்கு "அல் காஸம் பிரிகேட்ஸ்" (Al-Qassam Brigades)என்று பெயர்.



ஏன் அதில் அல் காஸம் அவர்களுடைய படத்தினை வைத்திருக்கிறார்கள் எனில்,இஸ்ஸத் அல் காஸம் அவர்கள் 1882ல் சிரியாவில் பிறந்தவர். சிரியாவில் பிறந்து சிரியாவை ஆங்கிலேய கூட்டுப் படைகள் ஆக்கிரமிக்க வரும்போது அதற்கு எதிராக "ஆயுதம் தாங்கிப் போராடிய ஒரு இமாம்."

அவர் அல்-அஷ்கர் வரையிலும் பயின்று பட்டம் பெற்ற ஒரு பெரிய இமாம். மார்க்க அறிஞர். பல பள்ளிவாசல்களில் இமாமாக இருந்திருக்கிறார்கள். பாலஸ்தீன வரலாற்றோடு பின்னிப்பிணைந்த ஹாஜி. அமீன் உசேன் என்றொரு சகோதரர் அவர் கடைசி காலகட்டத்தில், பாலஸ்தீன் பைத்துல் முகத்தஸ் பள்ளிவாசலில் முஃப்தியாகவும், அந்தப் பகுதியினுடைய நிர்வாகியாகவும் இருந்தவர். அவருடைய உதவியாளராகவும் இஸ்ஸத் அல் காஸம் அவர்கள் இருந்திருக்கிறார்கள்.இஸ்ஸத் அல் காஸம் லெபனானுக்கு சென்று அங்கு ஒரு பள்ளிவாசலில் இமாமத் செய்து கொண்டிருக்கும் போது லெபனானை ஆங்கிலேயப் படைகள் தாக்க வருகின்றன, அங்கு அந்த ஆங்கில படை களுக்கு எதிராக ஒரு ஜிஹாதை தொடங்குகிறார்.

அதன் பிறகு பாலஸ்தீனம் துண்டாடப்பட இருக்கின்றது என்ற செய்தி அவருக்கு வருகிறது.

அதாவது 1924 வரைக்கும் நாம் உதுமானிய கிலாஃபத்தின் கீழ் இருந்தோம்.1917-இல் அதாவது முதல் உலக மகா யுத்தத்தினுடைய கடைசி பகுதியில் அதாவது 1918 இல் முதல் உலக மகா யுத்தம் முடிந்தது.1917 இல் பாலஸ்தீன பூமி ஆங்கிலேயர்களினுடைய கைகளுக்கு போய் விட்டது. உலகப் போரின் ஒரு பகுதியாக பாலஸ்தீன பூமியை பிடித்துக் கொண்டார்கள். அப்பொழுது இப்போது இருக்கின்ற ஐக்கிய நாடுகள் சபையைப் போல் "League of Nations" என்றொன்று இருந்தது அது ஒரு பன்னாட்டு குழுமம்.

அது பாலஸ்தீனப் பகுதியை, பிரிட்டனுடைய தற்காலிக அதிகாரத்தின் கீழ் கொடுப்போம் என்று கொடுத்தது. இந்த பிரிட்டன் என்ற ஆங்கில நாடு அதாவது கிறிஸ்தவ சகோதரர்கள் அதிகமாக வாழக்கூடிய அந்த நாடு, பாலஸ்தீன் அவர்களின் கைகளில் கிடைத்தவுடன் அவர்கள் யூதர்களுக்கு ஒரு உதவியை செய்ய நாடினார்கள்.

ஏனென்றால் 1914இல் தொடங்கி 1918இல் முடிந்த உலக மகா யுத்தத்தில் இவர்கள் ஆங்கிலேயர்களுக்கு ஆள்காட்டக் கூடிய வேலை களை செய்தார்கள் யூதர்கள். எப்பொழுதுமே இவர்களுக்கு இந்த ஆள்காட்டும் வேலை போகாது, துரோகம் செய்வது இவர்களுக்கு கூடவே பிறந்தது.

1917-இல் பால்ஃபர் பிரகடனம் ஒன்றின் மூலம் இவர்களுக்கு ஒரு நாடு கிடைப்பதற்கு ஆங்கில நாடு உதவியாக இருக்கும். அதற்கு பிரான்சும் மற்ற நாடுகளும் உதவி செய்யும் என்ற ஒப்பந்தம். இதைத்தான் பால்ஃபர் பிரகடனம் இஸ்ரேல் என்ற நாடு உருவாவதற்கு முக்கியமான காரணம் என்று கூறுவார்கள், இது 1917இல் நடந்தது.

1918-ல் யுத்தம் முடிந்து அதன் பிறகு மெல்ல மெல்ல இவர்கள் பாலஸ்தீனில் யூதர்களை குடியேற்றத் தொடங்கினார்கள். இது பாலஸ்தீன மக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இவர்கள் உலகெங்கிலும் இருந்து 58 ஆயிரம் யூதர்களை பாலஸ்தீனத்திற்கு வர சொன்னார்கள். இதுதான் உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட பூமி என்று கூறி அவர்களை வரச் சொன்னார்கள். இப்படி வந்தவர்களை, முஸ்லிம்கள் வாழக்கூடிய கிராமங்களில் இறங்கி அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது குண்டு வெடிப்புகளை நடத்தி அவர்களை பிணங்களாக்கி, எஞ்சிய வீடுகளை குடிசைகளாக மாற்றி குடியேற்றினார்கள்.

"ஒரு தீவிரவாதத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நாடு உண்டு என்று சொன்னால் உலகத்தில் அது இஸ்ரேல்தான்." ஒரு கிராமத்தையே இவர்கள் அழித்துவிட்டு அந்த இடத்தில் யூதர்களை குடியேற்றினார்கள். இப்படி குடியேறியவர்களில்

அவர்களிடத்தில் இரண்டு தீவிரவாத குழுக்கள் இருந்தது. அந்த இரண்டு தீவிரவாத குழுக்களும் இணைந்தது தான் இப்பொழுதைய இஸ்ரேலிய ராணுவம். ஆகவே இந்த தீவிரவாத குழுக்களின் மூலம் முஸ்லிம்களைப் பீதிவயப்பட வைப்பது. ஓரிரு கிராமங்களில் மட்டும் குண்டு வீசி விட்டால் அடுத்த நாள் ஒரு செய்தியை பரப்பினாலே போதும். இன்றைக்கு இந்த கிராமத்தில் குண்டு வீசப் போகிறார்கள் என்று கூறிவிட்டால் முஸ்லிம்கள் அந்த இடத்தை விட்டு அகன்று விடுவார்கள். இவர்கள் தானாகவே வந்து அங்கு அமர்ந்து விடுவார்கள்.

இதனை ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று நினைத்த இஸ்ஸத் அல் காஸம் அவர்கள் அங்கிருந்த பாலஸ்தீன மக்களை போதுமான அளவிற்கு இணைத்துக்கொண்டு, அவர் பல நாடுகளில் இமாமத் செய்தவர், ஓதி கொடுத்தவர், படைகளில் இருந்தவர் அங்கே எல்லாம் தனக்கு இருந்த தொடர்புகளை பயன்படுத்தி ஒரு பெரிய படையை ஏற்பாடு செய்து 1929இல் இந்த தீவிரவாத ஆக்கிரமிப்பிற்கு எதிராகவும், ஆக்கிரமிக்க வருபவர்களையும் தடுத்து நிறுத்தி தாக்கத் தொடங்கினார். யூதர்கள் ஏதோ ஒரு குழு வந்து தாக்குகிறது அதை சமாளித்து விடலாம் என்று நினைத்தார்கள் ஆனால் அது நடக்க வில்லை.

ஆனால் அந்த பகுதி எல்லாம் பிரிட்டனுடைய காவல் துறையின் கீழ் இருந்தது. மூலை முடுக்கெல்லாம் அந்த காவல்துறையினர் தான் இருந்தார்கள். இங்கே இருக்கின்ற காவல்துறை எப்படி சங்கிகள் கொலை செய்யும் பொழுது, பாதுகாப்பு அளிக்குமோ குஜராத்தில் நடந்தது போல, அதே போல் தான் அவர்கள் தீவிரவாத செயல்களை செய்யும் போது, அப்பாவி முஸ்லிம்களை பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம்களை அந்த இடத்தை விட்டு அகற்றும் போது இந்த காவல்துறை உதவியாக இருந்தது.

ஆனால் இஸ்ஸத் அல் காஸம் அவர்கள் மிகவும் ஆழமான அறிவு கொண்டவர். அவர் தன்னுடைய தோழர்களிடம் கூறினார், நாம் வெறும் யூதர்களை மனதில் வைத்துக் கொண்டு இந்த போரை நடத்தினால் அவர்களை தடுத்து நிறுத்தி விடலாம் என்று நினைக்கக் கூடாது. அவர்களுக்கு பக்கத் துணையாக வரக்கூடிய ராணுவத்தையும் சேர்த்து தான் ஆங்கில ராணுவத்தையும் சேர்த்து தான் எதிர்த்தாக வேண்டுமென்று அவர் அந்த படையை தயார் செய்து வெறும் கையோடு சண்டை போட்டுக் கொண்டு நின்றார்கள். இஸ்லாமிய வரலாற்றில் வெறும் கையோடு சண்டையிடுவது புதிதானதல்ல.

(இஸ்ஸத் அல் காஸம் அவர்கள் உமர் முக்தாரின் இயக்கத்தில் திருப்போலியில் சிறிது நாட்கள் இருந்திருக்கிறார்.) அவர் அந்த எதிர்ப்பை பயங்கரமாகக் காட்டினார். உடனே இன்றைக்கு எப்படி பிரான்சிலிருந்தும், ஜெர்மனியில் இருந்தும், அமெரிக்காவில் இருந்தும், பிரிட்டனில் இருந்தும் படைகள் வரும் என்று சொல்கிறார்களோ அதேபோல் உலகமெங்கிலும் இருந்து ஆங்கில நாடு, லீக் ஆப் நேஷன்ஸ் வழியாக படைகளை திரட்டியது.

அதாவது ஐக்கிய நாடுகள் சபையின் வழியாக படையை திரட்டியது. எப்படி படையை திரட்டியதென்றால், பாலஸ்தீன் எங்களுக்கு கீழ் தற்கால அதிகாரத்தின் கீழ் இருக்கும் என்று கூறிவிட்டீர்கள். ஆனால் நான் அங்கு இருப்பவர்களை பாதுகாக்க இயலவில்லை காரணம் அங்கு ஒரு தீவிரவாத குழு எழுந்திருக்கிறது.

எவரேனும் விடுதலைக்காக போராடினார்கள் என்றால் அவர்களை தீவிரவாதி என்று கூறி விடுகிறார்கள். இப்படி அனைவரிடமும் இங்கு ஒரு தீவிரவாத குழு இருக்கிறது உங்கள் படைகளை அனுப்புங்கள் என்று கூறி, உலகெங்கிலும் இருந்து திரண்டு வந்த பன்னிரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட படைவீரர்கள், யூதர்களுடைய இரண்டு தீவிரவாத அமைப்புகள் இவர்கள் அனைவரையும் வெறும் 800 சகோதரர்களை மட்டும் வைத்துக்கொண்டு எதிர்கொண்டார்கள். அடி தாங்க முடியாமல் அவர்கள் திரும்பி ஓடினார்கள். ஆங்கிலேயர்களும் அவர்கள் பின்வாங்க வேண்டிய நிலைக்கு ஆளானார்கள்.

ஆங்கிலேய படைகளுக்கு உள்ளேயே ஒரு குழப்பம் வந்தது, ஏன் எங்களுடைய கடவுளை கொலை செய்த யூதர்களுக்காக நாங்கள் இங்கு வந்து சண்டை போட வேண்டும் என்று. ஆனால் பிரிட்டனும் உலக நாடுகளும் மிக கவனமாக இருந்து யூதர்களை வேறெங்கிலும், ஐரோப்பா விலும் வைத்து விடக்கூடாது இவர்களை பாலஸ்தீனத்தில் தான் குடியமர்த்த வேண்டும் என்று வலுக்கட்டாயமாக உலகெங்கிலும் இருந்து பாலஸ்தீனுக்கு வர வைத்தார்கள்.

ஆங்கிலேய படைகளும் யூதர்களுடைய குண்டர்களும் அடி வாங்கவே உலகெங்கிலும் இருந்து யூதர்கள் வருவது குறைந்தது. ஆகவே இவர்கள் இருக்கக்கூடிய யூதர்களை கொண்டு ஒரு நாட்டை உருவாக்க இயலாது. ஏனென்றால் மிக குறைந்த அளவு மக்கள் தொகை தான் தொடக்க காலத்தில் அது மூன்று சதவீதமாகத் தான் இருந்தது.

ஆகவே உலகமெங்கிலும் இருந்து ஆட்களை கொண்டு வர வேண்டும் என்று சொன்னால், இஸ்ஸத் அல் காஸம் அவர்களுடைய படையை அழித்தாக வேண்டும் என்று மிகப்பெரிய திட்டத்தை மேற்கொண்டார்கள். நான் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் மலைகளிலும் பொந்துகளிலும், பதுங்கி இருந்து தங்களுடைய போரை நடத்தினார்கள் அதனை கொரில்லா போர் என்று கூறுகிறார்கள்.

அந்த யுத்தத்தை நடத்தி நன்றாகவே கலங்கடித்தார்கள், பாலஸ்தீன மக்கள் அவர்கள் எங்கே பதுங்கி இருக்கிறார்களோ அந்த இடத்திற்கு சென்று சாப்பாடு கொடுத்தார்கள் என்பதற்காகவே கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். தங்களை பாதுகாக்க வந்த படைவீரர்கள், இயக்கத்தவர்கள் எங்காவது இவர்கள் பதுங்கி இருக்கிறார்கள் என்று தெரிந்து உணவிற்கு கஷ்டப்படுவார்களே என்று உணவு கொண்டு சென்றால் அவர்களையும் கொலை செய்திருக்கிறார்கள். இவர்களுடைய தகிடுதத் தங்களை எல்லாம் தாண்டி உணவு கொண்டு சென்று கொடுத்த பெண்களுடைய வரலாற்றை எழுத ஒரு கோடி ஏடு வேண்டும். அந்த சகோதரிகள் செய்த தியாகம்! கடைசியில் நமது இஸ்ஸத் அல் காஸம் அவர்களுடைய தலைக்கு இவ்வளவு ரூபாய் என்று அறிவித்து விட்டார்கள்.

1929லிருந்து 1935 வரைக்கும் அவர்களை ஒன்றும் செய்து விட முடியவில்லை. 1935இல் ஒரு பெரிய பஞ்சம் பிடித்தது, பணம் கிடைத்தால் ஆளைக் காட்டுவோம் என்ற சிலர் வந்து விட்டார்கள்.

சில துரோகிகள் அவர் இருக்கும் இடத்தை கூறிவிட்டார்கள். அவர் ஒரு குடிசையில் இருக்கும் போது இங்கே தான் ஒளிந்திருக்கிறார் என்று கூறி விட்டார்கள். அந்த குடிசையில் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் இஸ்ஸத் அல் காஸம், அவரோடு போரிடுவதற்கு தயாராக வந்த 12 பேர், ஒரு ஒன்பது ஆலிம்கள். மொத்தம் 23 பேர் அவர்களை சுற்றி நின்றது 600 ஆங்கில பிரெஞ்சு படைகள், யூதர்களுடைய குண்டர்களும் இதில் உண்டு. ஆனாலும் 12 நாட்கள் தாக்கு பிடித்துள்ளார்கள்.

பன்னிரண்டாவது நாளும் கேட்பதையெல்லாம் தருகிறோம் சரணடைந்து விடுங்கள் என்று ஆங்கிலப்படைகள் சொல்லவே முடியாது என்று கூறிவிட்டார்.

கடைசியில் சரணடையாமல் போராடி, அவர் நவம்பர் 19ஆம் தேதி 1935இல் ஷஹீதானார்கள். எப்படி இங்கு திப்பு சுல்தான் இறந்தவுடன் இனி



இந்தியா நமக்குத்தான் என்று சொன்னார்களோ, அதேபோல் இஸ்ஸத் அல் காஸம் அவர்கள் இறந்து விட்டார்கள் என்ற செய்தி தெரிந்தவுடன் இனி பாலத்தின் யூதர்களுக்கு தான் என்று பிரகடனப்படுத்தினார்கள்.

அவர் ஷஹீதான பிறகு பாலஸ்தீனில் தான் அடக்கப்பட்டு இருக்கிறார் ஆனால் அவர் பிறந்தது சிரியாவில், அது ஹமாஸ்பகுதியில் இருந்து கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள். அதற்குப் பிறகு பாலஸ்தீனத்தில் முஸ்லிம்களை பாதுகாக்க வந்த எல்லா அமைப்புகளும் இஸ்ஸத் அல் காஸம் அவர்களின் பெயரில்தான் ஏதாவது ஒன்றை வைத்துக் கொள்வார்கள்.

இப்பொழுது இருக்கின்ற ஹமாஸ் உடைய ராணுவ பிரிவிற்கு என்ன பெயர் என்றால், இஸ்ஸத் அல் காஸம் பிரிவு என்று வைத்துள்ளார்கள். அதன் பிறகு அவர்களுடைய சக்தி வாய்ந்த ராக்கெட்டுகளுக்கு எல்லாம் அல் காஸம் ராக்கெட்டுகள் என்று பெயர் வைத்துள்ளார்கள். ஏனென்றால் எட்டு வருடம் உலக படைகளையே எதிர்த்து நின்றவர். கடைசி நேரம் வரையிலும் நான் சரணடைய மாட்டேன், அல்லாஹ்வின் பாதையில் வெற்றி அல்லது வீர மரணம் இதைத்தான் நான் தேர்ந்தெடுப்பேன் என்று உறுதியாக நின்றவர்.

ஆனால் அவர் ஷஹீதானவுடன் அது நின்றுவிடவில்லை, ஆங்காங்கே சிதறிக் கிடந்த அவர்களுடைய தோழர்கள் எல்லாம் இந்த போரை தொடர்ந்து நடத்தினார்கள் என்பது வரலாறு.

பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு என்ற நூலை நமது வேர்கள் பதிப்பகம் வெளியிட்டுள்ளது, அதில் இஸ்ஸத் அல் காஸம் அவர்களுடைய வரையிட்டு காட்டப்பட வேண்டிய இந்த வரலாறு பதியப்பட்டு இருக்கிறது. வாசகர்கள் முடிந்தால் அதனை படிக்கலாம்!

**MGM**



# ஹமாஸ் / இஸ்ரேல் போரை வைத்து

## இந்தியாவில் வகுப்புவாத மோதல்களை திட்டமிடும்

# பாஸிஸ்டுகள்...!

இஸ்ரேல் - பாலஸ்தீன போரில் போர் தளங்களிலிருந்து வெளியாகும் வீடியோ பதிவுகளை பயன்படுத்தி இஸ்லாமோஃபோபியாவை - முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பிரச்சாரத்தை பரப்பும் நாடுகளில் முதன்மையான நாடாக இந்தியா மாறியுள்ளது. குறிப்பாக இந்தியாவில் ஆட்சியில் இருக்கும் பாசிச பா.ஜ.க. கட்சியின் தலைவர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் தான் இந்த நடவடிக்கைகளில் முதன்மையில் நிற்கிறார்கள் என்கிறது Hindutva Watch என்ற செய்தி நிறுவனம்.

இந்தியாவில் பாசிச பா.ஜ.க. சமூக வலைதளங்களில் பொய்களை பரப்புவதற்கென்றே ஒரு பலமான அணியை வைத்திருக்கின்றது. அதை பயன்படுத்தி இப்போது நடந்து கொண்டிருக்கின்ற இஸ்ரேல், பாலஸ்தீன போரில் பாலஸ்தீனத்திற்கு எதிரான கருத்தாக்கத்தை உருவாக்கவும், இஸ்ரேலுக்கு ஆதரவான மனநிலையை மக்கள் மத்தியில் விதைக்கவும் செயல்பட்டு வருகின்றது. இதன் தாக்கத்தால் பாசிஸ்டுகள் இஸ்ரேலுக்கு ஆதரவான சுவரொட்டிகளை ஒட்டுவது, இஸ்ரேலுக்கு ஆதரவான பேரணிகளை நடத்துவது,






இஸ்ரேலின் பாதுகாப்பு படையான IDFஇல் இணைய ஆர்வமாக உள்ளதாக பதிவிடுவது என Offline - சமூக வலைதளங்களுக்கு வெளியிலும் செயல்படுகின்றனர்

வந்தேறிகளின் நாடான இஸ்ரேலுக்கு சென்ற முதல் இந்திய பிரதமரும், இஸ்ரேலை ஆதரித்த முதல் மேற்கத்திய நாடு அல்லாத தலைவரான மோடி ஹமாஸ்-இன் அக்டோபர் 7 தாக்குதலை வன்மையாக கண்டித்தார். அடுத்த சில மணி நேரங்களிலேயே பா.ஜ.க.வின் அதிகாரப் பூர்வமான எக்ஸ் (X) தளத்தில் மூன்று நிமிடக் காணொளி ஒன்று பதிவு செய்யப்பட்டது. அந்த வீடியோ, “இஸ்ரேலை போலவே இந்தியாவும் இஸ்லாமிய பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடு” என்ற கருத்தை தாங்கியதாக இருந்தது.

அந்த வீடியோ வைரல் ஆகி 4 மில்லியன் பார்வையாளர்களை சென்றடைந்தது. மேலும் அந்த வீடியோவில் காங்கிரஸ் ஆட்சியில் நடந்த குண்டுவெடிப்புகளின் படங்கள் காட்சிப்படுத்தப் பட்டன. “காங்கிரஸ் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் கட்சி என்றும், அதற்காக பா.ஜ.க. அதை கண்டிக்கின்றது என்றும், தீவிரவாதத்தை வளர்க்கும் பாகிஸ்தானை ஒழிக்க வேண்டும்” என்றும் அந்த வீடியோ பதிவில் இருந்தது..

அதன் பின் பாசிச பா.ஜ.கவை ஆதரிக்கும் தனிநபர் கணக்குகள், பேஸ்புக் பேஜ்கள், வாட்ஸ்ஆப் குருப்புகள் என அனைத்திலும், முஸ்லிம்களின் மேல் வெறுப்பை உண்டாக்கும் பதிவுகள் பரப்பப்பட்டன. ஹமாஸிற்கு எதிரான இஸ்ரேலின் நடவடிக்கைகளை பாராட்டும் விதமான பதிவுகளும், பாலஸ்தீனில் பாதிக்கப் பட்ட அப்பாவி மக்களை கேலி செய்யும் விதமாக வும் பதிவுகள் பகிரப்பட்டன. இந்த பதிவுகளில்,

*#IndiaStandsWithIsrael,*

*#HindusWithIsrael,*

*#Israel_under_attack,*

*#IsraeliLivesMatter,*

*#IsraelFightsTerror,*

*#IsraelFightsBack,*

*#HamasTerrorists,*

*#HamasWarCrimes*


போன்ற ஹேஷ்டேக்குகளும் பயன்படுத்தப் பட்டன.

இதுபோன்ற பாசிஸ்டுகளின் பொய் செய்திகளை சரிபார்த்து உண்மையை உலகிற்கு சொல்லும் (Fact Check) தளங்களின் ஆய்வுப்படி #IsraelUnderAttack, #IStandWithIsrael என்ற ஹேஷ்டேகுகளை பயன்படுத்தி உலகம் முழுவதிலுமிருந்து வந்த பதிவுகளில் 20% சதவிகிதம் இந்தியாவிலிருந்து வந்தவைகள்.

அல் அஹ்லி மருத்துவமனை மீது ஹமாஸ் போராளிகள் குண்டுகளை வீசுவதை நான் பார்த்தேன் என்று அல்ஜஸீரா பத்திரிகையாளர் ஒருவர் பதிவு போடுவதைப் போல போலிக் கணக்கில் ஒரு பதிவை வெளியிட்டது, காஸாவில் பொம்மைகளை இறந்த குழந்தைகளை போல சித்தரித்து காஸா முஸ்லிம்கள் அனுதாபத்தை தேடுகின்றனர் என்று ஒரு வீடியோ பதிவை வைரல் ஆக்கியது என ஏற்கனவே எங்கோ பதிவிடப்பட்ட வீடியோக்களை, புகைப்படங்களை எல்லாம் இஸ்ரேல், பாலஸ்தீன போரில் தொடர்புப்படுத்தி இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை விதைக்க முயன்றிருக்கின்றார்கள் இந்த பாஸிஸ்டுகள்.

இதுபோன்ற பாசிஸ்டுகளின் பொய்யான பதிவுகளை டிவிட்டரால் அங்கீகரிக்கப்பட்ட கணக்குகளாலும் பகிரப்பட்டிருக்கின்றன. எக்ஸ் எனும் டிவிட்டரின் புதிய மானிடிடேஷன் பாலிஸி படி இதுபோன்ற விடியோக்கள் மில்லியன் கணக்கில் பார்வையாளர்களை பெறுவதால், பணத்திற்காகவும் பகிரப்படுவதாக Fact check தளங்கள் சொல்கின்றன.

இப்படி எக்ஸ் எனும் டிவிட்டரில் கண்ணை




மூடிக்கொண்டு இஸ்ரேல், பாலஸ்தீன் போர் குறித்த பொய்யான தகவல்கள் வைரலாக்கப்பட்டு சமூகத்தின் மத்தியில் அது பதட்டத்தை உண்டாக்குவதை கவனித்த பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள் எல்லாம் எக்ஸ் தளத்தில் தங்களது கண்டனங்களை பதிவு செய்து வந்தனர்.

அதன் விளைவாக எக்ஸ் எனும் டிவிட்டரின் அதிபரான எலன் மாஸ்க், தனது டிவிட்டர் கணக்குகளின் பாலிஸியை மறுபரிசீலனை செய்து அறிவித்தார். மேலும் Xஇன், Community Notes மூலம் Fact Check-க்கு உள்ளாகிவிட்டால் அந்த கணக்கிற்கு Monetization மூலம் பணம் பெறும் வசதியை ரத்து செய்யப்படும் என்றும் அறிவித்தார்.

*Source : Hindutva watch*

Hindutva Watch என்ற செய்தி நிறுவனம் இந்த கட்டுரையை https://gnet-research.org/ என்ற தளத்தில் வெளிவந்த ஸ்வேதா தேசாய் என்ற பத்திரிகையாளரின் ஆய்வுக் கட்டுரையை மையமாக கொண்டு இந்த செய்தியை வெளியிட்டிருந்தது. அதனால் அவர் ஆய்வு செய்து வெளியிட்டிருந்த "மூலக் கட்டுரையை" வாசித்த போது, அதில் அவர் இன்னும் மேலதிகமான தகவல்களை சொல்கின்றார்.

### இஸ்ரேலை ஆதரிப்பவர்கள் RSS உருவாக்கங்களே!

இஸ்ரேலை அப்பட்டமாக ஆதரித்து, முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்புணர்வை தூண்டும் இந்த பாசிஸ்டுகளில் பெரும் பாலோனோர் ஆர்.எஸ்.எஸ். பின்னணியை கொண்டவர்களாகவே இருக்கின்றனர் என்கிறார் ஸ்வேதா தேசாய். மேலும் தீவிரவாதத்தின் மூலம் யூதர்களுக்கென ஒரு தனி நாட்டை உருவாக்க நினைக்கும் இஸ்ரேலின் சியோனிஸ சிந்தனைக்கும், இந்தியாவில் காவி பயங்கரவாதத்தின் மூலம் ஹிந்து ராஸ்டிராவை உருவாக்க நினைக்கும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க.வின் சிந்தனைக்கும் நிறைய ஒற்றுமைகள் உள்ளது என்கிறார்.

### ஹமாஸ் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலை கஷ்மீர் பண்டிட்டுகளோடு ஒப்பிட்ட பாஸிஸ்டுகள்

ஹமாஸ் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியவுடன் இஸ்ரேலில் குடியமர்த்தப்பட்ட யூதர்கள் (வந்தேறிகள்) வெகுவாக பாதிக்கப் பட்டனர். லட்சக் கணக்கான யூதர்கள், இஸ்ரேலை விட்டு வெளியேறத் தொடங்கினர். அமெரிக்கா ஒரு கப்பல் முழுவதும் யூதர்களை ஏற்றிக் கொண்டு சைப்ரஸ் தீவீற்கு கொண்டு சென்றது. இந்த காட்சிகளை எல்லாம் பதிவிட்டு "இப்படித்தான், 1990ல் முஸ்லிம்கள் பண்டிட்டுகளை கஷ்மீரை விட்டு விரட்டியடித்தனர்" என்று தங்களது சமூக வலைதளங்களில் பதிவிடத் தொடங்கினர்.

இதில் பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரான கபில் மிஷ்ரா போட்ட பதிவு குறிப்பிடத்தக்கது. அக்டோபர் 20ம் தேதி அவர் ஒரு டிவீட்டை வெளியிட்டார். அதில், "இப்போது இஸ்ரேலில் யூதர்களுக்கு நிகழ்ந்த இதே கதிதான், 1990களில் பண்டிட்டுகளுக்கும், முஸ்லிம்கள் இந்தியாவை

### இந்தியா

நமது இந்தியா முதலில், "நாங்கள் இஸ்ரேலுக்கு ஆதரவு" என்றது. பின்னர், "நாங்கள் பாலஸ்தீன் மக்கள் பக்கமே நிற்கின்றோம். எங்களது பழைய நிலையும் அதுதான்" என்றது.
பின்னர் பாலஸ்தீன மக்களுக்கு 38.5 டன் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்தது. இப்போது ஐக்கிய நாடுகள் சபை, "புதிய குடியேற்றப் பகுதிகளை கொண்டு வந்திடக் கூடாது" எனக் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து ஓட்டுப் போட்டது. நன்றி!

ஆண்டபோது, ஹிந்துக்களுக்கும் நிகழ்ந்தது." என்று பதிவிட்டிருந்ததார்.

இதேப்போல RJ Raunac என்ற யூடியூபர் தனது சேனலில் ஒரு வீடியோப் பதிவை வெளியிட்டிருந்தார். அதில் அவர், "இப்போது யூதர்கள் பாலஸ்தீன முஸ்லிம்களை தங்கள் நிலங்களை விட்டு துரத்துவதால், அவர்களுக்கு ஆதரவாக இந்திய முஸ்லிம்கள் குரல் கொடுக்கின்றனர். அதேப்போல கஷ்மீரிலிருந்து வெளியேற்றப்பட்ட ஹிந்துக்களையும் அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்." என்று பேசியிருந்தார். அவரது இந்த வீடியோ 1.8 மில்லியன் பார்வையாளர்களை கடந்து சென்று கொண்டிருக்கின்றது.

இதேப்போல ஹிந்துத்துவ பாசிஸ்டுகள் நடத்தும் டெலிகிராம் சேனல்களிலும், "முஸ்லிம்கள் கஷ்மீரில் பண்டிட்டுகளை கொடுமைப்படுத்தியது போல, கற்பழித்தது போல, இஸ்லாமிய ஜிஹாதிகள் இஸ்ரேலில் யூதர்களை நடத்துகிறார்கள்." என்று பொய் செய்திகளை பரப்பினார்கள் என்று ஸ்வேதா சேய் கூறுகின்றார்.

மேலும், "இந்த இஸ்லாமிய ஜிஹாதிகள் முதலில் யூதர்களை அடித்துவிட்டு, பின்னர் ஹிந்துக்களை அடிக்க இந்தியா வருவார்கள். எனவே இந்தியாவில் பாலஸ்தீனை ஆதரிப்பவர்களை நமது அரசு கவனித்து, கண்காணித்து அவர்கள் மீது தீவிரவாதத் தடுப்பு பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்ற பதிவையும் பாஸிஸ்டுகள் திட்டமிட்டு பரப்பியதாக கூறுகின்றார்.


Source: https://gnet-research.org/2023/11/17/hindutva-disinformation-machine-how-india-is-using-the-israel-palestine-war-to-spur-anti-muslim-sentiment-at-home/

> "உலகெங்குமுள்ள அரபு நாடுகளில் யூதர்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள். இஸ்ரேலில் மட்டும் தான் அலைக்கழிகின்றார்கள். மனநோய் மருத்துவமனை நோக்கி விரைகின்றார்கள். ஈரானில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வாழ்வாங்கு வாழ்கின்றார்கள்!"

### இறுதியாக

இப்படி உலக முழுவதும் பெரிய அளவில் ஆதரவுகளை பெற்ற பாலஸ்தீன குழுக்களின் போராட்டங்களை கொச்சைப்படுத்துவதின் மூலம் இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு வகுப்புவாத வன்முறையை உருவாக்க பாசிஸ்டுகள் திட்டம் தீட்டியுள்ளார்கள். அதற்காக அவர்கள் தங்களது எல்லா தளங்களையும் பயன்படுத்து கின்றனர். இந்த நேரத்தில் பாசிஸ்டுகளின் இதுபோன்ற பொய் பிரச்சாரங்களை தோலுரித்துக் காட்டும் *Fact Check* நடவடிக்கைகள் அதிகம் தேவைப்படுகிறது. அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு மக்களுக்கு உண்மைகளை சொல்லி சமூக வெறுப்புணர்வுகளை அகற்றும் தளங்களோடு மக்கள் பயணிக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். அப்போது மட்டுமே பாஸிஸ்டுகளின் இதுபோன்ற சதிகளை ஒன்றிணைந்து தடுக்க முடியும்.

- அஷ்ரஃப் அலீ




முஸ்லிம்கள் தான் கஷ்மீரிலிருந்து பண்டிட்டுகளை விரட்டியடித்தார்கள் என்ற ஒரு பொய் பிரச்சாரத்தை நீண்ட நாட்களாகவே பாசிஸ்டுகள் பரப்பி வருகின்றனர். அதுகுறித்த உண்மை வரலாற்றை அறிய நமது ஆசிரியர் அவர்களின் தொகுப்பில் வெளிவந்த நூலான "கஷ்மீரின் பாதி விதவைகள்" எனும் நூலை வாங்கிப் படியுங்கள். நூலைப் பெறுவதற்கான தொடர்பு எண் - 8148129887.



# பாலஸ்தீன பெண்கள் மீது
# இணையதளப் போரை தொடுக்கும்
# மேற்கத்திய பெண்ணியம்!

அக்டோபர் 7 முதல் பாலஸ்தீன போராளிகளுக்கும், வந்தேரிகளின் நாடான இஸ்ரேலுக்கும் தொடங்கிய போரில் இஸ்ரேல் பயங்கரமாக அடிவாங்கிக் கொண்டிருக்கின்றது. எப்படி இந்தப் போரை நிறுத்தி கீழே விழுந்தாலும், மீசையில் மண் ஒட்டவில்லை என்ற பாணியில் காஸாவை விட்டு வெளியே வருவது என்று தெரியாமல், அரபு நாடுகளிடம் பாலதீன போராளிகளை கட்டுப்படுத்துமாறு அமெரிக்கா மூலம் கெஞ்சிக் கொண்டிருக்கின்றது.

கள நிலவரம் இப்படி இருக்க! உலக மக்கள் மத்தியில் தங்களது கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ள உலகம் முழுவதும் பொய்களை பரப்பி, நீதிக்காக போராடும் பாலஸ்தீன போராளிகளையும், அவர்களை ஆதரிப்பவர்களையும் கொச்சைப்படுத்தும் வேலைகளில் இறங்கியது இஸ்ரேல்.

அதன் ஒரு பகுதியாக அமெரிக்காவின் அதிபரையே பொய்களை சொல்ல வைத்து உலக மக்கள் மத்தியில் ஜோ பைடனுக்கு, “பொய்களின் அதிபர்” என்றொரு பட்டத்தையும் வாங்கி கொடுத்து விட்டது.

மகளிர் மன்றம்

இந்த நிலையில், பாலஸ்தீன போராளிகளின் தாக்குதல்களுக்கு எதிர்தாக்குதல் நடத்துகிறேன் என்ற பெயரில், மருத்துவமனைகள் மீதும், பள்ளிக்கூடங்கள் மீதும், அப்பாவி மக்கள் அதிகமாக கூடும் இடங்களிலும் குண்டுகளை போட்டு 11,500க்கும் அதிகமான மக்களை பாலஸ்தீனில் கொன்று குவித்துள்ளது இஸ்ரேல். இதில் பெண்களும், குழந்தைகளும் தான் அதிகம் என்கிறார்கள்.

இப்படி இஸ்ரேலின் தாக்குதலினால் படுகொலை செய்யப்படும் அப்பாவி மக்களுக்கு ஆதரவாக, குறிப்பாக பெண்கள், குழந்தைகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்து, இஸ்ரேலின் காட்டுமிராண்டித்தனங்களை கண்டிக்கும் மக்களுக்கு எதிராக இணையதளத்தில் புதுவகையான ஒரு போரை தொடுத்துள்ளது இஸ்ரேல்.

அது, "எக்ஸ், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிக் டாக்" போன்ற சமூக வலைதளப் பக்கங்களில், காஸாவில் பெண்கள், குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் இஸ்ரேலின் கொடூரங்களை பதிவிட்டு, தங்களது கண்டனங்களை பதிவு செய்யும் "நெட்டிசன்களுக்கு" எதிராக மேற்கத்திய பெண்ணியவாதிகளை களமிறக்கி விட்டிருக்கின்றது இஸ்ரேல்.

சமூக வலைதளங்களில் யாரேனும் ஒரு நபர், "இஸ்ரேலுக்கு எதிராக தனது கண்டனத்தை தெரிவித்தால், உடனேயே அந்த பதிவிற்கு வரும் மேற்கத்திய பெண்ணிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள், "ஹமாஸ் இஸ்ரேலின் மீது தீவிரவாத தாக்குதல்களை மேற்கொண்டதற்கான இஸ்ரேலின் எதிர் தாக்குதல் தான் காஸாவில் பெண்களும், குழந்தைகளும் மடிவது. நீங்கள் தீவிரவாத ஹமாஸை ஆதரிக்கிறீர்களா? அல்லது பாதிக்கப்பட்ட இஸ்ரேலின் பக்கம் நிற்கிறீர்களா?" என்று விவாதத்தை தொடங்குகின்றனர்.

என்னதான் பாலஸ்தீன போராளிகளின் பக்கம் நிற்க வேண்டும் என்ற எண்ணத்தோடு மக்கள் இருந்தாலும், அந்தந்த நாட்டில் அதிகாரத்தில் இருக்கும் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு, இப்படி ஒரு விவாதத்தை பொதுத்தளத்தில் தொடர பெரும்பாலான மக்கள் விரும்புவதில்லை. எனவே தங்களது பதிவுகளை அழித்து விடுகின்றனர்.

(மிகச்சிலரே இப்படியான விவாதத்தில் நேரத்தை செலவிட்டு ஆதாரங்களோடு பதில்களை தந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்களின் ஐடிக்கள், தளங்களும் முடக்கப்பட்டு விடுகின்றது.)

இதுகுறித்து பல்வேறு பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள் தங்களது கண்டனத்தை பதிவு செய்து வருகின்றனர். அவர்களில், மத்திய கிழக்கு நாடுகளில் ஆண், பெண் சமத்துவம் குறித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வரும், மர்யம் அல்தோசாரி என்ற சகோதரியின் கண்டனப்பதிவு கவனிக்கத்தக்கது. அவற்றை அப்படியே இங்கே தருகின்றோம்,

"பெண்ணியவாதிகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் மேற்கத்திய நாடுகளைச் சார்ந்தவர்கள் தங்களை பெண்ணியத்தின் பாதுகாவலர்களாக வடிவமைத்துக் கொள்கின்றனர்."

"ஆக்டோபர் 7ம் தேதி ஹமாஸ், இஸ்ரேலை தாக்கியது முதல், இந்த பெண்ணியவாதிகள், டிஜிட்டல் நிலபரப்பான இணையதளங்களில் ஹமாஸை ஆதரிப்பவர்கள் மீது இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்று பதிவுகள் மூலம் குண்டுகளை வீசி வருகின்றனர்."

"கவனத்தில் கொள்ளுங்கள், இவர்கள் ஹமாஸின் தாக்குதலினால் இஸ்ரேலில் உயிரிழந்த சில பெண்களை பற்றி பேசுவதில்லை. மாறாக இஸ்ரேல் காஸாவில் கொன்று குவிக்கும் அப்பாவி பெண்களின் மரணத்தை, ஹமாஸின் தாக்குதலுக்கான, இஸ்ரேலின் எதிர்த்தாக்குதல் என்று வாதாடுகின்றனர். சில நேரங்களில் அதை அவர்கள் உற்சாகமான பதிவுகளாக பதிவிடுகின்றனர்"

"இந்த பெண்ணியவாதிகள், பாலஸ்தீனத்தில் நீண்ட காலங்களாக துன்பங்களை அனுபவித்து வரும் முஸ்லிம் பெண்களின் மீது எந்தவிதமான அனுதாபத்தையும், ஆதாரவையும் காட்டியதில்லை. ஆனால் அவர்களுக்கு ஆதரவாக கரம் கொடுப்பவர்களை, குரல் கொடுப்பவர்களை முடக்கும், மௌனமாக்கும் முயற்சிகளில் தங்களை ஆர்வத்தோடு இணைத்துக் கொள்கின்றனர்."

"எக்ஸ் போன்ற சமூகவலைதளங்களில் யாரேனும் ஒருவர், பாலஸ்தீன பெண்களின் துயரங்களை பேசினால், அவரிடம் சென்று, "நீங்கள் ஹமாஸை ஆதரிக்கின்றீர்களா?" அல்லது "இஸ்ரேலிய பொதுமக்கள் மீதான தாக்குதல்களை நீங்கள் கண்டிக்கின்றீர்களா?" என்று கேள்விகளை எழுப்பி அவர்களை அச்சுறுத்தி, ஆவமானப்படுத்தி, மிரட்டுகின்றீர்கள்."

"மேலும் இந்த பெண்ணியவாதிகள், "*Anti Semite* - செமிட் எதிர்ப்பு, *Rape apologist* - கற்பழிப்பை ஏற்றுக் கொள்கிறவன், *Support for rape and kidnapping of women* - கற்பழிப்பையும், பெண்களை கடத்துபவனையும் ஆதரிப்பவன், *Support for a terrorist group that governs with Sharia law* - ஷரியா சட்டத்தை ஆளும் ஒரு பயங்கரவாத குழுவிற்கு ஆதரவு, *Not a true feminist* - உண்மையான பெண்ணியவாதி அல்ல" போன்ற *Hashtag* - ஹேஷ்டேகுகளை பாலஸ்தீன பெண்களுக்கு ஆதவான நெட்டிஸன்களுக்கு எதிராக பயன்படுத்துகின்றனர்."

"இந்த மேற்கத்திய பெண்ணியவாதிகளிடம் நான் கேட்கிறேன், 'ஹமாஸுக்கு எதிரான போருக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன் என்ற பெயரில் பாலஸ்தீனில், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது இஸ்ரேல் கண்மூடித் தனமாக குண்டுகளை போடுகின்றது. அது அவர்களை ஊனப்படுத்துகின்றது. கொன்று குவிக்கின்றது. இப்படிப்பட்ட இஸ்ரேலை ஆதரிப்பதுதான் உங்களது பெண்ணியமா?"

"ஹமாஸின் தாக்குதலினால் இஸ்ரேலின் பெண்களும் பாதிக்கப்படுகின்றனர். அதை நீங்கள் கண்டிக்கின்றீர்கள். ஆனால் மிக நீண்ட காலமாக பாலஸ்தீன பெண்கள் துயரங்களை அனுபவைத்து வருகின்றனர். இப்போதைய போர் சூழலில் கூட அவர்கள் உணவின்றி, தண்ணீரின்றி அவதிப்பட்டு வருகின்றனர். இதுபற்றியெல்லாம் நீங்கள் மௌனமாக இருப்பது மட்டுமல்ல, அவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பவர் களையும், வாயடைக்க முயற்சிக்கிறீர்கள்."

"இதெல்லாம் கண்டனத்திற்குரிய பெண்களுக்கு எதிரான வன்முறை இல்லையா? ஒரு திறந்தவெளிச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஆதரவற்ற மக்களுக்கு எதிராக ஒரு சக்திவாய்ந்த அரசின் நடவடிக்கைகளுக்கு, தண்டனைக்குரிய, இனப்படுகொலை நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும், உங்களை எப்படி "பெண்ணியவாதி" என்று அழைக்க முடியும்?

"1948 முதல் இனச் சுத்திகரிப்பு, அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்பு தவிர வேறு எதையும் அனுபவிக்காத, 17 ஆண்டுகளாக முற்றுகையின் கீழ் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் 'மனித விலங்குகள்' என்று வரையறுக்கப்பட்ட ஒரு மக்களுக்காக உங்கள் பெண்ணியம் உங்களை நிற்க வைக்கவில்லை என்றால், யாருக்காக நீங்கள் பெண்ணியம் பேசுகின்றீர்கள்?"



"பாலஸ்தீன பெண்கள் உங்கள் பெண்ணிய வாதத்திற்கு தகுதியான பெண்கள் இல்லையா?"

"தற்காப்புக்கான எதிர்தாக்குதல் என்ற பெயரில், பாலஸ்தீனில் அப்பாவி பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது குண்டுகளை போடும் இஸ்ரேலின் இனப்படுகொலை களை நீங்கள் ஆதரிப்பதின் மூலம், அவர்களின் போராட்டத்தை ஆதரிக்கும் ஒவ்வொரு வரையும், "யூத எதிர்ப்பு, பெண்களுக்கு எதிரானவர்கள்" என்று முத்திரை குத்துவதன் மூலம் உங்கள் பெண்ணியத்தில் பூமியில் வாழும் எல்லாப் பெண்களும் சமமானவர்கள் அல்ல! என்பதை நிரூபித்துவிட்டீர்கள். எனது இந்த பதிவு உங்கள் மனசாட்சியை எடைபோடும் என்று நம்புகிறேன்."

*Source : Aljazeera English - 23 Oct 2023*

பாலஸ்தீன போராளிகளின் இந்த போரின் மூலம் உலக அரங்கில் இஸ்ரேலின் முகத்திரை மட்டும் கிழியவில்லை. மாறாக இதுபோன்ற போலி பெண்ணிய முகத்திரைகளும் கிழிந்து தொங்குகின்றன.

உண்மையில் இஸ்ரேலின் அப்பாவி மக்களின் மீதான தாக்குதலினால் பாலஸ்தீன பெண்கள் மிகுந்த பாதிப்புகளுக்குள் ஆளாகியுள்ளனர். மேலும் தண்ணீர், மின்சாரத் தடை போன்ற இஸ்ரேலின் கெடுபிடிகளால் பாலஸ்தீன பெண்களின் அன்றாட வாழ்வு வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

**மாதவிடாய்களை தள்ளிப்போட மாத்திரைகள்!**

தண்ணீர் தட்டுப்பாடு, குறுகிய இடங்களில் நிறைய நபர்கள் வசிப்பது போன்ற காரணங்களால், பாலஸ்தீன பெண்கள்



தங்களுடைய மாதவிடாய் நாட்களை தள்ளிப்போடும் மாத்திரைகளை அதிகமாக எடுத்துக் கொள்வதாக ஒரு ஆய்வு கூறுகின்றது.

காஸா பகுதியை சார்ந்த ஹல்மா கூறுகின்றார்:

“இந்தப் போரின் போது என் வாழ்க்கையின் மிகவும் கடினமான நாட்களை நான் அனுபவித்து வருகிறேன். இந்த மாதத்தில் எனக்கு இதுவரை இரண்டு முறை மாதவிடாய் வந்தது - இது எனக்கு மிகவும் ஒழுங்கற்றது - மற்றும் அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டது. அங்கொன்றும், இங்கொன்றுமாக திறந்திருக்கும் வெகு சில கடைகளில் மட்டுமே சானிடரி பேட்-கள் கிடைக்கின்றன. மேலும் ஒரே வீட்டில் 20க்கும் அதிகமான நபர்கள் தங்க வேண்டிய ஒரு சூழலும் உள்ளது. தண்ணீருக்கும் மிகுந்த தட்டுப்பாடு உள்ளதால் ரேஷன் முறையில் ஒரு நபர் 7 நாட்களுக்கு ஒரு முறைதான் குளிக்க முடிகின்றது. இதனால் சுகாதார குறைபாடுகளையும் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. அதனால் நாங்கள் மாதவிடாயை தாமதப்படுத்தும் மாத்திரைகளை எடுத்துக் கொள்கிறோம்.”

“அதுவும், சில மருந்தகங்களில், மருத்துவ முகாம்களில் மாதவிடாயை தாமதப்படுத்தும் மாத்திரைகள் கிடைக்கின்றன. நான் எனது மகளை அனுப்பி அந்த மாத்திரைகளை வாங்கி வரச் சொன்னேன்” என்கிறார் சல்மா.

கான் யூனிஸ் பகுதிக்கு இடம்பெயர்ந்த சமீரா அல் ஸாதி கூறுகிறார்:

“எனது 15 வயது மகளுக்கு இப்போதுதான் மாதவிடாய் தொடங்கியது. ஆனால் அவளுக்கான அடிப்படை வசதிகளை என்னால் செய்து கொடுக்க முடியவில்லை. சானிடரி பேட்-கள், தண்ணீர் போன்றவைகள் இங்கு கிடைப்பதில்லை. அதனால் நான் எனது மகளுக்கும் மாதவிடாய் தாமதப்படுத்தும் மாத்திரைகளை வாங்கிக் கொடுப்பதில் ஆர்வம் காட்டுகிறேன்.”

அதே பகுதியில் தன்னுடைய குடும்பத்தினருடன் வசிக்கும் ரூபா ஸீப் கூறுகையில்:

“எங்களுக்கு இங்கே தனியுரிமை (Privacy) இல்லை, குளியலறையில் தண்ணீர் இல்லை, மேலும் நமக்குத் தேவையானதைத் தேடுவதற்கு நாங்கள் எளிதாக வெளியே செல்ல முடியாது. கடுமையான பயம், தூக்கமின்மை மற்றும் போதுமான போர்வைகள் இல்லாததால் குளிர்ச்சியின் மேல் மாதவிடாய் பிடிப்பை என்னால் தாங்க முடியவில்லை.” என்கிறார் ரூபா.

இறுதியில் தனது சகோதரர் மூலம் மாதவிடாய் தாமதப்படுத்தும் மாத்திரைகளை பெற்றுக் கொண்ட ரூபா, “தான் இருக்கும் பகுதியில் என்னை சுற்றியுள்ள பல பெண்கள் இந்த மாத்திரையை கேட்டனர். அதில் ஒருவர் கூறுகையில், 'இஸ்ரேல் நம் மீது வீசிக் கொண்டிருக்கும் குண்டுகளை விட இந்த மாத்திரைகள் என்ன பெரிதாக பாதிப்புகளை உண்டாக்கிவிடப் போகின்றது?” என்றார். இந்தப் போரில் எங்களால் மிகுந்த அனைத்தையும் செய்ய வேண்டிய நிலையில் நாங்கள் உள்ளோம்." என்று கூறுகின்றார்.

*Source: Aljazeera Eng, 31 oct 2023*

**காஸாவில் இருக்கும் கர்ப்பிணிப் பெண்களின் நிலை என்ன?**

*United Nations Population Fund* தனது "X" தளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில், காஸா பகுதியில் மட்டும் 50,000க்கும் அதிகமான கர்ப்பிணி பெண்கள், அடிப்படை சுகாதார வசதிகள் கூட இல்லாமல் இருப்பதாக தெரிவித்துள்ளது.




*United Nations Population Fund* அமைப்பின் பாலஸ்தீன தலைமை அதிகாரி *CNN* செய்தி நிறுவனத்திடம் கூறும் போது,

> “இஸ்ரேல் பொழியும் குண்டு மழைகளால் காஸாவில் சுகாதார அமைப்பு முழுமையாக சிதைந்துள்ளது. இங்கே வசிக்கும் கர்ப்பிணிப் பெண்களின் கடைசி மூன்று மாதங்களின் நிலையை நினைத்துப் பாருங்கள்! கடுமையான சிக்கல்களுடன், ஆடைகள் இல்லாமல், சுகாதாரம் இல்லாமல், எந்த ஆதரவுமில்லாமல், அடுத்த நாள், அடுத்த மணி நேரம், அடுத்த நிமிடம் தன் வயிற்றில் இருக்கும் பிறக்காத தனது குழந்தைக்கு என்பதை உறுதியாக



> தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.
>
> “காஸாவின் மருத்துவமனைகளிலிருந்து வெளிவரும் செய்திகள் என்னை மிகவும் வேதனையடைய வைக்கின்றன. இங்குள்ள ஒரு மருத்துவமனையின் பணியாற்றும் உதவியாளர் ஒருவர் என்னிடம் கூறினார், இஸ்ரேலின் தொடர் குண்டுவீச்சுகளால் மகப்பேறு மருத்துவ மனைகளில் பணியாற்றும் உதவியாளர்கள் பணிக்கே வரமுடிவதில்லை. என்று! எனவே மனிதாபிமான அடிப்படையில் காஸாவிற்குள் உதவி மற்றும் அடிப்படை மருத்துவ பொருட்கள் அனுமதிக்கப்பட வேண்டும். எல்லைகள் திறக்கப்பட வேண்டும். இதன்மூலம் இந்த கர்ப்பிணிப் பெண்கள் தங்களது தேவைகளை பெற்றுக் கொள்ள முடியும்.” என்று கூறினார்.

*Source: MOM, 16 oct, 2023*

இப்படியெல்லாம் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு எதிராகத்தான், மேற்கத்திய பெண்ணியவாதிகள் தங்களின் போரை தொடங்கியுள்ளனர். இதிலிருந்தே இவர்கள் கையில் வைத்திருக்கும் "பெண்ணியம்" என்ற பூச்சாண்டிக் கொள்கை முஸ்லிம் பெண்களுக்கு எதிராகத்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது உலக மக்கள் முன் வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

பாலஸ்தீன போராளிகள் இஸ்ரேலுக்கு எதிரான போரில் எப்படி அல்லாஹ்வைச் சார்ந்து வென்று கொண்டிருக்கின்றார்களோ, அதேபோல இதுபோன்ற சதிவலைகளையும் நாம் அல்லாஹ்வின் உதவிகளைக் கொண்டு முறியடித்து உலக மக்களுக்கு உண்மைகளை கொண்டு சேர்ப்போம். இன்ஷா அல்லாஹ்!

***- Jasmine Fathima Bsc.B.Ed,LLB.,***




# உண்மை மறைக்கப் படுகிறது ஏன்...?

*பெறுநர்:*

*ஆசிரியர் அவர்கள்,*

*தினமணி, சென்னை.*

*"இதில் எந்த தவறும் இல்லை" (19/06/2013) கட்டுரை சாவர்கர் விமர்சிக்கப்படுவதை விரும்பவில்லை என்பதைக் காட்டுகிறது. இந்திய சுதந்திர எழுச்சியை, விடுதலை எழுச்சி என்று சாவர்கர் எழுதி விட்டதால் அவரை கட்டுரை ஆசிரியர் வானுயரத்தூக்குகிறார். சாவர்கர் ஆங்கில அரசுக்கு எழுதிய மன்னிப்பு கடிதங்கள் இன்றும் ஆவணங்களாக ஆதாரங்களாக உள்ளன.*

*நேதாஜி சுபாஸ்சந்திரபோஸ் வெள்ளையனை விரட்ட பெரும்படை திரட்டிய போது, அவருக்கு எதிராக ஆங்கிலேயருக்கு ஆதரவாக ஒரு லச்சம் பேர் கொண்ட படையை திரட்டியது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக இருப்பதாகவும், தனக்கு வழங்கும் உதவித் தொகையை கூட்டிக் கொடுக்கும்படி அவர் கெஞ்சி கேட்டது ஆவணங்களாக இருக்கும்போது, கட்டுரை ஆசிரியர் மன்னிப்பு கடிதங்கள் எழுதியதற்கு ஆவணங்கள் இல்லை என்று எழுதுவது அப்பட்டமான பொய். சாவர்கர் அவர்கள் மதநம்பிக்கையற்ற நாத்திகர். மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்ற கோட்ஸே சாவர்கரின் ஆண் மனைவி என்று கூறப்படுவது பொய்யல்ல.*

*தாழ்த்தப்பட்டவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும், கிருஸ்தவர்களுக்கும் சமத்துவம் தரும் சுதந்திரத்தை விட வெள்ளையனுக்கு அடிமையாகவே இருப்பது மேல் என்ற கொள்கை கொண்ட குரு கோல்வால்கரைப் போன்ற கொள்கை கொண்டவர்தான் சாவர்கர். இது அறிவு ஜீவிகள் என்று சொல்லப்படும் அற்ப ஜீவிகளால் மறைக்கப்படுகிறது. மன்னிக்கமுடியாத குற்றம்..*

**ஹாஜி.முஹம்மது, நிரவி**




## இஸ்ரேலுக்கு எதிரான போரில் பாலஸ்தீன முஸ்லிம்களின் மனவலிமை மற்றும் நம்பிக்கையை கவனித்த

# மேகன் ரயிஸ் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்?

நவம்பர் மாதத்தின் ஆரம்பத்தில் அமெரிக்காவை சார்ந்த பிரபல டிக்டாக் ஸ்டாரான, மேகன் ரயிஸ் என்பவர் தனது டிக்டாக் மற்றும் இன்ஸ்டாகிராம், யூடியூப் தளத்தில் ஒரு வீடியோ பதிவை வெளியிடுகின்றார்.

அதில் வழக்கத்திற்கு மாறாக அவர் ஹிஜாப் அணிந்து தோன்றியவுடன் அவரை பின்தொடர்பவர்கள் ஆச்சர்யமாக அவரது வீடியோ பதிவை கவனித்தனர்.

பேச ஆரம்பித்த, மேகன் ரயிஸ்,

(அக்டோபர் 7 முதல்) தொடர்ந்து நான் டிக்டாக்கிலும், யூடியூபிலும், காஸா பகுதியில் இஸ்ரேலிய காட்டுமிராண்டி அரசின் தாக்குதல்களை கவனித்து வருகின்றேன். எனக்கு ஆச்சரியமாக

இருக்கின்றது. இப்படி ஒரு கொடூரமான தாக்குதலுக்கு மத்தியிலும், பாலஸ்தீன மக்கள், பொறுமையுடனும், மனவலிமையுடனும் இருக்கின்றார்களே என்று!"

"இதுவே என்னை இஸ்லாத்தை நோக்கி உந்தியது. நான் குர்ஆனை வாங்கிப்படித்தேன். உண்மையில் என் வாழ்நாளில் அப்படி ஒரு வார்த்தைகளை நான் படித்ததே இல்லை. குர்ஆன் என் நெஞ்சை தொட்டது போல வேறு எதுவும் என் இதயத்தை தொட்டதில்லை."

என்று அவருக்கு அருகில் இருப்பவர் திருக்கலிமாவை கூற, அதை ரயீஸ் முன்மொழிந்து தன்னை இஸ்லாத்தில் இணைத்துக் கொண்டார்.

கலிமா கூறி முடித்தவுடன்,

"என்னால் இந்த கலிமா ஷஹாதாவை சரிவர உச்சரிக்க முடியவில்லை. ஆனால் ஒன்றை சொல்கிறேன், 'ஒவ்வொரு முறையும் காஸாவிலிருந்து வரும் செய்திகளை நான் படிக்கும் போதெல்லாம், இஸ்லாத்திடம் நெருங்கிய தொடர்பை உணர்கின்றேன்." என்கிறார்.

சமூக வலைதளங்களில் லட்சக்கணக்கில் சந்தாதாரர்களை வைத்துள்ள ரயீஸ் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு அதை காணொளியாக வெளியிட்ட இந்த செய்தி தீ போல் அமெரிக்கா முழுவதும் பரவியது என்பது குறிப்பிடத்தக்கது.


இந்த செய்தியை சொல்லும் Watenserb.com என்ற செய்தி நிறுவனம்,

"மேகன் ரயீஸின் இந்த செயலால், அவரைப் போலவே நிறைய டிக்டாக் பிரபலங்கள், காஸா பற்றிய செய்தியையும், இஸ்லாத்தையும் படிக்க ஆரம்பித்து விட்டார்கள்." என்று சொல்கிறது.

அவர்கள் எல்லோருக்கும் அல்லாஹ் நேர்வழி வழங்க துஆ செய்வோம். இன்ஷா அல்லாஹ்!

— அஷ்ரஃப் அலீ

## வாசகர் கடிதம்...


11-10-2023
Highlight! Superb!!
12/x/23

அன்புச் சகோதரருக்கு அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்).

நலம் நலமறிய ஆவல்!

தேவாரம் என்கிற ஊரில் பக்ரீஷ் விருந்தோம்பல் நிகழ்ச்சியில் தாங்கள் ஆற்றிய பேருரை 12 பக்கங்களில் வெளிவந்ததைப் படித்துப் பரவசப்பட்டேன். அது என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. அது ஒரு Highlight! Superb! அன்றைய தேதியில் மனைவிக்கு கண் ஆப்பரேஷன் அப்பாயிண்ட்மெண்ட் இருந்தும், வேறு தேதிக்கு மாற்றிக் கொண்டு, "துனியாவா? தாஃவாவா?" என்கிற மோதலில் தாஃவா அழைப்புப் பணி பக்கம் சாய்ந்த தங்களின் (ஏகீனை) திட நம்பிக்கையைக் கண்டு மெய்சிலிர்த்தேன். அபாரமான, ஆணித்தரமான, ஆழமான, அழகான, அருமையான, கருத்துக்களை அனைத்து தரப்பாருக்கும் எளிதில் புரியும் வண்ணம் அமைந்து விட்ட சொல்லாட்சி! தமிழ் நாட்டில் நகரங்கள், கிராமங்கள் முழுவதும் பரவ வேண்டிய அழைப்புப் பணியின் கருத்துப் பெட்டகம்! உரை முழுவதையும் Booklet போட்டு அச்சடித்து தமிழகம் முழுவதும் சேர்க்க ஆவண செய்திட கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் அன்பு மறவாத
ப.சையத் அஹமத்
எண் 11, பரகத் தெரு,
துளசேந்திரபுரம்,
கொள்ளிடம்,
609102 - மயிலாடுதுறை



# 26/11 மும்பை தாக்குதல்

# கர்கரேயின் உடலில் பாய்ந்த குண்டு யாருடைய துப்பாக்கியிலிருந்து பாய்ந்தது?

ஹேமந்த் கர்கரேயின் பிரேத பரிசோதனையில் கிடைத்தத் தகவல்கள் பல அதிர்ச்சியான புதிய திருப்பங்களைத் தருகின்றது. பிரேத பரிசோதனை அறிக்கை குற்றப்பத்திரிகையின் ஒரு பகுதி என்றாலும், அதன் பிரதி ஒன்றைப் பெற்றிடுவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. இப்போது நான் (எஸ்.எம்.முஷ்ரிஃப்) அதன் பிரதி ஒன்றை மெத்த கஷ்டங்களுக்குப் பின் பெற்றுக் கொண்டேன். அதனை மிகவும் ஊன்றிப் படித்தபோது, ஒரு வேறுபட்ட காட்சி வெளிச்சத்திற்கு வந்தது. அதனை இங்கே விரிவாகத் தருகின்றன்.

*மும்பை குற்றப்பிரிவு காவல்துறை தாக்கல் செய்த குற்றப் பத்திரிகையின்படி அஜ்மல் கசாப், இஸ்மாயில் கான் ஆகியோர் ரெங்கபவன் சந்தில் தங்களுடைய AK47 துப்பாக்கிகளுடன் பதுங்கி இருந்தார்கள். ஹேமந்த் கர்கரேயின் குவாலிஸ் கார் அங்கே வந்தபோது, தங்கள் கைகளிலிருந்த AK47 (ஏகே47) துப்பாக்கியால் சுட்டார்கள். அந்தக் "குவாலிஸ்" காரிலிருந்த எல்லாரும் கொலை செய்யப்பட்டார்கள். ஒரு காவலரைத் தவிர!*

**சிறப்புக் கட்டுரை**

கர்கரேயின் பிரேத பரிசோதனை அறிக்கையை படித்த போது, ஐந்து குண்டுகள், ஒரு கைத் துப்பாக்கி யிலிருந்து கர்கரேயின் கழுத்துப் பகுதி வழியாக அவருடைய உடலுக்குள் பாய்ந்திருக்கின்றது. அந்தக் குண்டுகள் கழுத்துப் பகுதியிலிருந்து நேரே கீழே பாய்ந்திருக்கின்றன. மூன்று குண்டுகள் உடலின் உள்ளே பாய்ந்து வெளியே வந்துவிட்டன. இரண்டு குண்டுகள் உடலிலேயே தங்கிவிட்டன.


இவையல்லாமல் வேறு குண்டு எதுவும் கர்கரேயுடைய உடலில் புகுந்திட வில்லை. தட்டச்சு பிரதி ஒன்று இங்கே இணைக்கப் பட்டுள்ளது. அந்த குவாலிஸ் காரில் இருந்த வேறு யாருடைய கழுத்திலும், இந்த கைத்துப்பாக்கிக் குண்டுகள் இல்லை.

இதிலிருந்து பெறப்படும் முடிவு என்னவெனில், கர்கரே அணிந்திருந்த குண்டு துளைக்காத கவசம்(அது அப்போதே காண மலாக்கப்பட்டு விட்டது) அவரை, தீவிரவாதி களின் (அபிநவ்பாரத்-ஐ சார்ந்தவர்களின்) குண்டுகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றியே இருக்கின்றது.ஒரேடியாக கொன்று விடவில்லை.

அபிநவ் பாரத்-ஐ சார்ந்தவர்கள் அவ்விடம் விட்டு அங்கே வந்த காரில் (ஸ்கோடோ) சென்றுவிட்ட பின் வேறுசிலர் அந்தக் குவாலிஸ்-க்குள் புகுந்து தன்னுடைய கைத் துப்பாக்கி யிலிருந்து கர்கரேயின் உடலுக்குள் குண்டுகளைப் பாய்ச்சி இருக்கின்றார்கள். இந்தக் குண்டுகளை, கர்கரே அணிந்திருந்த கவச உடைக்கும். அவருடைய (காலர் - Collar) கழுத்துப் பகுதிக்கும் இடையே இருந்த இடைவெளிக்குள் புகுத்தப் பட்டிருக்கின்றது.

ஆனால், ஆச்சர்யப்படக்கூடிய அளவில் இந்த முக்கியமான ஆவணமாகிய பிரேத பரிசோதனை அறிக்கையை எந்த நீதிமன்றமும் கணக்கில் எடுக்கொள்ள வில்லை. நீதி மன்றங்கள் இந்தப் பிரேத பரிசோதனை அறிக்கையை விமர்சன

**ஹேமந்த் கர்கரே அவர்களின் பிரேத பரிசோதனை அறிக்கை**


1A

P.M. No. FMT/BAC/01/08
Name - Hemant Kamkkar Karkare
Age - 54 yrs. Sex - male
External injuries – ① Total five firearm wounds of entry ... region between neck & right shoulder, shoulder blade top, region ... 4 entry wounds in one line, ... 1.2, 1.2, 1.5, 1.5 cms diameter from medial to lateral ... semicircular ... one firearm entry wound just behind ... of dimension 2 cm. circular; NO singeing, blackening, tattooing.
Tract - five haemorrhagic lacerated tracts from these entry wounds through thoracic & abdominal cavity region damaging right & left lung, heart, diaphragm, liver with corresponding three exit wounds - one on right side of chest, infraclavicular region of 3×2 cms. Second wound of exit through right shoulder ... of 1.5 cm diameter, & third wound of exit on Rt. side of chest supramammary region of dimension 2×1 cm. ... semicircular. All exit wounds have everted margins. One haemorrhagic lacerated tract through right lung and a deformed bullet found within right lung lower lobe. One tract through right lung, ... chamber of heart, liver, & the bullet retrieved just above right kidney which was preserved for C.E.
② Contusion on forehead (abraded contusion) 2×1 cm. (Right)
③ Contusion on face, left infraorbital region 4×2 cm.
④ Bullet graze (glancing injury) Rt. lateral side of neck 5×2 cm.
⑤ Two abrasions on Rt side of chest 2×2 and 1×1 cms
⑥ multiple small punctate abrasions on left arm, shoulder & elbow over area of 16×6 cms.
⑦ Two abrasions on upper chest Rt side, one over clavicle and second over supraclavicular region ... 3×2 & 3×3 cm respectively.
Internal injuries
1) fracture of 1, 4, 5th ribs right side.
2) fracture of Rt clavicle
3) fracture of sternum.
4) fracture of trachea.
5) right & left lung, heart, liver punctured & lacerated with haemorrhagic lacerated tract.
6) Blood in thoracic & peritoneal cavity found in 2000 cc.
TRUE COPY
Inspector of Police
Detection of Crime Branch, CID,
Unit - I, Mumbai.

பார்வையோடு விவாதித்திருக்க வேண்டும். அதனை தங்கள் தீர்ப்பிலும் விரிவாகச் சொல்லி இருக்க வேண்டும். இந்தப் பிரேத பரிசோதனை அறிக்கையைக் கண்டு கொள்ளாமல் விட்ட நீதிமன்றங்கள் மூன்று. அவை :

1) விசாரணை நீதிமன்றம்

2) உயர் நீதிமன்றம்

3) உச்ச நீதிமன்றம்

இத்தகையதொரு இமாலய தவறு நீதி மன்றங்களில் நடந்திருக்கின்றது. அதனால், கர்கரேயை கொலை செய்தது யார் என்பது முதலில் இருந்தே முழுமையானதொரு புலன் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

என்னுடைய ஆய்வின்படி, கர்கரேயின் கழுத்தில் குண்டுகளைப் பாய்ச்சிய

சந்தேகத்திற் குரிய அந்த நபர், மும்பை துணை காவல்துறை ஆய்வாளர். இப்போது துணை காவல், (Assistant Police Inspector. Now Asst. Commissioner of Police) (Sanjay Gowilkar) (D.B.Marg Police Station) நிலையத்தில் அன்று இவர்தான் இரவுப் பணியில் இருந்தார். இதை தொலைபேசி அழைப்புகளின் பதிவு ஒன்று தெளிவாகக் காட்டுகின்றது.

அது அன்று ரங்கபவன் சந்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டிற்குப் பின் உடனேயே அந்த சந்தில் நுழைந்த ஒரே வாகனம் இவருடைய வாகனந்தான். இதே வாகனந்தான் அங்கிருந்து மெட்ரோ சவிக்கிற்கு சென்றது. அங்கிருந்த அப்பாவி மக்கள் மீது, குண்டுகளைப் பாய்ச்சியது. அந்த அப்பாவிகளில் இரண்டு போர் பிணமாகினார்கள். இவற்றை யெல்லாம் The Wireless Call Records என்ற கம்பியில்லா தொலைபேசி அழைப்புகள் தெளிவாகக் காட்டுகின்றன.

இந்த வகையில் நான், ஒரு விரிவான அறிக்கையை மராட்டிய மாநில, தலைமை செயலாளருக்கு 2019 நவம்பர் 19ஆம் நாள் அனுப்பி இருக்கின்றேன். ஆனால், இது வரைக்கும் எந்த விசாரணையும் நடக்கவில்லை.

எஸ்.எம்.முஷ்ரிஃப்,
Rted. IGP
பூனா,
15-10-2021

**எமது ஆய்வில்**

வீரமகன் எஸ்.எம்.முஷ்ரிஃப் IPS அவர்களின் இந்த ஆய்விலிருந்து இன்னொரு கேள்வி களுக்கும் விடை கிடைக்கின்றது. அது, மத்திய உளவுத்துறையும், அபிநவ் பாரத்தும், வீரமகன் ஹேமந்த் கர்கரேயைக் கொலை செய்திட முயற்சி செய்தார்கள்.

காரணம்,

1) ஹேமந்த் கர்கரேதான் தீவிரவாதம், இந்துத்துவ தீவிரவாதிகளிடமிருந்துதான் வருகின்றது. பிரவாகமெடுத்து ஓடுகின்றது. காவித் தீவிரவாதம் என்பதைக் கண்டு




பிடித்தார். இதனால் "Saffron Terror" காவித் தீவிரவாதம் என்ற சொல் புழக்கத்தில் வந்தது.

2) ஓர் இந்து ராஷ்டிராவை இந்தியாவில் உருவாக்கிட பயங்கர சதித்திட்டங்கள் நடந்திருக்கின்றன என்பதையும் கண்டு பிடித்தார்.

- அந்தத் திட்டத்தில்,
- இந்துத்துவ தீவிரவாதிகள்,
- பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள்,
- இதர மதசார்பற்ற கட்சி எனச் சொல்லிக் கொள்ளும் கட்சிகள்,
- பல்வேறு தரப்பட்ட சமூக ஆர்வலர்கள்,
- உளவுத்துறையைச் சார்ந்தவர் இவர்களெல்லாம் உண்டு.

இதில் உளவுத்துறையைச் சார்ந்த கறுப்பாடுகள் சிலவற்றைக் கைது செய்ய வீரமகன் ஹேமந்த் கர்கரே முயற்சி செய்தார். சிலமுக்கிய உளவுத்துறையினரை கைது செய்ய




வேண்டிய நிலை. அதற்குள் மும்பைத் தாக்குதலை நடத்தி ஹேமந்த் கர்கரேயைக் கொலை செய்து விட்டார்கள்.

இதனால்தான் கர்கரேயின் கழுத்துப் பகுதியில் குண்டுகளைப் பாய்ச்சியவர் இதர இரண்டு காவல்துறை அதிகாரி மீதும் குண்டுகளைப் பாய்ச்சவில்லை. கர்கரேயைக் கொன்றாக வேண்டும் என்பதை ஓர் கட்டாயக் கடமை என எடுத்துக் கொண்டார்கள் உளவுத் துறையினர்.

ஆனாலும், குற்றுயிரும் குலையுயிருமாக இருந்த, சாலாஸ்கரை மருத்துவமனைக்குள் மரணிக்க விட்டுவிட்டார்கள்.

**கவனத்திற்கு....**

இங்கே நாம் ஒன்றை கவனிக்க வேண்டும்!

அது, எஸ்.எம்.முஷ்ரிஃப் தன்னுடைய கருத்துக்கு வலுசேர்க்கும் இதுபோன்ற ஆய்வுகளை மக்கள் மன்றத்தில் கொண்டு வந்திட வேண்டும் என விரைந்திட வில்லை. மாறாக, உரிய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கின்றார். அவர்கள் கவனம் செலுத்தவில்லை, கண்டுகொள்ளவில்லை. புறக்கணிக்கின்றார்கள் என்பதைத் தெரிந்த பின்பே மக்கள் மன்றத்திற்குக் கொண்டுவருகின்றார்.

ஆனாலும், நீதிக்காக நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள், கனைத்துக்கூட காட்டிட வில்லை.


இந்த நூலைப் பற்றியும் கர்கரேயின் கொலையைப் பற்றியும், பல புதிய தகவல்கள் கிடைத்துக்கொண்டேதான் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நாம், நமது “வைகறை வெளிச்சம்” மாதஇதழில் வெளியிட்டு வருகின்றோம். வாசகர்கள் அவற்றை படிக்கும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

**எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் மீது வழக்கு**

ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், இந்த நூல், நூலாக வெளிவந்திட வேண்டும் என்பதற்காகத் தொகுக்கப்பட்ட நூல் அல்ல.

மாறாக, உச்சநீதிமன்றத்தில் வழக்காகத் தொடுக்கப்பட்ட ஆதாரங்களின் திரட்டு.

உச்ச நீதிமன்றம் முதலில் மும்பை உச்ச நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுங்கள். அங்கே, நீதி கிடைக்கவில்லை என்றால், உச்ச நீதி மன்றம் வாருங்கள் என அறிவுறுத்தியது.



அதனால் வழக்கை மும்பை உயர்நீதிமன்றத்தில் தொடுத்தார்.

*PIL : Public Interest Litigation:* வழக்கு என தொடுக்கப்பட்டது. மும்பை உயர்நீதி மன்றத்தில், கிரிமினல் ரிட் என்ற அளவில் தொடுக்கப்பட்டது.

விசாரணையின்போது, அரசு வழக்கறிஞர் இப்படியொரு வாதத்தை முன்வைத்தார்.

"எஸ்.எம்.முஷ்ரிஃப் *IPS* என்ற முன்னாள் காவல்துறை அதிகாரி அவர்கள் ஒரு நூலை எழுதிவிட்டு, அதனை விற்பனை செய்வதற்கு, வழி இல்லாமல் வழக்குகளைத் தொடுக் கின்றார். இதன்வழி நூலின் விற்பனையை விரைவு படுத்திட விழைகின்றார்".

இதனை செவியுற்ற மும்பை உயர்நீதிமன்ற நீதிபதி மார்லாஃபள்ளி அவர்கள் இந்த நூலை நான் படித்துவிட்டேன். அதில் நிரம்பவே ஆதாரங்கள் இருக்கின்றன. முடிந்தால் நீங்கள் இந்த நூலாசிரியர் மீது ஒரு வழக்கைத் தொடுங்கள். *'FIR'* என்ற முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்யுங்கள். அந்த நெஞ்சுரம் உங்களுக்கு உண்டா?

இந்த நீதிமன்றத்தின் முன் ஒரு (*IAS* ஐ.ஏ.எஸ். அதிகாரி) இந்திய ஆட்சிப் பணி அதிகாரி சாட்சியம் சொன்னார். அதில் "கர்கரேயின் மீது குண்டுகளைப் பாய்ச்சியவர்கள், 'மராட்டி' மொழியில்தான் பேசினார்கள். ஆகவே அவர்கள் மராட்டியர் கள்தாம்" என்றார்.

அந்த ஆட்சிப் பணி அதிகாரி மராட்டிய மாநில சுற்றுலாத் துறையில், *Maharatshra Tourism Development Corporation*-ஐ சார்ந்தவர் கள். இதை நீதிபதி அரசு வழக்கறிஞரிடம் பொட்டில் அறைந்தார்போல் சொன்னார்கள். அரசு வழக்கறிஞர் அடங்கிப்போய் அமைதியாக அமர்ந்துவிட்டார்கள்.

**அதிகார வட்டத்தின் இலக்கியச் சூதாட்டம்**

ஆங்கிலத்தில் இந்த நூல் 5 பதிப்புகளைக் கடந்து பல ஆயிரம் பிரதிகள், மக்களைச் சென்று அடைந்துவிட்டன. அதேபோல் தமிழிலும், இதர மொழிகளிலும் பல பதிப்புகள் (தமிழில் 30 ஆயிரம் பிரதிகள் மக்களனச் சென்றடைந்துவிட்டன) பல ஆயிரம் பிரதிகள் மக்களனச் சென்றடைந்து விட்டன.


இதனால், அதிர்ந்துபோன உளவுத் துறையினர், தங்கள் பங்கில் சிலபல இலக்கியங் களை வெளியே கொண்டு வந்தார்கள். இந்த இலக்கியங்களை வழிமறிக்கவும். மக்களைக் குழப்பவும், ஓர் இலக்கியத்தைப் படைத்துள்ளார்கள் அதிகார வர்க்கத்தினர்

அந்த இலக்கியங்களுள் ஒன்று, கர்கரேயின் மகளைக் கொண்டே *Kemant Karkare, Memories of a Daughter-* ஹேமந்த் கர்கரே மகளின் நினைவுகள். *Jui Karkare Navare -* ஜூ கர்கரே நவாரீய்.

இதில் அவர் பொத்தாம் பொதுவாக மொத்தப் பழியையும், புல்லட் புரூஃப் ஜாக்கெட் என்ற குண்டுதுழைக்காத கவசத்தன் மேல் போடுகின்றார்.

நூல் மிகவும் மலிவான விலையில் விற்பனை போகிறதால், சந்திரப்பூர் நக்ஸலைட்களால் சண்டையிட்டு கொலை செய்திட முடியாத மாவீரன் ஹேமந்த் கர்கரே இந்துத்துவ தீவிர வாதிகளும் உளவுத்துறையும் கொலை செய்து விட்டார்களே என எண்ணி மனம் பதறுகின்றது.

**- மு.குலாம் முஹம்மது M.A.Jmc.,**


**நூலைப்பெற**

**போன்:**
**7401213394**
**7358278146**
**8148129887**


**விலை**
**ரூ.25/-**

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல – ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

**- நூலிலிருந்து**

# கர்கரேயை கொலை செய்தது யார்?

விரிவாக்கப்பட்ட 5ஆம் பதிப்பு




- அரசின் தீவிரவாதம் - இந்தியாவின் வரலாறு என்றாகிவிட்டது. இந்தியாவில் முஸ்லிம்களை எதிரிகளாகக்காட்டி தீவிரவாதத்தைச் செய்தவர்கள் எல்லா அதிகாரத்தையும் அபகரித்து விட்டார்கள். அவர்கள் குண்டுகளை வைத்து மனிதர்களை பிணங்களாக குவித்துவிட்டு, அப்பாவி முஸ்லிம்கள் மீது பழியைப் போடும்போதெல்லாம் அவற்றை பரபரப்புகளாக ஆக்கி, பட்டித் தொட்டிகளெல்லாம் பரவிடச் செய்தது, நம்மை அப்பிப் பிடித்திருக்கும் பொது ஊடகங்கள்,

- நாட்டின் உண்மையான தீவரவாதிகள் முஸ்லிம்களல்ல, இந்துத்துவ பரிவாரங்கள்தாம் என்பதை முதன்முதலில் அதிகாரப்பூர்வமாக கண்டுபிடித்து நிரூபித்தவர் ஹேமந்த் கர்கரே! இவர் மராட்டிய மாநிலத்தின், தீவரவாதத் தடுப்புப் படையின் தலைவர் முழு உண்மையையும் கண்டுபிடித்ததால் அவரை அதே காவிகளின் பரிவாரம் கொலை செய்தது. அதையே 26/11 என அடையாளப்படுத்துகின்றார்கள்.

- அவரது கொலைக்கு நீதிதேடி புறப்பட்டார் எஸ்.எம்.முஷ்ரிஃப். இவர் முன்னாள் மராட்டிய மாநிலத்தின் காவல்துறை அதிகாரி, இன்ஸ்பெக்டர் ஜெனரல். அதன் சுருக்கமே இந்த நூல். இந்தப் பதிப்பில் இன்னும் பல அரிய, அதிர்ச்சியான உண்மைகளைக் கண்டெடுத்துத் தந்திருக்கின்றார். அதனால் இது விரிவாக்கப்பட்ட பதிப்பு.

- தமிழில் மு. குலாம் முஹம்மத், M.A., in JMC. ஆசிரியர் - வைகறை வெளிச்சம்

வேர்கள்
வெளியீட்டகம்

**விலை – ரூ.450/–** போன் : 7401213394 / 7358278146 / 8148129887

# 26/11 விசாரணை நீதித்துறையும் மயங்கியது ஏன்?

விலை 220/-

26/11
விசாரணை
நீதித்துறையும்
மயங்கியது
ஏன்?
S.M. முஷ்ரிஃப்
மஹாராஷ்டிர மாநில முன்னாள் I.G.
வேர்கள் பதிப்பகம்

- நாட்டில் கொந்தளிப்பு! மக்களின் மனங்களில் குமுறல்! நமது மத்திய உளவுத்துறையின் வட்டாரங்களில் வாட்டம்! வலதுசாரி கும்பல்களின் கூடாரங்களில் குமுறல்! காரணம் 26/11 (எ) மும்பைத் தாக்குதல் குறித்து இவர்கள் விட்ட பொய்களையும் புனைந்துரைகளையும், மராட்டிய காவல்துறை அதிகாரி ஐஜி. அவர்களின் நூல் தவிடுபொடியாக்கி விட்டது அந்த நூல்: "கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகம்"

- இந்த நூலில் அவர், மத்திய உளவுத்துறையின், மராட்டியக் காவல்துறையின். கதையை உடைத்ததுடன் உண்மையையும் கண்டெடுத்துப் பிரகடனப்படுத்தினார். உங்கள் கைகளிலிருக்கும் இந்த நூலில், மத்திய உளவுத்துறைத் தங்கள் பொய்யை உண்மையென நிலைநாட்டிட, வழக்கின் போக்கு, விசாரணை இவற்றை திரித்தது – என்பதையும் நீதியின் ஓட்டத்தையும், தேட்டத்தையும் ஒவ்வொரு கட்டத்திலும் வழிமறித்து, பொய்யைத் திணித்தது என்பதையும் விளக்கியுள்ளார். இதில் எப்படி சில பல ஊடகங்கள் பயன்படுத்தப் பட்டன என்பதையும் தெளிவுப்படுத்துகின்றார்.

- அரசியல் நிர்ணயச்சட்டத்தால் ஆக்கப்படாத உளவுத்துறை எந்த சட்டத்தின் அங்கீகாரமில்லாத மத்திய உளவுத்துறை நாட்டில் அனைத்தையும், அனைத்து நிர்வாக அமைப்புகளையும், கட்டுக்குள் வைத்து ஆட்டிப்படைக்கின்றது. நூலாசிரியர் இந்த நிலை மாற்றப்பட நீதி நிலைக்க வேண்டும் என்கின்றார். இதற்கு நீதித்துறையே நம்புகின்றார். நாடுகின்றார்.

**எஸ்.எம்.முஷ்ரிஃப்**
மஹாராஸ்டிராவின் முன்னாள் ஐ.ஜி.

வேர்கள்
இஸ்லாமிய இலக்கியங்களின் வெளியீட்டகம்

**போன் : 7401213394 / 7358278146 / 8148129887**

# ஷுஹதாக்களின் தாய்மார்கள் நிறைந்த பூமி

# பாலஸ்தீன்

யூதர்கள் ஆக்கிரமித்த பாலஸ்தீனையும். முதல் கிப்லாவான பைத்துல் முகத்தஸையும் மீட்பதற்காக தங்கள் பிள்ளைகளை அல்லாஹ்வின் பாதையில் தாராளமாக அர்ப்பணித்தவர்கள் பாலஸ்தீன் தாய்மார்கள். இவர்கள் தங்கள் பிள்ளைகள் எதிரிகளால் கொல்லப்பட்ட போது அழுவதற்கு பதிலாக மகிழ்ச்சி அடைகிறார்கள். அவர்களின் மகிழ்ச்சியைப் பற்றி ஃபாலஸ்தீன் மீடியாவிற்கு அளித்த பேட்டியில் கூறுகிறார்கள்.

மகன் மரணித்த செய்தியைக் கேட்டதாய் கூறியது.

“நாங்கள் எங்கள் மகனின் மரணத்தை எதிர்பார்த்து இருந்தோம். அவன் ஷஹீதாக மரணிக்க வேண்டும் என்று ஆசை கொண்டான். அவன் ஒவ்வொரு முறையும் போராட்டத்திற்கு செல்லும் போது ‘அல்லாஹ் உன்னுடன் இருப்பான்’ என்று கூறி அனுப்பி வைப்போம். ஷஹீதாக மரணிக்க வேண்டும் என்கின்ற ஆசை அதை நோக்கி பயணமும் அவனுடைய இலட்சியத்தை அடையச் செய்தது. அல்லாஹ்விற்கே புகழ் அனைத்தும், தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை ஃபாலஸ்தீனை மீட்பதற்காக தியாகம் செய்ய வேண்டும்.”

இஸ்ரேலிய பாதுகாப்பு படைக்கு எதிராக நடந்த சண்டையில் ஷஹீதாக்கப்பட்ட ஹம்ஸா ஜமாராவின் தாய் கூறியது.

“அல்லாஹ் என் மகனுக்கு ஷஹீதுடைய அந்தஸ்தை வழங்கட்டும் என பிரார்த்திக்கிறேன். இறைவன் நாடினால் என் மகன் நபிமார்கள், தியாகிகள் மற்றும் உண்மையாளர்களுடன் இருப்பான். இன்று என் மகனின் திருமண நிகழ்ச்சிக்கு வந்த அனைவரையும் வாழ்த்துகிறேன். (ஷஹீதுகளுக்கு அல்லாஹ் ஹூருலீன்களை திருமணம் செய்து தருகிறான்.) என் மகன் ஃபாலஸ்தீனத்திற்காகவும். இஸ்லாத்திற்காகவும், ஃபாலஸ்தீன மக்களுக்காகவும் தன்னை தியாகம் செய்து கொண்டான்.”

“இன்றைய நாள் என் வாழ்நாளின் சிறந்த நாள். இறைவன் என்னைப் பற்றி மகிழ்ச்சியடைகிறான் என்று நினைக்கிறேன். ஏனென்றால் நான் என் மகனை அல்லாஹ்விற்கு அவனுடைய பாதையில் கொடுத்து விட்டேன். நான் இன்னும் அதிக தியாகம் செய்ய நினைக்கிறேன். ஒரு தாய்க்கு தன் பிள்ளைகளை விட விலைமதிப்பற்றது எதுவுமில்லை. ஆனால் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்கு முன்னால் விலை மதிப்பற்றது எதுவும் இல்லை.”

இன்று நான் சந்தோஷத்தோடு என் தலையை உயர்த்துகிறேன். என்னுடைய மகன் ஒரு ஷஹீத். அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகிறேன். என்னுடைய மகன் ஷஹீதாக வேண்டும் என பிரார்த்தனை செய்தான். மற்ற வழிகளில் மரணிப்பதை விட ஷஹீதாக மரணிப்பது சிறந்தது. என் மகன் என்னிடம் கூறினான். ‘இந்த உலகில் யாரையும் மணக்க விரும்பவில்லை. நான் ஹூருலீன்களை மணக்க விரும்புகிறேன். என்றான். உன்னுடைய ஆசை ஷஹீதாக வேண்டும் என்றிருந்தால் அதற்கு நான் பிரார்த்திக்கிறேன் என்றேன். அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும். அல்லாஹ் என் மகனை தேர்ந்தெடுத்தான். ஷஹீதடையச் செய்தான்.”

பங்கம்

ஒரு ஷஹீதுடைய தாய் கூறுகிறாள்:

*“நாம் நம்முடைய குழந்தைகளை அல்லாஹ்வின்பால் கொடுப்பது நம் மீது கடமை. நம் பிள்ளைகளின் இழப்பு நமக்கு வேதனை அளிக்கிறது என்பது உண்மை. நான் ஒருபோதும் என் மகனை மறக்க மாட்டேன். அவனுடன் இருந்த ஒவ்வொரு நொடிப்பொழுதையும் நினைவு கூறுகிறேன். மறக்க முடியாது. என் மகன் ஷஹீதானது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அவன் சுவனத்தில் இருப்பான். அவனுக்கு ஹூருலீன்கள் திருமணம் செய்து வைக்கப்படும். எங்களுடைய மகிழ்ச்சி எங்கள் பிள்ளைகளை நாங்கள் நேசிப்பதில்லை என்பதல்ல. எங்கள் பிள்ளைகளை நாங்கள் நேசிக்கிறோம். எங்கள் ஃபாலஸ்தீனத்தையும் நாங்கள் நேசிக்கிறோம். இறைவனின் தீர்மானத்தையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.”*

*இஸ்ரேலிய இராணுவத்தின் துப்பாக்கிகளால் ஷஹீதாக்கப்பட்ட பல சிறுவர்களுள் ஒருவன் முஹம்மது யூசுப் வயது - 12. இச்சிறுவனைப் பற்றி அவனுடைய தாய் கூறுகிறாள்,*

*“ஏனைய சிறுவர்களைப் போலவே யூதர்களை கல்லால் அடிப்பதற்கு சென்று வருவான். அவன் ஷஹீதான அன்றைய தினம் வெளியே செல்ல அனுமதிக்குமாறு மூன்று முறை என்னை வற்புறுத்தினான். அம்மா நான் ஷஹீதாக மரணிக்க விரும்புகிறேன் என்று கூறியவாறே அவன் அனுமதி கேட்டுக்கொண்டிருந்தான். என்னையும் உன்னோடு அழைத்துச் செல் என்று நானும் கூறிக்கொண்டிருந்தான்.”*

*“நீங்கள் வந்து என்ன செய்வீர்கள்? என்று கேட்டான். நான் உனக்கு கல் பொறுக்கித் தருகிறேன் என்று கூறினேன். இல்லை என் சிறிய தம்பிகளை கவனித்துக் கொள்ளுங்கள் நான் போய் வருகிறேன் என்று கூறினான். அல்லாஹ் உன் பாதையை மறைத்து வைப்பானாக போய் வா என்று அனுப்பி வைத்தேன். பின்னர் வீட்டின் கூரையில் ஏறி யூதர்களுக்கெதிரான வாசகங்களை எழுதலானான். அதிகாலை வரை அங்கிருந்தான். ஃபஜ்ர் வேளை வந்தது குளித்தான். ஃபஜ்ர் தொழுதான். சூரியன் உதித்தபின் யூதர்களை கற்களால் எதிர்கொள்ளவும், அல்லாஹ்வை ஷஹீதாக சந்திக்கவும் தன் நண்பர்களோடு சென்று விட்டான்.”*

அல்லாஹ்வின் பாதையில் போரிட்டு கொல்லப்பட்டவர்களை மரணித்தவர்கள் என்று நிச்சயமாக எண்ணாதீர்கள். தம் ரப்பினிடத்தில் அவர்கள் உயிருடனேயே இருக்கிறார்கள். (அவனால்) அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள். (ஆல இம்ரான்:169)

முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ் உயிர்த்தியாகிகளுக்கு ஆறு தனிச் சிறப்புகளை ஏற்படுத்துகிறான். முதலாவதாக மன்னிக்கப்படுகிறார். சுவனத்தில் அவருடைய இடம் காண்பிக்கப்படுகிறது. கப்ரு வேதனை கிடையாது. நியாயத் தீர்ப்பு நாளில் பாதுகாக்கப்படுகிறார். மாணிக்கம் பதித்த கிரீடம் அணிவிக்கப்படும்.அது இந்த உலகம் அதில் உள்ளவற்றைக் காட்டிலும் உயர்ந்தது. 72 சுவனத்துக் கண்ணிகள் திருமணம் முடிக்கப்படும். 70பேருக்கு மறுமையில் சிபாரிசு செய்ய அனுமதிக்கப்படும். (அறிவிப்பாளர்: அல் முக்தாப் இப்னு பாது இப்னு யக்கீப் (ரலி) (நூல் : தீர்மிதி)



# அல் அக்ஸாவை பாதுகாக்க தனது வாழ்க்கையையே தியாகம் செய்த உதுமானிய படையின் கடைசி வீரர்!

முதல் உலகப்போரின் போது மஸ்ஜிதுல் அக்ஸாவை பாதுகாப்பதற்காக உதுமானிய கிலாஃபத், “ஒரு படையை நிறுத்தியிருந்தது. அந்த படையின் கடைசி வீரன், தனது 92வது வயது வரை மஸ்ஜிதுல் அக்ஸாவிலேயே இருந்து 1982ல் அல்லாஹ்வை சென்றடைந்த சுவாரஸ்யமான வரலாறு தான் கார்ப்பரல் ஹஸன் அவர்களின் வரலாறு.

1972ல் மறைந்த துருக்கியின் பத்திரிகையாளர் “இஷான் பார்தாக்கி” அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு சென்ற போது, அங்கு ஒரு வயதான முதியவரை சந்திக்கின்றார். அவரிடம் “ஸலாம்” கூறி, “தாங்கள் யார்?” என்று கேட்கிறார். அதற்கு அந்த முதியவர் சொன்ன பதிலைக் கேட்டு சிலிர்த்து போனார் “இஷான் பார்தாக்கி.


யுவான்னி ரிட்லி

“நான் 20வது காவல் வீரன், 36வது பட்டாலியன், ஸ்குவாட்ரான் எனும் சக்தி வாய்ந்து துப்பாக்கிக் குழுவின் 8வது வீரன் ஹஸன்” என்று தன்னை அறிமுகப்படுத்தியுள்ளார் அந்த முதியவர்.

நீண்ட வெள்ளை தாடியுடன் தோற்றமளித்த அந்த முதியவர் விரிவாக சொல்லத் தொடங்கினார்,

"முதலாம் உலகப்போரில் எங்கள் படை சூயஸ் கால்வாய் பகுதியில் பிரிட்டீஷ் படைகளை எதிர்த்து சண்டையிட்டுக் கொண்டிருந்தது. அந்த போரில் நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம். இஸ்லாத்தின் நிலங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நம் கைகளில் இருந்து சென்று கொண்டிருந்தது. பின்னர் ஆங்கிலேயர்கள் அல்குத்ஸ் வாசல்களை அடைந்து ஜெரூஸலம் நகரத்தையும் ஆக்கிரமிக்கத் தொடங்கினர். அப்போது மஸ்ஜிதுல் அக்ஸாவின் பாதுகாப்பிற்காக எங்கள் படை இங்கே கொண்டு வரப்பட்டது."

"அப்போது எங்கள் படையில் 53 வீரர்கள் இருந்தோம். அந்த நேரத்தில் "இஸ்தான்புல்" ஆபத்தில் இருந்ததால், எங்கள் படையை அங்கே நகர்த்துமாறு உத்தரவு வந்தது. ஆனால் எங்களை வழிநடத்திய தளபதியோ நேராக எங்களிடம் வந்தார், "தலைநகரை ஆபத்துகள் சூழ்ந்துள்ளதால் நான் அங்கு செல்லப் போகின்றேன். என்னுடன் தாய்நாட்டிற்கு வர விரும்புபவர்கள் தாராளமாக என்னுடன் வரலாம்."

"ஆனால் எனது சிங்கங்களே, நான் உங்களுக்கு ஒன்றை சொல்கிறேன். அல் குத்ஸை பாதுகாப்பது நம் மீது கடமை. இக்கட்டான இந்த போர்ச் சூழலில், உதுமானிய படைவீரர்கள், இஸ்லாத்தின் முதல் கிப்லாவான மஸ்ஜிதுல் அக்ஸாவை விட்டு ஓடிவிட்டார்கள் என்ற பழிச்சொல் நமக்கு ஏற்பட வேண்டாம்." என்றார்.

"இதனால் நானும் என்னுடைய படையில் இருந்த 52 வீரர்களும் மஸ்ஜிதுல் அக்ஸாவிலேயே இருந்துவிட்டோம். வேகமாக நாட்கள் ஓடிவிட்டன. என்னுடைய படையில் இருந்த என்னுடைய சகோதரர்கள் ஒருவர் பின் ஒருவராக அல்லாஹ்வை சென்று அடைந்துவிட்டனர். இறுதியாக நான் மட்டும் இப்போது இங்கே இருக்கின்றேன்." என்று சொல்லி முடித்தார் அந்த முதியவர்.

அந்த முதியவரின் இந்த வரலாறை கேட்டு சிலிர்த்து போன இஷான் பார்த்தாகி, வீடு திரும்பியதும், கார்பரல் ஹஸனுடைய கமாண்டர் முஸ்தபா எஃபண்டி அவர்களை கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினார். ஆனால் அவர் அப்போது போர் நடந்து முடிந்த சில ஆண்டுகளிலேயே அல்லாஹ்வை சென்றடைந்து விட்டிருந்தார்.




பின்னர் 10 வருடங்கள் கழித்து 1982ல், மஸ்ஜிதுல் அக்ஸாவில் கார்ப்பரல் ஹஸன் அவர்கள் அல்லாஹ்வை சென்றடைந்து விட்ட செய்தி, இஷான் பார்த்தாகி அவர்களுக்கு தெரிய வந்தது.

ஆம்! 65 ஆண்டுகள் தன்னுடைய சுதந்திரத்தை எல்லாம் விட்டுவிட்டு அல் அக்ஸாவின் பாதுகாப்பிற்காக பணியில் இருந்த அந்த வீரர், மரணத்தின் மூலம் ஓய்வு பெற்றுவிட்டார்

கார்ப்பரல் ஹஸனின் இந்த வரலாற்றை மிடில் ஈஸ்ட் மானிட்டரில் பதிவு செய்த சகோதரி யுவான்னி ரிட்லி, "இந்த வரலாற்றை அறிந்து கொண்ட போது என்னுடைய முதுகெலும்பு சிலிர்த்து விட்டது" என்கிறார்.

மேலும் அவர் கூறுகையில்,

"கார்ப்பரல் ஹஸன் போன்ற நமது உம்மத்தின் ஹீரோக்களின் வரலாறுகள் யாராலும் அறியப்படாமல் அப்படியே மறைந்து போய்விடுகின்றது. முஸ்லிம் உம்மத்தின் முதல் கிப்லாவான மஸ்ஜிதுல் அக்ஸாவை எப்படி பாதுகாக்க வேண்டும் என்பதற்கு கார்ப்பரல் ஹஸன் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அவரது ஈடுபாடும், வீரமும், ஒழுக்கமும் கவனிக்கத்தக்கது. அத்தகையை அர்ப்பணிப்பு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது அதிகமாக தேவைப் படுகின்றது." என்கிறார்.

Source; Middle East Monitor, Article by Yvonne Ritly

தமிழில் :

ஜாஸ்மின் ஃபாத்திமா Bsc.B.ed, LLB.,

# பாலஸ்தீன குழந்தைகள்...!

## உலக முஸ்லிம்களுக்கு ஒரு பாடம்...!

## நெஞ்சை நெருடும்... ஷஹீது விளையாட்டு...




குழந்தைகள் எந்தக் காட்சிகளை அடிக்கடி காண்கிறார்களோ, எது அவர்களின் இதயத்தில் ஆழப்பதிந்து விட்டதோ, எது அவர்களுக்கு பிடித்திருக்கிறதோ அதை தங்களுக்கிடைய ஒரு விளையாட்டாக விளையாடி மகிழ்வதுண்டு.

பள்ளிக்கூடத்தில் தன்னைக் கவர்ந்த ஆசிரியை(மிஸ்) போல வீட்டில் சகதோழிகளுடன் School வைத்து நடத்துவது, தன் தாயைப்போல சமையல் செய்து பரிமாறுவது என இந்த விளையாட்டுகள் இருக்கும். ஆனால்... ஃபலஸ்தீன் குழந்தைகள் என்ன விளையாட்டு விளையாடுகிறார்கள் என்பதை ஒரு காணொலியில் அல்ஜஸீரா வெளியிட்டுள்ளது. அதில்,

“இது என்ன விளையாட்டு” “ஷஹீத் விளையாட்டு. இவள் என் சகோதரி ‘ஹாதி’தான் ஷஹீதானவள்” (ஒரு குழந்தை கை கால்களை ஆட்டி விளையாடுகிறது தொட்டிலில்..)

ஏன் இந்த விளையாட்டு? “ஷஹீத் என்றால் அல்லாஹ்வுக்கு ரொம்ப பிடிக்கும்” என்று அக்குழந்தை பதில் சொல்கிறது..!

## தாயின் மடிபோல்.....வேறுண்டோ....?

“இஸ்ரேல் குண்டுமழை பொழியும் போது உங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள எங்கு அடைக்கலம் தேடுவீர்கள்” என்று ஃபலஸ்தீன் குழந்தைகளிடம் கேட்கிறார் ஒருவர். அதற்கு “தாயின்மடி” என்று சிலரும் “தாய், தந்தை” என்று சிலரும் “பள்ளிக்கூடங்கள்” என்று சிலரும் “மருத்துவமனை தான் அதற்கு ஏற்ற இடம்” என்று சிலரும் நம்பிக்கையுடன் கூறுகின்றனர். காஸாவின் மருத்துவமனையில் சியோனிஸ இஸ்ரேல் அரசு குண்டுகளை வீசியபோது தகர்ந்தது மருத்துவமனை மட்டுமல்ல.இந்த நம்பிக்கையும் தான்.




இந்த சியோனிஸ்டுகள் தான் முதன்முதலாக ஃபலஸ்தீன் நாட்டுக்கு அடைக்கலம் தேடிவந்தபோது “ ஐரோப்பிய நாடுகள் எங்கள் வாழ்வை சீரழித்து விட்டன. முஸ்லிம்களே.. நீங்கள் எங்கள் நம்பிக்கையை சிதைத்து விடாதீர்கள்” என்று பதாகை ஏந்தி பஞ்சைப் பராரிகளாக வந்தவர்கள்.

# ஒரு பாலஸ்தீன சிறுமியின் வஸிய்யத்...!



مرحباً، انا هيا، وسأكتب وصيتي الآن

١. نقودي: ٤٥ شيكلاً لماما و٥ لزينة

و٥ لهاشم و٥ لتيتا و٥ لخالتو هبة و٥ لخالتو مريم

و٥ لخالو عبود و٥ لخالتو سارة

٢. العابي وجميع اغراضي: لصديقاتي

زينة (اختي) ريما منة امل

٣. ملابسي: لبنات عمي وإذا تبقى اي شيء فتبرعوا به.

٤. احذيتي: تبرعوا بها للفقراء والمساكين... بعد غسلها طبعاً

களங்கபடமற்ற ஒரு பலஸ்தீன் சிறுமியின் வஸிய்யத் எனும் இறுதி விருப்பக் கடிதம்.

என்னுடைய பெயர் ஹயாஹ்! என்னுடைய சொந்த கரங்களால் நான் எழுதும் வஸிய்யத் இது.

*01.* என்னுடைய பணத்தில், என்னுடைய அம்மாவிற்கு 45, செய்னா, ஹாஷிம், பாட்டி, அத்தைகள் ஹெபா, மர்யம், சாரா, மாமா அப்தோ ஆகியோருக்கு தலா 5ம் கொடுத்து விடுங்கள்.

*02.* என்னுடைய பொருட்களையும், பொம்மைகளையும், என்னுடைய தோழிகளான, செய்னா, தீமா, மென்னா, அமல் ஆகியோருக்கு கொடுத்து விடுங்கள்.

*03.* என்னுடைய துணிகளை, என் மாமா மகள்களுக்கு கொடுக்க போக மீதமிருந்தால், அதை தர்மம் செய்து விடுங்கள்.

*04.* என்னுடைய "ஷூ"க்களையும் தேவையுடையவர்களுக்கு தர்மம் செய்துவிடுங்கள். (கண்டிப்பாக துவைத்து சுத்தமாக கொடுக்க வேண்டும்.)

## என் செல்லங்களே...பிள்ளைகளே... எங்கள் கனவில் வாருங்கள்...!




பயங்கரவாத இஸ்ரேல் நடத்திய கொடூர தாக்குதலில் ஷஹீதான பலஸ்தீன் குழந்தைகளின் தாய் ஒவ்வொரு குழந்தையின் பெயரையும் சொல்லி விடை கொடுக்கும் நெகிழ்வான காட்சி. கல்லும் கசிந்துருகும் தாயின் சொற்கள். முஸ்லிம் நாடுகள் மனம் கசியுமா??

“தீத்தா.. மாலிக்.. பிள்ளைகளே.. அல்லாஹ் விடம் நான் உங்களை அனுப்பி வைக்கிறேன். இனி என் கனவில் வாருங்கள் என் செல்லங்களே!”

“(ஏற்கனவே ஷஹீதாகி சென்றுவிட்ட) உங்கள் சிறிய தந்தை முஹம்மதை சந்தியுங்கள். அவர் உங்களை கண்டு பெருமகிழ்ச்சி அடைவார். அல்லாஹ்வின் பெயரோடு உங்கள் பெயர் சேரட்டும்”.

“என் ஹமூதை சந்தித்து என் ஸலாமைக் கூறுங்கள்.”


**பேரா.இல்யாஸ் ரியாஜி**

# CRUSADE 2.0 BY JOHN FEFFER

**The west's Resurgent War on Islam**

# சிலுவைப் போர் 2.0

**மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்**




இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பு பிரச்சாரம், முதல் நாள் தொட்டே நடைபெற்று வருகின்றது. இதற்கு அந்தந்த காலத்தில் கிடைக்கும் அத்தனை ஊடகங்களும் பயன்படுத்தப்பட்டன.

ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக இவை நடைபெறவில்லை. நிரந்தரமான திட்டங்கள், பெரிய அளவில் அந்த நிதி தங்குதடையின்றி கிடைத்திட நிரந்தர ஏற்பாடுகள், அதற்காக 24×7 என உழைத்திட மனித ஆற்றல். அவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு-ஓவர் டைம், சம்பளம் முதல் ஓய்வூதியம் வரை நிரந்தர ஏற்பாடு என அத்தனையும் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன.

வரலாற்றில் இவையெல்லாம் எப்படி நடந்தன என்பதை வைகறை வெளிச்சம் மாத இதழில் தொடராக தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம்.

வெறுமனே இஸ்லாத்தின் எதிரிகள், எப்படி எல்லாம் செயல்படுகின்றார்கள் என்பதை மட்டும் வெளியிடவில்லை அந்த வெறுப்பை, எப்படி முஸ்லிம்கள் வெற்றி கொண்டார்கள்.



எப்படியெல்லாம் முஸ்லிம்கள் இந்த வெறுப்பு பிரச்சாரத்தை தூள் தூளாக்கினார்கள், தவிடு பொடியாக்கினார்கள் என்பதையும் நாம் நிரம்பவே கோடிட்டுக் காட்டி வருகின்றோம்.

அந்தத் தொடரை படித்தால் இஸ்லாத்திற்கு எதிரான சதிகளை அறிந்திடலாம். அவற்றை முறியடிக்க, ஆக்கபூர்வமான செயல் திட்டங்களைத் தீட்டலாம்.

**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

புகுமுன் :

வாசகர்களே இன்று காஸாவில் பாலஸ்தீன மக்களின் சார்பில் நடக்கும் பெரும் போர் அதன் பின்னணி உலகெங்கும் நடக்கும் இஸ்லாத்திற்கு எதிரான போர்கள் ஆகியவற்றை தெரிந்திட வேண்டும் என்றால் நீங்கள் இந்த தொடரை அவசியம் படித்திட வேண்டும். சாதாரணமாக நாம் முஸ்லிம்களின் பிரச்சனைகள் என்றாலும், உலக நிகழ்வுகள் என்றாலும், அவை உச்சத்தை அடையும்போது நமது கவனத்தைத் திருப்புகின்றோம். கவலைப்படுகின்றோம்! நம்மையே நாம் குற்றம் பிடித்துக் குமுறுகின்றோம். அந்த நேரத்தில் அந்தப் பிரச்சனையின் ஆழத்தைப் பற்றி பின்னணியைப் பற்றி கிஞ்சிற்றும் கவலைப்படுவதில்லை. நேரமும் நினைப்பும் இடம் கொடுப்பதில்லை. இதற்கு பக்கத்தாளம் போட்டார் போல் நம்மில் சில பேச்சாளர்களும்,இஸ்லாமிய சிந்தனையாளர்களும் நமது மாற்றார் கருத்தை ஒத்து ஊதி நம்மை நிலைகுலையச் செய்கின்றார்கள்.

ஆகவே பிரச்சினைகள் உலக நிகழ்வுகள் உச்சத்தை அடைவதற்கு முன் அவற்றின் பின்னணிகளை, அவற்றின் ஆழத்தை அடி வேரை நாம் புரிந்திட வேண்டும். அதற்கு அமைதியான ஆசுவாசமான நேரங்களில் நாம் இது போன்ற வரலாற்று நிகழ்வுகளையும், மாற்றாரின் - இஸ்லாத்தின் எதிரிகளின் திட்டங்களையும் அந்த திட்டங்களை அவர்கள் செயல்படுத்திய முறைகளையும் படித்துணர்ந்து நன்றாக தெரிந்திட வேண்டும். இது வெறுமனே நாம் பிரச்சனைகளை புரிந்து கொள்வதற்காக மட்டுமின்றி எதிரிகளின் திட்டங்களை முறியடிக்கவும், அப்பாவி மக்களை அவர்கள் நமக்கு எதிராக திருப்பிவிடாமல் பாதுகாக்கவும் பயன்படும்.

இறைவனின் இறுதித் தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வெற்றிக்குப் பின்னால் பல ஆயிரம் அரிய உழைப்புகள். அவற்றுள் தலையாயது அவர்கள் தன் தூதரின் தொடக்கக் காலந் தொட்டே எதிரிகளின் சிந்தனைப் போக்கையும், தெரிந்து கொண்டு,நேர்மையான எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டது தான்.

விரல் விட்டு எண்ணக்கூடிய நபித்தோழர்களின் காலந்தொட்டே அவர்கள் இதைச் செய்தார்கள். எண்ணிக்கையில் குறைந்தாலும் அவர்கள் அனைவரும் ஓரணியில் நின்று அனைத்தையும் செய்தார்கள். எதிரிகளின் திட்டங்களை அறிந்தார்கள்,அவற்றை உடனுக்குடன் முறியடித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

*- MGM*

# ஜான் பெப்ஃபர் கூறகின்றார்.....!

இப்போது ஜான் பெப்பர் இஸ்லாமோஃபோபியா என்ற இஸ்லாத்தின் மீது முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்ப்பவர்களின் திட்டங்களைச் செயல்களைப் பற்றி கூறுபனவற்றை கேட்போம்.



**JOHN FEFFER**

நாங்கள் முஸ்லிம்களுக்கு இடையே புகுந்து அவர்களை கிறிஸ்தவர்களாக மாற்றிடும் முயற்சிகளை மூச்சு விடாமல் செய்து கொண்டே இருந்தோம்.

நாங்கள் மேற்கொண்ட வேகம் போதாது என எண்ணிய எங்களுடைய செயல்வீரர்கள் சிலர் இப்படிக் கூறினார்கள்,

"The People (Arabs &Muslims)need to forcibly Converted to Christianity"

அதாவது இந்த மக்கள் முஸ்லிம்களும், அரேபியர்களும்

கட்டாயப்படுத்தப்பட்டு கிறிஸ்தவத்திற்கு மாற்றப்பட வேண்டும். இப்படிச் சொன்னவர் *"Right Wing"* வலதுசாரி அமைப்பைச் சார்ந்த ஒருவர். இவர் வானொலி செய்திகளுக்கு பணத்தை வாரி வழங்குபவர்.

(அப்படியானால் அந்த வானொலி செய்தி எப்படி இருக்கும் என்பதை யூகித்துக் கொள்ளலாம்)

கிறிஸ்தவத்திற்கு மாற்றுவது மட்டுமே அவர்களை மனிதர்களாக மாற்றும்.

Quoted in John Exposito - "The Future of Islam" (Oxford 2010) or as ANN Coulter put, we should invade their Countries, Kill their Leaders and Convert them to Christianity" ANN Coulter "This is War" National Review; September 13,2001.

( https//old. nation review. com /coulter. shtml.)

**இந்த எடுத்துக்காட்டு சொல்வது என்ன?**

என்ன விலை தந்தும், முஸ்லிம்களை கிறிஸ்தவர்களாக மாற்றிட வேண்டும், மாற்றியாக வேண்டும் அதுவும் நடக்கவில்லை என்றால் அவர்களுடைய நாடுகளை கைப்பற்றி தலைவர்களைக் கொலை செய்து அவர்களை (முஸ்லிம்களை) கிறிஸ்தவர்களாக மாற்ற வேண்டும்.

இந்த பிரச்சனையில் தான் இவர்கள் ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் மேற்கொண்ட ஆக்கிரமிப்புகளையும், அவற்றில் ஆயிரக்கணக்கில் கிறிஸ்தவ பிரச்சாரகர்களைக் கொண்டு நடத்திய கிறிஸ்தவப் பிரச்சாரத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த நாடுகளில் இவர்கள் அனுப்பிய படை வீரர்களும், எங்களை அனுப்பியது எங்கள் நாட்டவர்கள் அல்ல. எங்கள் நாட்டு கிறிஸ்த ஆலயங்கள் என்றார்கள்.

"We are not send by our Nation but by the Church"


இதனை நாம் விளக்கமாக தாலிபானின் பிடியில் என்ற யுவானி ரிட்லியின் நூலில் குறிப்பிட்டுள்ளோம்.

அக்டோபர் 7, 2023இல் தொடங்கி இன்றளவும் (நவம்பர் 15, 2023) நடந்து கொண்டிருக்கும் இஸ்ரேல் - ஹமாஸ் போரில் ஒரு உண்மை வெளிப்பட்டது. அது ஈராக், சிரியா ஆகிய நாடுகளிலிருந்து அமெரிக்கா முழுமையாக வெளியேறவில்லை. மாறாக அது அந்த நாடுகளை தன்னுடைய முழுமையான ஆக்கிரமிப்பின் கீழ் வைத்திருக்கின்றது. முழுமையாக இல்லா விட்டாலும், முடிந்த அளவிற்காவது, கிறிஸ்தவப் பிரச்சாரத்தை செய்து கொண்டிருக்கின்றார்கள். இஸ்லாமிய போராளிகள், குழுக்கள் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பில் இருந்து ஈராக்கையும், சிரியாவையும் மீட்டிட இராணுவ ரீதியாக போராடி வருகின்றன.

ஆக ஜான் ஃபெப்பர் அவர்கள் நமக்கு பல்வேறு ஆதாரங்கள், எடுத்துக்காட்டுகள் இவற்றின் வழி புலப்படுத்தும் பகிரங்க உண்மை, என்னவெனில் இஸ்லாத்திற்கு எதிராகவும், முஸ்லிம்களுக்கு எதிராகவும் ஒரு பெரும் ஆக்கிரமிப்புப் போர், அழிக்கும் போர் நடந்து கொண்டிருக்கின்றது என்பதே!

இனி, ஜான் ஃபெபர் சொல்வதை தொடர்ந்து செவிமடுப்போம்.

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.

நூலைப்பெற தொடர்பு கொள்ளுங்கள்

7401213394 / 7358278146

8148129887

# திருநெல்வேலி, களக்காடு கிராமத்தில் தாஃவா நூல் வெளியீடு







# ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும்

அக்டோபர் 15 அன்று திருநெல்வேலி மாவட்டம் களக்காடு கிராமத்தில், "களக்காடு வட்டார தாழ்த்தப்பட்டோர் சீர்த்திருத்தச் சங்கம்" மண்டபத்தில், ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்துவிடும் என்கிற வேர்கள் வெளியீட்டகத்தின் தாஃவா நூல் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட், மதுரை மாவட்டத்தின் பொறுப்பாளர், ரஃபீன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். விடுதலை சிறுத்தைகள் கட்சி, ஜான்ஸன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். நூலாசிரியர், வழக்கறிஞர் பெ.சின்னசாமி அவர்கள் ஏற்புரை வழங்கினார்கள். நிகழ்ச்சிக்கு தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்டின், நெல்லை/குமரி மாவட்ட தலைவர் முஹம்மது அலீ ஜின்னா அவர்கள் தலைமை தாங்கினார்கள்.




**வரவேற்புரை - ரஃபீன்**

வரவேற்புரை நிகழ்த்திய சகோதரர் ரஃபீன் அவர்கள், "தற்போது இந்தியா உள்ள சூழலில் முஸ்லிம்களுக்கும், முஸ்லிம் அல்லாத சகோதர சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கும் இருக்க வேண்டிய ஒற்றுமை குறித்து உரையாற்றினார். முஸ்லிம்களின் நம்பிக்கைகள் குறித்து சமூகத்தில் இருக்கக்கூடிய தவறான புரிதல்களை எல்லாம் விளக்கி கூறினார். மேலும் இந்தியாவில் தீண்டாமை கொடுமைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இஸ்லாம் மட்டுமே முழுமையான தீர்வாக உள்ளது" என்பதையும் ஆழமாக விளக்கிக் கூறினார்.

### வாழ்த்துரை - ஜான்ஸன்

வாழ்த்துரை வழங்கிய விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த ஜான்ஸன் அவர்கள் உரையாற்றுகையில், "இந்து மதத்தின் சாதீய தீண்டாமை முழுமையாக ஒழிவது இஸ்லாத்தை ஏற்பதால் மட்டுமே!" என்று கூறி அதற்கு சான்றாக தன்னுடைய சொந்த வாழ்வில் நடந்த சம்பவங்களை கூறி விளக்கினார்.

கிறுஸ்தவத்தில் சாதி இருக்கின்றது என்று அடித்து கூறிய ஜான்ஸன் அவர்கள்,



"இந்துவாக இருந்த ஒரு தாழ்த்தப்பட்டவன் சாதிக் கொடுமைகளுக்கு தீர்வாக கிருஸ்தவத்தை ஏற்றுக் கொள்கிறான். ஆனால் அவனால் அந்த மதத்தின் பாதிரியாராக ஆக முடியவில்லை. அந்த மதத்தைச் சார்ந்தவர்களிடத்தில், சகஜமாக பெண் கொடுத்து, பெண் எடுக்க முடியவில்லை. நான் எனது மகனுக்கு பெண் பார்க்க வேண்டும் என்றால் கூட, கிருஸ்தவ மதத்தைச் சார்ந்த இன்னொரு தாழ்த்தப்பட்ட குடும்பத்திலிருந்து தான் எடுக்க வேண்டும் என்ற நிலை உள்ளது. ஆனால் நான் வசிக்கும் ஊரில் ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அவருக்கு அதே ஊரைச் சார்ந்த இஸ்லாமிய குடும்பத்தில் பெண் பார்க்கிறார்கள். அந்த இஸ்லாமிய குடும்பம் அவனை முழுமையாக ஏற்றுக் கொண்டு பெண் கொடுப்பதை நான் கண்கூடாக பார்த்தேன். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் சாதி முழுமையாக ஒழிந்து விடும் என்பதற்கு இதைவிட என்ன சான்று வேண்டும்?" என்று பேசி, "சாதிய தீண்டாமைக் கொடுமைகளிலிருந்து விடுபட வேண்டும் என்றால் இஸ்லாத்தை ஏற்பதை தவிர வேறு எந்த தீர்வும் இல்லவே இல்லை!" என்று கூறினார்.

### இஸ்லாத்திலும் சாதி இருக்கிறது - மா.பெ.சுகுமாறன்



களக்காடு வட்டார தாழ்த்தப் பட்டோர் சீர்த்திருத்தச் சங்கம், தலைவர், மா.பெ.சுகுமாறன் அவர்கள் பேசுகையில், "இஸ்லாத்திலும் சாதி இருக்கின்றது. ஷியா, சன்னி என்ற சாதிப்பிரிவுகள் முஸ்லிம் களிடத்திலும் இருக்கின்றது. தமிழகத்தின் மீனாட்சிபுரம் கிராமத்தில் மதம் மாறிய பெண்களை, முஸ்லிம்கள் திருமணம் செய்து கொள்ள முன்வருவதில்லை. 'கருப்பாயி (எ) நூர்ஜஹான்' போன்ற நூல்கள் இதை பறைசாற்றுகின்றன." என்று பேசினார்.

சுகுமாறன் அவர்களுக்கு பதிலளித்த, ரஃபீன் அவர்கள், "ஷியா, சன்னி பிரிவுகள் என்பது சாதிகள் இல்லை. அது சாதரண பிரிவுகள் தான். அதில் தீண்டாமை இல்லை" என்பதை விளக்கிக் கூறினார். மேலும் இதுபோன்று இன்னும் நிறைய தவறான புரிதல்கள் முஸ்லிம்கள் பற்றி சகோதர சமூகத்தவர்கள் மத்தியில் நிலவி வருவதை, தன்னுடைய தாஃவா வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்து விளக்கி கூறினார்.

மேலும் சுகுமாறன் அவர்கள், "மீனாட்சிபுரத்தில் மதம் மாறிய பெண்களை முஸ்லிம்கள் திருமணம் செய்துகொள்ள் முன்வருவதில்லை" என்ற குற்றச்சாட்டிற்கு நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய முஹம்மது அலீ ஜின்னா அவர்களும், ஏற்புரை நிகழ்த்திய நூலாசிரிய சின்னசாமி அவர்களும் பதிலளித்தனர். அவை பின்வருவன,

### கதிரவன் அவர்களின் உரை

சுகுமாறன் அவர்களின் பேச்சுக்குப் பின், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கதிரவன் அவர்கள் உரையாற்ற வந்தார்கள். அவர் பேசுகையில், இந்து மதத்தில் தாங்கள் அனுபவித்த கொடுமைகளை எல்லாம் பேசினார். "நேற்றுவரை மாமன், மச்சானாக பேசிக்கொண்டிருந்த என்னுடைய பள்ளி நண்பன் அந்த கோவிலுக்குள் செல்லும் போது மட்டும் எங்களை ஓதுக்கிவிட்டுத்தான் செல்வான். எங்கள் பகுதிக்கு அருகில் இருக்கக்கூடிய கோவிலில் திருவிழா நடக்கும். ஆனால் எங்களால் அங்கே செல்ல முடியாது. அந்தக் கோவிலில் திருநீரு வாங்கி நெற்றியில் வைத்துக் கொள்ள முடியாது. அனைவருக்கும் அன்னதானம் போடும் போது அங்கே சென்று எங்களால் உணவருந்த முடியாது. காரணம், பிறப்பால் நாங்கள் பட்டியல் இனத்தைச்



சார்ந்தவர்கள் என்பதால். இந்தக் குறியீடு இன்னும் எங்கள் மீது இருக்கின்றது. ஆனால் முஸ்லிம்கள் நோன்பு நேரங்களில் எங்களை அழைத்து மேடையேற்றி, எங்கள் அருகில் அமர்ந்து உணவருந்துவார்கள்." என்று முஸ்லிம்கள் கடைபிடிக்கும் சகோதரத்துவத்தை மெய்சிலிர்க்க கூறினார்.

"மேலும் அவர் பேசுகையில், பெரியார், அம்பேத்கர் போன்ற தலைவர்கள், இந்து மதத்தின் சாதி தீண்டாமைகள் பற்றி என்ன கூறியிருக் கின்றார்கள் என்பதை பேசிவிட்டு, இங்குள்ள இஸ்லாமியர்கள், பாபருடைய பேரனோ, அக்பருடைய பேரனோ அல்ல. மாறாக நம்மைப் போன்று இந்து மதத்தின் தீண்டாமை கொடுமைகளுக்கு தீர்வை நோக்கி சென்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் தான்." என்று பேசினார்.

"மேலும் முஸ்லிம்களோடு சேர்ந்து நம்மைப் போன்றவர்களும், இந்த நூலை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் சேவைகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு தான் சார்ந்த திராவிட தமிழர் கட்சி அதை செய்யும்" என்று கூறி தனது உரையை முடித்தார்.

**நூலாசிரியர், பெ.சின்ன சாமி அவர்களின் ஏற்புரை**

இறுதியாக ஏற்புரை வழங்கிய நூலாசிரியர், பெ.சின்னசாமி அவர்கள், "இஸ்லாம் தீண்டாமையை மட்டும் ஒழிக்கவில்லை. ஒரேயடியாக சாதியையே தடம் தெரியாமல் அழித்து விடுகின்றது!" என்று பேசினார்.







சுகுமாறன் அவர்கள் மீனாட்சிபுரம் மதம் மாறிய பெண்கள் குறித்த தவறான கருத்திற்கு விளக்கமளித்த சின்னசாமி அவர்கள், “கருப்பாயி (ஏ) நூர்ஜஹான் என்ற நாவலை எழுதிய அன்வர் பாலசிங்கம் பற்றியும், அவருடன் தஞ்சையில் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்து, டி.எம். உமர் ஃபாரூக் அவர்களின் மூலம் இந்த பொய் நாவலின் முகத்திரையை கிழித்து தொங்கவிட்டதைப் பற்றியும் விளக்கி கூறினார்.”

(அந்த கருத்தரங்கில் பேசிய பேச்சுக்கள், “கருப்பாயி (ஏ) நூர்ஜஹான் - அன்வர் பாலசிங்கத்துடன் ஒரு நேர்காணல்” என்ற தலைப்பில் வேர்கள் வெளியீட்டகம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. வாசகர்கள் அதை வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.)

இப்படி ஒரு நாவல் வெளிவந்துள்ளது என்பதை கேள்விப்பட்டவுடன், தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்டின் தலைவர் மு.குலாம் முஹம்மது அவர்கள், சில இளைஞர்களோடு மீனாட்சிபுரம் கிராமத்திற்கு சென்றார். இந்த நாவலில் கூறிய படி அந்த கிராமத்தைல் மதம் மாறிய பெண் திருமணம் ஆகாமல் இருந்தால், அங்கேயே அவர்களை திருமணம் செய்துகொள்ள அந்த இளைஞர்களும் தயாரான நிலையில் சென்றனர். அதில் நானும் ஒருவன். ஆனால் நாங்கள் அங்கு சென்ற பின்புதான் தெரிந்தது அது அனைத்தும் பொய் என்று. பின்னர் நடந்தவற்றையெல்லாம் நூலாசிரியர் உங்களுக்கு விளக்கினார். என்று சுகுமாறன் அவர்களின் குற்றச்சாட்டிற்கு விளக்கமளித்து நிகழ்ச்சியை முடித்து வைத்தார் ஜின்னா அவர்கள்.



நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும், ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்து விடும் நூல் இலவசமாக வழங்கப்பட்டது.

மேலும் வேர்கள் வெளியீட்டகத்தின், பிராமினிஸ்டுகள் குண்டு வைத்தார்கள், முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள், கர்கரேயை கொலை செய்தது யார்?, 26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?, இஸ்லாம் நாங்கள் தேர்ந்தெடுத்த மார்க்கம் போன்ற நூல்கள் சிறப்பு விருந்தினர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும், மதிய உணவு வழங்கப்பட்டது. அல்ஹமதுலில்லாஹ்!

**ந.நி.,**



## தினமணி ஆசிரியருக்கு ஒரு கடிதம்!

# “பெண்” கல்விக்கு எதிரானதல்ல இஸ்லாம்!

பெறுநர்:

ஆசிரியர் அவர்கள்,

தினமணி, சென்னை.

"தாலிபானிஸ சவால்" (09/06/2023) தலையங்கம் பெண்கள் மீது தாலிபானின அடக்கு முறை என்று எழுதியிருந்தது. நபி(ஸல்) அவர்களிடம் அன்பு பரிவு, பாசம் காட்டவேண்டியவர்கள் யார் என்று கேட்டபோது உனது தாய்","உனது தாய், என்று மூன்று மூறை கூறிய நபியவர்கள், நான்காவதாக "உனது தந்தை “ என்றார்கள். இதிலிருந்து பெண் இனத்தின் மீது இஸ்லாம் காட்டியுள்ள முக்கியத்துவத்தை உணரலாம். அப்படிப்பட்ட இஸ்லாத்தைப் பின்பற்றும் தாலிபான்கள் பெண்கல்வியை மறுக்கவில்லை.

ஆண் பெண் இருபாலரும் சேர்ந்து படிப்பதை, ஆண்களுக்கு பெண்களும், பெண்களுக்கு ஆண்களும் ஆசிரியர்களாக இருந்து கல்வி போதிப்பதை விரும்பவில்லை. ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிப்பதால் ஏற்பட்டுள்ள விளைவுகள் தமது நாட்டிலும் மற்ற நாடுகளிலும் கணக்கில் அடங்காமல் இருக்கின்றன. பெண்களுக்கு கல்வி கற்பிக்க போதுமான பெண் ஆசிரியர்கள் ஆப்கானிஸ்தாவில் இல்லை. ஆண்களைக் கொண்டு பெண்களுக்கு கல்வி போதிப்பதையும் அதனால் விளையும் ஒழுக்க கேடுகளையும், தாலிபான்கள் விரும்பவில்லை என்பதுதான் உண்மை.

மேலைநாட்டு கல்வி நிறுவனங்களும் தொண்டு நிறுவனங்களும் சொல்வதை எல்லாம் நாம் நம்பக்கூடாது. காரணம் அவர்கள் கல்வி, மருத்துவம், வியாபாரம் என்பதில் தான் குறிக்கோளாக இருக்கிறார்கள். ஒழுக்கத்தைப் பற்றி அவர்கள் கண்டு கொள்வதில்லை. ஆனால் தாலிபான்கள் ஆண்களும், பெண்களும் தெருங்கி உறவாடுவதால் ஏற்படும் கலாச்சார கேடுகள் குறித்து கவனமாக இருக்கிறார்கள். பெண்கள் கல்விகற்காமல் இருந்தாலும் பரவயில்லை. அவர்கள் ஒழுக்கம் கெடக்கூடாது என்ற எண்ணம் கொண்டவர்களாக இருப்பதால், பெண்கல்வி ஆப்கன் பெண்களுக்கு மறுக்கப்படுவதாக ஊடகங்களால் செய்தி பரப்பப்படுகிறது.

பெண்களுக்கு தனியாக கல்வி கற்பிக்க போதுமான பெண் ஆசிரியர்கள் ஆப்கானிஸ்தானில் இல்லை என்பது தான் உண்மை. போதுமான பெண் ஆசிரியர்களை உலக தொண்டு நிறுவனங்கள் ஆப்கள் தாலிபான் ஆட்சியாளர்களுக்கு கொடுத்துதவ முன்வந்தால் இந்த குறைபாடு நீங்கும்.

**ஹாஜி.முஹம்மது, நிரவி**

### அன்பகம் தாஃவா மத்ரஸா

# இஸ்லாத்தை தழுவிய சகோதரிகளுக்கு நிக்காஹ்

அன்பகம் தாஃவா மதரஸாவில் 13-11-2023 அன்று மாலை அஸர் தொழுகைக்கு பிறகு இஸ்லாத்தை ஏற்ற சகோதரிக்கு திருமணம் நடைபெற்றது. அல்ஹம்துலில்லாஹ்



தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் கீழ் நடைபெற்றுவரும் நமது அன்பகம் மதரஸாவில் 24-10-2023 அன்று இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்ற சகோதரிக்கு திருமணம் நடைபெற்றது. அல்ஹம்துலில்லாஹ்!






# சிந்திக்கும் சமூகம் மாணவர்களுக்கான கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சி

*அனைத்து இஸ்லாமிய இயக்கங்கள், அமைப்புகள் மற்றும் இஸ்லாமிய கட்சிகள் இணைந்து நடத்திய "சிந்திக்கும் சமூகம் மாணவர்களுக்கான கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சி" கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் கடந்த 19-11-2023 காலை 11மணியளவில் அப்பா பள்ளிவாசல் சமுதாய கூடத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக வழக்கறிஞர் அ.கமருதீன் அவர்கள் "முஸ்லிம்களும் சட்டத்துறையும்" என்ற தலைப்பிலும், A.ஜாகீர் உசேன் அவர்கள் "வீட்டுக்கு ஒரு மருத்துவர்" என்ற தலைப்பிலும் சிறப்பாக உறையாற்றினார்கள்.*

**நமது நிரூபர்**
**யாசர் அரா:பத்**





# முழுமையான வாய் இம்பிளாண்ட்

மருத்துவர்
ஆர்.முரளி கார்த்திக்,
பல் மருத்துவர்,
சென்னை.

மருத்துவம் தொடர்

சென்ற இதழில் நாம் எதற்காகச் செயற்கைப் பல் பொருத்திக் கொள்ள வேண்டும் மற்றும் செயற்கைப் பல் கட்டும் முறைகளைப் பற்றித் தெரிந்து கொண்டோம். இந்தப் பதிவில் அனைத்துப் பற்களையும் இழந்தவர்கள் இம்பிளான்ட் முறையில் நிரந்தரமாக எப்படிக் கட்டிக் கொள்ளலாம் என்று பாப்போம். அனைத்துப் பற்களையும் இழந்தவர்கள் தாடை எலும்புக்கேற்ப நான்கு அல்லது ஆறு இம்பிளான்ட்டுகள் பொருத்தி அனைத்துப் பற்களையும் நிரந்தரமாக கட்டிக் கொள்ள முடியும்.

இம்முறையில் பற்களைக் கட்டிக்கொண்டால் நாம் விரும்பும் உணவை நன்றாக மென்று உண்ண முடியும். சிகிச்சைக்குப் பின் முகத்தோற்றம் மற்றும் தன்னம்பிக்கையை மீட்கலாம்.

**இம்பிளான்ட் முறையில் பல் எப்படி கட்டப்படுகிறது?**

**பல் மருத்துவரின் ஆலோசனை**

நிரந்தரமாக பல் கட்டிக் கொள்ள முதலில் உங்கள் பல் மருத்துவரை அணுக வேண்டும். உங்கள் பல் மருத்துவர் முதலில் சி.டி ஸ்கேன் பரிசோதனை மூலம் உங்கள் இந்த தாடை எலும்பின் அமைப்பு மற்றும் அடர்த்தியை கண்டறிவார். சர்க்கரை அளவு ரத்த அழுத்தம் மற்றும் தேவையான இரத்த பரிசோதனைகள் செய்யப்படும்.

மேற்கண்ட பரிசோதனைக்கேற்ப உங்கள் தாடை எலும்பில் எத்தனை இம்பிளான்ட் (பல் பதியம்) தேவைப்படும் மற்றும் அதற்கான செலவு

மற்றும் செய்முறை பற்றி மருத்துவர்கள் விளக்குவார்கள்.

**பல் பதியம் சிகிச்சை முறை**

உங்கள் தாடை எலும்பிற்கேற்ப 4 அல்லது 6 பல் பதியம் பொருத்தப்படும். இதற்கு மரத்துப் போகச் செல்லும் மருந்து செலுத்தப்படுவதால் வலி எதுவும் இருக்காது. வலி குறித்த எந்த அச்ச உணர்வும் இல்லாமல் இந்தச் சிகிச்சையைச் செய்துகொள்ள முடியும். செயற்கைப் பல் வேரை நவீன முறையில் வைத்ததும், நம் தாடை எலும்பு, பல் பதியத்துடன் இணைத்துக்கொள்கிறது. இதுவே எலும்பு இணைவாகும். இதற்கு ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை ஆகலாம்.

**பல் கட்டும் முறைகள்**

எலும்பு இணைவுக்குப் பிறகு உங்கள் பதியம் மற்றும் தாடை எலும்பின் அளவை அச்செடுத்து அதை வைத்து நிரந்தரச் செயற்கைப் பல் பொருத்துவர். இம்முறையில் பல் பொருத்த 3 முதல் 6 மாதம் வரை ஆகலாம். ஆனால் தற்போது அதிநவீனமான Add on 4 முறையில் குறைந்த கால அவகாசத்தில் பல் கட்டிகொள்ள முடியும்.

**எப்படிச் செய்யப்படுகிறது?**

கணினி வழிகாட்டுதல் *(Guided Surgery);* கணினியின், முன்கூட்டியே திட்டமிடப்பட்ட இடத்தில் உள்வைப்பு (ஸ்டெண்ட்) மூலம் பொருத்தப்படுகிறது.

கணினி வழி அளவு கொண்டு பல் பதியம் மற்றும் தாடை எலும்பின் அளவு எடுக்கப்படுகிறது.

இதன்பிறகு மிகவும் எடைக் குறைவான பல்செட் உங்கள் பல் பதியத்துடன் பொருத்தப்படுகிறது.

இம்முறையில் 3 நாட்கள் முதல் ஒரு வாரத்திற்குள் நிரந்தர பல்செட் கட்டிக் கொள்ளலாம். தேவைப்படுவோர் செராமிக் மற்றும் சிர்கோனியா பல்செட் பொருத்திக் கொள்ளலாம்.

**பராமரிக்கும் முறை**

- இரண்டு முறை பல் துலக்குவது
- மவுத் வாஸ் கொண்டு வாயைக் கொப்பளித்துச் சுத்தம் செய்ய வேண்டும்.
- தண்ணீர் ஃப்ளோசர் -ஐ உபயோகிக்கலாம்
- உங்கள் பல் மருத்துவரை வருடத்திற்கு இரண்டு முறை அணுகி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

**செலவு**

பல் பதியத்திற்கான செலவானது பின்வரும் காரணிகளைப் பொறுத்தது:

- தரம் / பிராண்ட்
- பற்களின் வகை - Hybrid, Ceramic, Zirconia
- கூடுதல் நடைமுறைகள் - Bore grafting,
- *Sinus litt*
- கணினி வழிகாட்டப்பட்டதா,இல்லையா - *(Guided Surgery)*

நன்றி: முதமை எனும் பூங்காற்று


# ஊட்டச்சத்து, ஆரோக்கியம் – முருங்கைக்காய்



வைட்டமின் ஏ. பி. சி,பாஸ்பரஸ், இரும்புச்சத்து நிறைந்துள்ளது. பெண்கள் மாதவிலக்கின் போது அதிக உதிரப்போக்கைக் கட்டுப்படுத்தும். ஆண்களின் விந்து உற்பத்தியைப் பெருக்கும். சளியைப் போக்கும். ஊளைச் சதையை நீக்கும். எலும்புக்கு வலிமை சேர்க்கும், பல் ஆட்டத்தை நிறுத்தும், காயங்களைக் குணமாக்கும். சோகையைத் தீர்க்கும், ஈறுக்கு உறுதி அளிக்கும்.

**எப்படி வாங்குவது?**

இளசாக இருக்கிறதா என்று பார்ப்பதற்குக் காயின் ஒரு முனையை ஒரு கையாலும், மறு முனையை மறு கையாலும் பிடித்துக்கொண்டு லேசாக முறுக்கிப் பார்க்க வேண்டும். நன்கு வளைந்தால் இளசு. முறுக்கிக்கொண்டு வளையாமல் வேதாளம் முருங்கை மரம் ஏறிக்கொண்டால் முற்றிய முருங்கை!



# பூமியின் மேற்பரப்பில்

## உருவாகும் மர்மங்கள்...!

பூமியின் மையப்பகுதி சாய்ந்துள்ளதா? இதனால் பூமியின் மேற்பரப்பில் புதிய மர்மங்கள் உருவாகிறது.


நிலநடுக்கங்களால் உருவாகும் நிலத்தடி அதிர்வுகள் என்றும் அழைக்கப்படும் அலைகள், வடக்கு மற்றும் தென் துருவங்களுக்கு இடையே பயணிக்கும் போது மையத்தின் வழியாக வேகமாக நகரும்.

பூமியின் உள்ளேயுள்ள மையப்பகுதி, இரும்பு மற்றும் நிக்கல் ஆகியவற்றால் ஆனது, அறியப்படாத காரணங்களுக்காக தலைகீழாக வளர்ந்து வருகிறது. திட இரும்பு மையமானது ஒரு பக்கத்தை விட வேகமாக வளர்ந்து வருகிறது, இது ஏன் என்று விஞ்ஞானிகளை குழப்பியுள்ளது.

பூமியின் உட்புற மையத்தின் வழியாக செல்லும் நில அதிர்வு அலைகளை விஞ்ஞானிகள் ஆய்வு செய்த பின்னர் புதிய வெளிப்பாடு வந்தது.

நிலநடுக்கங்களால் உருவாகும் நிலத்தடி அதிர்வுகள் என்று அழைக்கப்படும் அலைகள், பூமத்திய ரேகையின் குறுக்கே நகர்வதை விட வடக்கு மற்றும் தென் துருவங்களுக்கு இடையே பயணிக்கும் போது மையத்தின் வழியாக

வேகமாக நகரும். நில அதிர்வு அனிசோட்ரோபி என அழைக்கப்படும் கிடைக்கக்கூடிய தரவு இல்லாததால் இந்த முரண்பாடு இன்னும் விளக்கப்படவில்லை.




இதற்கிடையில், ஆண்டுக்கு சராசரியாக 1 மில்லிமீட்டர் ஆரம் வளரும். ஒரு கோள இயல்பை பராமரிக்க புதிதாக உருவான இரும்பு படிகங்களை மையத்தின் மேற்குப் பகுதிக்கு விநியோகிப்பதன் மூலம் நிலைமையை சமநிலைப்படுத்துவதில் ஈர்ப்பு அதன் பங்கைக் கொண்டுள்ளது.

ஆனால் ஆராய்ச்சியாளர்கள் கணினி உருவகப் படுத்துதலைப் பயன்படுத்தி, பூமியின் உட்புற மையமானது ஒரு தலைகீழான முறையில் வளர்ந்து வருகிறது, புதிய இரும்பு படிகங்கள் மேற்கில் இருப்பதை விட கிழக்குப் பகுதியில் வேகமாக உருவாகின்றன.

“வெளிப்புற மையத்தில் உள்ள திரவ இரும்பின் இயக்கம் உள் மையத்திலிருந்து வெப்பத்தை எடுத்துச் செல்கிறது, இதனால் அது உறைந்து விடும்” என்று ஆய்வின் முதன்மை ஆசிரியர் டேனியல் ஃப்ரோஸ்ட் லைவ் சயின்ஸிடம் கூறினார்.

மேற்கில் உள்ள பிரேசிலை விட இந்தோனேசியாவின் கீழ் வெப்பம் வேகமாக அகற்றப்படுவதாகவும், ஒரு பக்கம் விரைவாக குளிர்ச்சியடைவது இரும்பு படிகங்கள் உருவாவதையும் அந்தப் பக்கத்தின் மையத்தின் வளர்ச்சியையும் துரிதப்படுத்தும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

சமச்சீரற்ற வளர்ச்சி மற்றும் பூமத்திய ரேகையிலிருந்து துருவங்களை நோக்கி நகர்வது, பக்கவாட்டு மற்றும் செங்குத்தாக வலுவான சிதைவை ஏற்படுத்துகிறது.

விஞ்ஞானிகள் இன்னும் இந்த சீரற்ற வளர்ச்சியின் பின்னணியில் உள்ள காரணங்களைத் தேடும் போது, பூமியின் மேண்டில் மற்றும் மேலோடு உள்ளடங்கிய பூமியின் கட்டமைப்பின் மற்ற பகுதிகளைப் பார்க்காமல் அவற்றைக் கணிப்பது கடினம்.

“பூமியில் உள்ள ஒவ்வொரு அடுக்கும் அதற்கு மேலே உள்ளவற்றால் கட்டுப்படுத்தப்படுகிறது, மேலும் அதற்கு கீழே உள்ளதை பாதிக்கிறது.” என்று ஃப்ரோஸ்ட்லை சயின்ஸிடம் கூறினார்.

பூமியினுள்ளே வெளிப்புற மையத்தில் திரவ இரும்பின் இயக்கத்தால் இயக்கப்படும் பூமியின் காந்தப்புலத்தில் இந்த சாய்ந்த மைய வளர்ச்சியின் தாக்கம் குறித்தும் விஞ்ஞானிகள் கவலை கொண்டுள்ளனர்.

இதனால் இதுவரை ஏற்பட்ட பூகம்பங்களை விட இனி வரப்போகும் பூகம்பங்கள் மிகப்பெரிய அளவில் பூமியை வெகுவாக பாதிக்கப்படலாம்.

பூகம்பங்கள் அதிகரிப்பதும் யுக முடிவு நாளின் அடையாளமாகும் என்று நபிகள் நாயகம்(ஸல்) குறிப்பிட்டுள்ளனர்.(நூல்: புகாரி 1036, 7121)

**மூன்று பூகம்பங்கள் :**

யுகமுடிவு நாளின் நெருக்கத்தில் மிகப்பெரிய அளவில் நிலச் சரிவுகளும், பூகம்பங்களும் ஏற்படும். மனிதர்கள் உயிருடன் புதையுண்டு போவர்.

(மதீனாவின்) கிழக்கே ஒரு பூகம்பம், மேற்கே ஒரு பூகம்பம், அரபு தீபகற்பத்தில் ஒரு பூகம்பம் ஆகிய மூன்று பூகம்பங்களை நீங்கள் காண்பது வரை யுகமுடிவு நாள் ஏற்படாது என்பது நபிமொழி. (அறிவிப்பவர்: ஹுதைபா (ரலி), நூல்: முஸ்லிம்)

உலகில் ஆங்காங்கே பூகம்பங்களும் அவ்வப் போது ஏற்பட்டு வருகின்றன என்றாலும் நபி(ஸல்) அவர்கள் குறிப்பிடக்கூடிய இந்த பூகம்பங்கள் மிகவும் பிரமாண்டமானவையாக அமைந்திருக்கும்.

அல்லாஹ் விடுக்கும் எச்சரிக்கை.

(மக்களை)அச்சமூட்டி எச்சரிப்பதற்காவே அன்றி நாம்(இத்தகைய) அத்தாட்சிகளை அனுப்புவதில்லை. (குர்ஆன் 17: 59)

**– ரஹ்மத் ராஜகுமாரன்**



# நூற்றாண்டின் அதிசயம்

# சையத் பெதியுஸ்ஸமான் நூர்ஸி

நூர்சிக்கு 14 வயது. பேசித் (Bayezit) மதரஸாவில் இணைந்தார். விளக்க உரைகளுக்கு விளக்க உரை, அந்த விளக்க உரைகளுக்கு விளக்க உரை, மேலும் பல விளக்கங்கள் என மிக ஆழமான பாட திட்டம் மதரஸாவில் பயிற்று விக்கப்பட்டது. எனவே அதனை முழுமையாக கற்று முடிக்க 15-20 வருடங்கள் ஆகும். முதலில் ஒரு புத்தகம், ஒரு பாடம். அதில் புலமை பெற்ற பின்னரே அடுத்த பாடம். இது தான் அங்கே பயிற்று முறை.

முல்லா ஜாமியின் (புகழ் பெற்ற கவிஞர், அறிஞர் - நூருத்தீன் அப்துர் ரஹ்மான் ஜாமி) படைப்புகளில் இருந்து படிக்க ஆரம்பித்தார் நுர்சி. எல்லா பாட திட்டத்தையும் ஒவ்வொன்றாக படித்து முடித்தார். எல்லா விளக்க உரைகளையும் விவரிப்புகளையும் அவர் படிக்க வில்லை. ஒவ்வொரு பாடத்திலும் சில குறிப்பிட்ட பகுதிகளை மட்டுமே படித்தார்.

அவரின் ஆசிரியர் சேக் முஹம்மத் ஜலாலி இதனால் எரிச்சல் அடைந்தார். ஏன் இவ்வாறு படிக்கின்றாய் என கேட்டார்.

இத்தனை புத்தகங்களையும் படித்து புரிந்து கொள்ள என்னால் முடியவில்லை. ஆனால் இது ஆபரணங்களை, பொக்கிஷங்களை பொதிந்த பேழை.

இதன் சாவி உங்களிடம் உள்ளது. இதில் என்ன இருக்கின்றது என எனக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டுகிறேன். அப்படி தெரிவித்தால், இந்த புத்தகங்கள் எதை பற்றி விவாதிக்கின்றன என்பதை என்னால் புரிந்து கொண்டு எனக்கு எது தேவையான பாடமோ அதை நான் படித்திடுவேன் என்றார் நுர்சி.

மதரஸா கல்வி முறையில் சீர்திருத்தம் செய்திட வேண்டிய அவசியத்தை புரிய வைக்கவும், விளக்க உரைகள், குறிப்புகள், விரிவான விளக்கங்கள் என பலவற்றை இணைத்து நேரத்தை விரயம் செய்வதை தடுத்திட வேண்டும் என்பதை வலியுறுத்தவே நுர்சி அப்படி ஒரு பதிலை தந்தார்.

மூன்றாவது மாத இறுதியில் சேக் முஹம்மத் ஜலாலியிடம் இருந்து டிப்ளமோ பட்டம் பெற்றார். அதன் பின்னரே முல்லா செய்யித் என்று அழைக்கப் பட்டார்.

தன்னுடைய அண்ணன் முல்லா அப்துல்லாஹ்வை காண சிர்வான் வந்தார். அவர்களுக்கு இடையே இப்படி ஒரு உரையாடல் நடந்தது.

முல்லா அப்துல்லாஹ்: நீ இங்கிருந்து சென்ற பின்பு நான் ஷர்ஹ் ஷம்சியை படிக்க ஆரம்பித்து முடித்து விட்டேன். நீ என்ன படித்தாய்?

முல்லா செய்யித்: நான் எண்பது புத்தகங்களை படித்து முடித்து விட்டேன்.

முல்லா அப்துல்லாஹ்: நீ என்ன கூறுகிறாய்?

முல்லா செய்யித்: ஆம், எண்பது புத்தகங் களை படித்து முடித்துள்ளேன், அது தவிர, பாட திட்டத்தில் இல்லாத பல புத்தகங் களையும் படித்துள்ளேன்.

குறுகிய காலத்தில் எப்படி செய்யித் எல்லாவற்றையும் படித்தார்? அப்துல்லாஹ் வால் இதை நம்ப முடியாமல் சோதிக்க நாடினார். நுர்சியின் பதில் அப்துல்லாஹ்வை வியப்பில் ஆழ்த்தியது. அவரை பாராட்டவும் செய்தார்.

சில நாட்கள் சகோதரனிடம் தங்கிவிட்டு சியர்ட் நகரத்திற்கு பயணமானார். அங்கே முல்லா ஃபெதுல்லாஹ் எஃபென்தியின் மதரசாவிற்கு சென்றார். நுர்சி படித்து கற்று கொண்ட புத்தகங்களின் எண்ணிக்கை ஃபெதுல்லாஹ்வையும் வியப்பில் ஆழ்த்தியது. அவரும் கேள்விகளை கேட்டு நுர்சியை சோதித்தார். அதற்கு சரியான பதிலை தந்தார் நுர்சி. எனவே அவரின் ஞாபக திறனை பரிசோதிக்க மகாமத் ஹரிரியா என்ற புத்தகத்தை கொடுத்தார்.

ஒரு பக்கத்தை எடுப்பார். அதனை ஒரே ஒரு முறை படிப்பார். மனனம் செய்வார். பின்பு அதனை ஒப்பிப்பார்.

இந்த அளவுக்கு நினைவாற்றலும் மதிநுட்பமும் இணைந்து ஒரே ஆளிடம் அமையப் பெறுவது அரிது என தனது பூரிப்பை வெளிப்படுத்தினார் அவர்.

சட்ட நெறிகள் குறித்து இமாம் இப்னுல் சுப்கி எழுதிய ஜமவுல் ஜவாமியை ஒரு வாரத்தில் நுர்சி மனனம் செய்ததாக ஃபெதுல்லாஹ் குறிப்பிட்டுள்ளார்.

கற்றலில் சாதனைகள் நிகழ்த்திய இந்த கால கட்டத்தில் தான் நுர்சிக்கு பெதியுஸ்ஸமான் - நூற்றாண்டின் அதிசயம் என்ற பெயர் ஃபெதுல்லாஹ்வால் வழங்கப்பட்டதாக

1946ஆம் ஆண்டு நுர்சி நாடு கடத்தப்பட்டு எமிர்டஹ் நகரத்தில் இருந்து கொண்டு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நுர்சிக்கு பெதியுஸ்ஸமான் என்ற பெயர் வழங்கப்பட்டது சியர்ட் நகரத்தில் பரவ ஆரம்பித்தது. எனவே அங்கே உள்ள உலமாக்கள் ஒன்று சேர்ந்தனர். அவரிடம் விவாதத்திற்கு வருமாறு கேட்டு கொண்டனர். நுர்சியும் அதற்கு சம்மதித்தார். அவர்களின் அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளித்து அவர்களை தோற்கடித்தார்.

இதனை கண்ட மக்கள் நுர்சியை வலி, ஞானி என்றனர். மதரஸா நிறுவுவதே அவருடைய இலட்சியமாக இருந்தது.

வான் நகரத்தில் தங்கியிருந்த போது செய்தி தாள்கள் படிப்பதை வழக்கமாக கொண்டிருந்தார் பெதியுஸ்ஸமான் .

குறிப்பாக, இஸ்லாம் குறித்தும், இஸ்லாமிய உலகில் நடப்பது குறித்தும் இடம் பெற்றிருக்கும் கட்டுரைகளை படிப்பார்.

பிளீட்டன் மக்கள் அவையில் (House of commons) காலனி நாடுகளின் செயலாளரான வில்லியம் கிளாட்ஸ்டோன் ஆற்றிய உரை செய்தி தாள்களில் வந்திருப்பதை பெதியுஸ்ஸமானிடம் தெரிவித்தார் தாஹிர் பாஷா.

“குர்ஆன் முஸ்லிம்களிடத்தில் இருக்கும் வரை நாம் அவர்களை ஆதிக்கம் செலுத்த முடியாது. குர்ஆனை அவர்களிடத்தில் இருந்து பிரிக்க வேண்டும் அல்லது முஸ்லிம்கள் குர்ஆன் மீது கொண்டிருக்கும் நேசத்தை இழக்க செய்திட வேண்டும்.” என்பதே கிளாட்ஸ்டோனின் கொக்கரிப்பு.

குர்ஆனின் மீதுள்ள ஐரோப்பாவின் கொடிய எண்ணங்களை தாஹிர் பாஷாவிடம் இருந்து தெரிந்து கொண்டார் பெதியுசமான்.

இதன் பின், அவரின் சிந்தனைகளும் செயல்களும் மாறியது. குர்ஆன் அணைக்க முடியாத, என்றைக்கும் நிலைத்திருக்கும் ஒளி விளக்கு என்பதை இந்த உலகத்திற்கு நான் நிரூபணம் செய்வேன் என்றார். இதனை இரண்டு முயற்சிகளின் வழி செயல்படுத்த நாடினார். ஒன்று, இஸ்தான்புல் நகரில் மதரசத்துஸ் ஜெஹ்ராவை நிறுவுதல். இரண்டு, ரிசாலே நூர் (குர்ஆன் விளக்க உரைகளும், அவரின் வாழ்க்கையில் நடந்த சம்பவங் களையும் உள்ளடக்கிய புத்தகம்) .

குர்திஸ்தானை உதுமானிய கிலாபத்தில் இருந்து பிரித்து தனி குர்திஸ்தானாக உருவாக்க பிரிட்டன் முயற்சி செய்தது. அதன் மூலம் எண்ணெய் வளங்களை அபகரிக்க நினைத்தனர். அதற்காக அங்கே வாழ்ந்த மக்களை உதுமானிய கிலாபத்திற்கு எதிராக தூண்டி விட்டனர். உதுமானிய கிலாபத்தின் ஒற்றுமையை சீர்குலைக்கும் இந்த நடவடிக் கைக்கு எதிராக நின்றார் பெதியுஸ்ஸமான்.

முஸ்தபா கமால் பாஷாவுடன் இணைந்து செயல்பட மறுத்தார் அவர். பின்வரும் குறிப்பில் இருந்து கமால் பாஷாவின் நோக்கத்தை புரிந்து கொள்ளலாம். லுசான் அமைதி மாநாடு (The Lausanne Peace Conference) *20* நவம்பர் *1922*இல் ஆரம்பித்து *1923* பிப்ரவரி வரை நடந்தது. நேச நாடுகள், துருக்கி, உதுமானிய கிலாபத் சார்பாக (வீழ்ந்து விட்டு போதிலும்) பிரதிநிதிகள் அதில் பங்கேற்றனர். துருக்கி சார்பாக இஸ்மத் இனனு (Ismet Inonu) பங்கேற்று நடந்த விவரங்களை கமால் பாஷாவிடம் தெரிவித்தார். பிரிட்டிஷ் தலைமை பிரதிநிதியாக கலந்து கொண்ட லார்ட் கர்சனின் திட்டத்தை, அவருடைய வார்த்தைகளை பத்திரிகைகள் இப்படி சுருக்கமாக வெளியிட்டன.

“துருக்கி அது கைகோர்த்து இருக்கும் இஸ்லாத்துடனும், அதன் பிரதிநிதியாக செயல்படும் பாத்திரத்தையும் புறந்தள்ளி விடுமேயானால் , அது உண்மையில் நம்மோடு இணைந்து விடும். கிறிஸ்தவ உலகத்தில் இருந்து மரியாதையும், நன்றியுணர்வையும் பெற்று கொள்ளும். அதன் பின்பு அவர்கள் விரும்பியதை நாம் கொடுக்கலாம்.”

If Turkey dissolves with its own hand its ties with Islam and its representative role and casts them aside, it will become truly united with us and gain the respect and gratitude of the Christian world, and we shall give it what it wants. "The truth of matter is that the Turks will never be able to regain their former might and power, for we have killed them from the inside..

உண்மை என்னவென்றால் முந்தைய பலத்தையும் அதிகாரத்தையும் துருக்கியால் மீண்டும் பெற்றிடவே முடியாது. ஏனெனில், நாம் அவர்களை உட்பக்கத்தில் (மார்பிடத்தில்) இருந்து கொன்று வந்துள்ளோம்.

According to the article, the original architect of the plan to leave 'Turkey free physically but destroy it from the inside, do away with the Qur'an and its ordinances and make the 'Turkish people lose their religion, kill its spirit by means of some of its own people, was the zionist, Haim Naum. He had come to Ankara and met with Mustafa Kemal, as well as meeting with Lord Curzon.

பத்திரிக்கையில் வந்த கட்டுரையின் படி,



துருக்கியை விட்டு படையை அகற்றுவது, ஆனால் அதனை உட்புறத்தில் இருந்து அழிப்பது, குர்ஆனையும் அதன் கட்டளை களையும் விட்டு அப்பாற்படுத்துவது, துருக்கி மக்கள் அவர்களின் மத நம்பிக்கையில் இருந்து விலகுவது, சொந்த நாட்டின் சில மக்களை கொண்டே அதன் வலிமையை இழக்க செய்வது. இந்த அனைத்து திட்டத்திற்கும் காரண கர்த்தா ஹயிம் நவும் (Haim Naum) என்ற ஜியோனிஸ்ட். இவர் முஸ்தபா கமால் பாஷாவையும் லார்ட் கர்சனையும் சந்திப்பதற்கு அன்காரா (Ankara) வந்திருந்தார்

முஸ்தபா கமால் பாஷாவின் நோக்கத்தை பெதியுஸ்ஸமான் புரிந்து கொண்டார். அவருடன் இணைந்து செயல்பட மறுத்தார். பெதியுஸ்ஸமானை விஷம் கொடுத்து கொல்ல பலமுறை முயற்சி நடந்துள்ளது. எந்த முயற்சியும் வெற்றி பெறவில்லை. நுர்சியின் ஈமானிய உறுதியை பின்வரும் நிகழ்வில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

போர் அவரின் வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்தது. போர் வீரர்களை கொண்ட ஓர் அணியை உருவாக்கவும் அதனை வழிநடத்தவும் பெதியுஸ்ஸமானை நியமித்தார் அன்வர் பாஷா. **1916** மார்ச்சில் ரஷ்யாவிடம் வீழ்ந்தது பிட்லிஸ் (துருக்கியின் ஒரு நகரம்). பெதியுஸ்ஸமான் கைது செய்யப்பட்டார். அடுத்த இரண்டு வருடங்கள் ரஷ்யா கோஸ்ட்ரோமா நகரின் பல்வேறு சிறை முகாம்களில் அவர் நாட்களை செலவிட நேர்ந்தது.

ஒரு முறை கவ்காஸ் அணியின் படை தளபதியாக செயல்பட்ட நிகோலா நிகோலவிச் (Nicola Nicolayavich) சிறை முகாமை சோதனையிட வந்திருந்தார்.

அவர் கடந்து சென்ற போது பெதியுஸ்ஸமான் அமர்ந்திருப்பதை கண்டார். இதனை கண்ட தளபதி இரண்டாம் முறையும் பெதியுஸ்ஸமானை கடந்து சென்றார். அப்பொழுதும் அவர் எழுந்து நிற்கவில்லை. எனவே மூன்றாம் முறையாக பெதியுஸ்ஸமான் முன் வந்து நின்ற அவர், மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் கேள்வி கேட்டார்.

நான் யார் என்பது உனக்கு தெரியாதா?

ஆம், தெரியும் - என பெதியுஸ்ஸமான் பதிலளித்தார்.

பின் என்னை ஏன் அவமதிப்பு செய்கிறாய்?

மன்னிக்கவும், நான் யாரையும் அவமதிக்க வில்லை. என்னுடைய நம்பிக்கை எதை செய்யுமாறு என்னை பணித்ததோ அதையே நான் செய்தேன்.

உன்னுடைய நம்பிக்கை எதை செய்யுமாறு பணித்துள்ளது?

நான் ஒரு முஸ்லிம் அறிஞர். என் இதயத்தில் சமய நம்பிக்கை உள்ளது. அந்த நம்பிக்கை உடையவர் அது இல்லாதோரை விட சிறந்தவர். நான் எழுந்து நின்றால் அது என்னுடைய நம்பிக்கைக்கு அவமதிப்பு செய்தது போன்று ஆகிவிடும். அதனால் அதை நான் செய்யவில்லை.

எந்த அடிப்படையில் என்னை நம்பிக்கை அற்றவன் என நீ கூறுகிறாய்? இதன் மூலம் என்னையும் அவமதிப்பு செய்து விட்டாய், நான் உறுப்பினராக பணி செய்யும் இராணு வத்தையும் அவமதிப்பு செய்து விட்டாய்.



மேலும், இந்த நாட்டையும் இந்த சார் (Czar) அரசையும் அவமதித்து விட்டாய். இராணுவ நீதிமன்றத்தின் முன் நீ நிறுத்தப்பட்டு கேள்வி கேட்கப்படுவாய் என்றார்.

தளபதியின் ஆணைக்கிணங்க, நீதிமன்றம் கூடியது. துருக்கி, ஜெர்மன், ஆஸ்திரியா அதிகாரிகள் குழுமினர். அவர்கள் தளபதியிடம் மன்னிப்பு கேட்குமாறு பெதியுஸ்ஸமானிடம் கூறினர். அதற்கு அவர்,

“நான் மறுமைக்கு பயணம் செய்ய ஆவலாக உள்ளேன். இறைத்தூதரின் முன்னிலையில் நுழைய விரும்புகிறேன். அதற்கான நுழைவு சீட்டு எனக்கு தேவைப்படுகிறது. அதனால் என்னுடைய நம்பிக்கைக்கு மாறாக என்னால் செயல்பட முடியாது.”

அதன் பின்னர், சார் அரசையும் இராணுவத்தையும் அவமதித்த குற்றத்திற்காக அவருக்கு மரண தண்டனை நிறைவேற்ற தீர்ப்பு வந்தது.

தண்டனையை நிறைவேற்ற அதிகாரிகள் வந்தனர். அவர்களிடம் பதினைந்து நிமிடம் தாருங்கள் என்னுடைய கடமையை நிறைவேற்ற வேண்டும் என்றார்.

ஒளு (அங்க சுத்தம்) செய்து இரண்டு ரக்ஆத் தொழுவதற்கே அந்த பதினைந்து நிமிடம். பெதியுஸ்ஸமான் தொழுகையை நிறைவேற்றும் வேளையில் தளபதி அங்கே வந்து நடந்ததை பார்த்து கொண்டிருந்தார்.

தளபதி தான் செய்வது தவறென உணர்ந்தார். தொழுகையை முடித்த பெதியுஸ்ஸமானிடம்

“என்னை மன்னித்து விடுங்கள். என்னை அவமதிக்க வேண்டும் என்ற நோக்கில் தான் அவ்வாறு நடந்து கொண்டீர்கள் என நினைத்து கொண்டேன். அதனாலேயே நான் எதிர்வினை ஆற்றினேன். ஆனால் உங்களுடைய நம்பிக்கையின் அடிப்படையில் நீங்கள் நடந்து கொண்டீர்கள் என உணர்ந்து கொண்டேன். உங்கள் தண்டனை நீக்கப்படுகிறது. உங்கள் நம்பிக்கையில் நீங்கள் கொண்டிருந்த உறுதியின்படியே நடந்து உள்ளீர்கள். மீண்டும் கூறுகிறேன் என்னை மன்னித்து விடுங்கள்” என்று தளபதி கூறினார்.

அவரின் துணிவு , நினைவாற்றல் ,நெஞ்சுரம் நமக்கு வியப்பை ஏற்படுத்தும். அவரின் கூற்றுகள் வருங்காலத்தில் நிதர்சனமாக நடந்தேறின. அறிந்து கொள்வதற்கும் ஆச்சர்யத்தில் ஆழ்த்துவதற்கும் படிப்பினை பெறுவதற்கும் அவருடைய வாழ்க்கையில் பல சம்பவங்கள் உள்ளன.

இஸ்லாமிய தலைமையை உலகத்தில் அகற்றிடும் சம்பவங்கள் நடந்த நேரத்தில், முஸ்லிம்களின் தார்மீக வலிமையை குன்ற செய்திடும் சம்பவங்கள் நடந்த நேரத்தில் தான் இமாம் ஹசனுல் பன்னா, செய்யித் நுர்சி போன்றோர் ஈமானிய உறுதியுடன் செயல் பட்டுள்ளனர். சமகால உலகில் நாம் துவண்டு போக எந்த காரணமும் தேவை இல்லை என அவர்கள் நம்மை உணர வைக்கின்றனர்.

[பெதியுஸ்ஸமான் நுர்சி *1877-1960*]

Source: BEDIUZZAMAN SAID NURSI By **S**ükran Vahide

**-அபூஹாசின்**

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002